REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK


2020 ஒக்டோபர் 7 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 88 இல. 238 | October 07,Wednesday, 2020 | 28பக்கங்கள் | 30/-


## உலகில் கொரோனா தொற்றால் பத்து இலட்சத்து 45ஆயிரம் பேர் பலி

**66,785 பேர் கவலைக்கிடம்**



உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்தை தாண்டியுள்ளது.
05



தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடக, தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை பராமரிப்பு மற்றும் சிறு வர்த்தக பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சராகவும் நேற்று (06) ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட போது...

# PCR பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் அடுத்தகட்ட நடவடிக்கை

## A/L , புலமைப்பரிசில் பரீட்சைகள் தொடர்பில் இன்று அறிவிப்பு



**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையிலிருந்து பரவியுள்ள கொவிட் - 19 வைரஸ் தொடர்பான நிலைமைகளை அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதுடன், எதிர்வரும் 48 மணி நேரத்துள் வெளியாகவுள்ள பி.சீ.ஆர். பரிசோதனைகளின் பிரகாரம் அடுத்தகட்ட தீர்மானங்களை அரசாங்கம் எடுக்கவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடக அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். அத்துடன், உயர்தரப் பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைத் தொடர்பிலும் வெளியாகவுள்ள பி.சீ.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில்தான் அரசாங்கம் தீர்மானமெடுக்கும் எனவும் அவர் கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், எதிர்வரும் 48 மணி நேரத்தில் கிடைக்கவுள்ள பி.சி.ஆர் பிரிசோதனைக்கமைவாக அடுத்தகட்ட தீர்மானங்களை அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளது.
05

**கொவிட் 19**

# இதுவரை 708 பேருக்கு தொற்று உறுதி

## நான்கு பிரதேசங்களில் பொலிஸ் ஊரடங்கு அமுல்



**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் ஏற்பட்ட கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக இதுவரை 708 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், நேற்றைய தினம் மாத்திரம் 321 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

வெயங்கொட பொலிஸ் பிரிவு, மினுவங்கொடை பொலிஸ் பிரிவு, திவுலப்பிட்டிய பொலிஸ் பிரிவு மற்றும் கம்பஹா பொலிஸ் பிரிவுகளுக்கு மாத்திரமே மறுஅறிவித்தல்வரை
05

## நாடு முழுவதும் விழாக்கள், ஒன்று கூடல்களுக்கு தடை

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் ஏற்பட்ட கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நிலையை கருத்திற் கொண்டு பொதுமக்கள் ஒன்று கூடல்களை தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
05

# சுகாதார வழிகாட்டல்களை எம்.பிமாரும் பின்பற்ற வேண்டும்

## சபாநாயகர் மஹிந்த யாப்பா அறிவுறுத்து



நாட்டில் மீண்டும் அதிகரித்துள்ள கொவிட் 19 தொற்றுநோய் சூழலுக்கு மத்தியில் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் சுகாதாரப் பாதுகாப்பு விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வலியுறுத்தினார். பாராளுமன்ற அமர்வுகள் நேற்று
05

# மைத்திரி என்னை பாதுகாப்பு சபை கூட்டத்திற்கு அழைக்கவில்லை

## ஆணைக்குழுவில் ரணில் தெரிவிப்பு



2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தை தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாப்புச் சபை கூட்டத்திற்கு
05

**கடவுச்சீட்டு அலுவலகம்**

# பொது மக்கள் சேவை 03 தினங்கள் இடைநிறுத்தம்



கொவிட் 19 வைரஸ் தொற்று நோய் பரவுவதைத் தடுக்கும்நடவடிக்கையாக, இன்று 07, 08, 09 ஆம் திகதிகளில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கும், பிராந்திய அலுவலகங்களுக்கும்
05

# கல்முனையில் 32 பேர் சுய தனிமைப்படுத்தல்

## டொக்டர் சுகுணன் தெரிவிப்பு



**காரைதீவு குறூப் நிருபர்**

கல்முனையில் 32 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். மேலும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பொது மக்கள் முகக்கவசம், சமூக இடைவெளி போன்ற சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கல்முனை
05

# சாட்சியங்கள் கிடைப்பின் ரிஷாத்தின் சகோதரர் மீண்டும் கைது செய்யப்படுவார்

## ஏனையோருக்கும் அதேநிலை என்கிறார் அமைச்சர் சமல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**
**ஷம்ஸ் பாஹிம்**



விடுதலை செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் சகோதரருக்கு எதிரான சாட்சியங்கள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அவர் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாமென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் சம்பவத்துடன் தொடர்புபட்ட ஏனையவர்களும் எதிர்காலத்தில் கைது செய்யப்படுவரென்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார். அவரது விடுதலைக்கும் அரசாங்கத்துக்கும்
05

# ஆட்பதிவு திணைக்களம் 3 தினங்கள் மூடப்படும்

## 7,8,9 நாட்களில் சேவைகள் நிறுத்தம்



நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சம் காரணமாக ஆட்பதிவு திணைக்களத்தின் சேவைகள் எதிர்வரும் 03 நாட்களுக்கு நிறுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஆட்பதிவு திணைக்களத்தின் தலைமையகம் மற்றும் அலுவலகத்தில் 07 ஆம், 08 ஆம், 09 ஆம் திகதிகளில் பொது மக்கள் சேவைகள் நடைபெற மாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.



தலைவரே, அஞ்சு வருஷமா அமைச்சராக இருந்தபோது பேசாத பேச்செல்லாம் பேசி மின்னலா முழங்குறீங்க.....?
தம்பி, அமைச்சராக இருக்கும் போது கவனமா பேசணும்.. இப்ப நாம எதிர்க்கட்சி... விரும்பினத பேசலாம், கேள்வி கேட்க யாருமில்ல, அதுதான் பீரங்கியா முழங்கித் தள்ளுறேன்...!!

# குடாநாடு எந்நேரமும் முடக்கப்படலாம்

## யாழ்ப்பாண அரச அதிபர் மகேசன்

**சுண்டுக்குளி நிருபர்**



யாழ்ப்பாண மாவட்டத்தினை எந்நேரத்திலும் முடக்க வேண்டிய தேவை ஏற்படலாம். ஏனெனில் தற்போதைய நிலைமையின் சிக்கலான அபாயகரமான சூழலை மாவட்டம் எதிர்நோக்கியிருப்பதாக
05

# காளைகளின் பெருக்கம் அரசின் தீர்வுதான் என்ன?

## செல்வம் எம்.பி சபையில் கேள்வி

**லோரன்ஸ் செல்வநாயகம் ,**
**ஷம்ஸ் பாஹிம்**



மாடறுப்பு தடையுடன் ஏற்படும் காளைகளின் பெருக்கத்திற்கு எவ்வாறு தீர்வு காணப்படுதென அரசாங்கம் கவனம் செலுத்தி நல்ல முடிவொன்றை எடுக்க வேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். நிதி (திருத்த) சட்டமூலம்
05

# வயல் நிலங்களை நிரப்ப அரசு ஒருபோதும் இடமளிக்காது

## அமைச்சர் மஹிந்தானந்த திட்டவட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**



வயல் நிலங்களை நிரப்பி வேறு செயற்பாடுகளுக்காக உபயோகிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் ஒருபோதும் அனுமதி வழங்காது. அரசாங்கம் அதனை கொள்கை ரீதியாக முன்னெடுத்து வருவதாக விவசாய அபிவிருத்தி அமைச்சர்
05


அனைவரும் இணைந்து கொழும்பு நகரத்தை சுத்தமாக வைத்திருப்போம்!


உங்கள் கழிவுகளை பின்வரும் முறைமைக்கு அமைவாக பிரிந்திடுங்கள்.



**உக்கும் கழிவுகள்**

உங்கள் இல்லத்தில் சேரும் கழிவுகளில் நீங்கள் உரம் தயாரிக்கவில்லை என்றால் தயவுசெய்து அதை CMC யிடம் கையளிக்கவும்.

- சமையலறை காய்கறி கழிவுகள் மற்றும் பழக்கழிவுகள், எஞ்சிய கழிவுகள், தேங்காய் சக்கைகள், பயன்படுத்திய தேயிலை கழிவுகள், பைகள், முட்டை ஓடுகள், மாமிச கழிவுகள்.
- வீட்டுத்தோட்டத்தில் சேரும் குப்பைகள் மர இலைகள், பூக்கள்
- துண்டாக்கப்பட்ட இளநீர் மட்டைகள்



**மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்**

பின்வரும் பொருட்கள் சுத்தமாக இருக்கவேண்டும்.

- கண்ணாடிகள்
- கார்ட்போட் / கடதாசி
- சுத்தமான பொலித்தீன் / பிளாஸ்டிக்
- உலோகங்கள்
- சுத்தமான தேங்காய் சிரட்டைகள்
- சுத்தமான டின்கள்
- சுத்தமான யோகட் மற்றும் பிளாஸ்டிக் கோப்பைகள்
- மறுசுழற்சி செய்யக்கூடிய சமையலறை உபகரணங்கள்



**மறுசுழற்சி செய்யமுடியாத கழிவுகள்**

- மண்ணான பொலித்தீன் / பிளாஸ்டிக்
- சுகாதார நப்கின்கள்
- அழுக்கான யோகட் கோப்பைகள்
- பால் பேக்கட்டுகள்
- பயன்படுத்திய சஷே பேக்கட்டுகள் (ஷம்பூ, சோஸ், மைலோ மற்றும் பல)
- தலைமுடி
- ஷேவர் மற்றும் பிளேடுகள்
- சுத்தமற்ற டின்கள்
- செரமிக் பாத்திரங்கள்
- இறப்பர்
- மண் பாத்திரங்கள்
- மருந்துப் பொருட்கள்



திண்மக்கழிவு முகாமைத்துப் பிரிவு
கொழும்பு மாநகர சபை
வெப்: www.colombo.mc.gov.lk
தொ.பே: 0112 364 473

மாவட்டம்
D5

141, கிருல வீதி, கொழும்பு 05
ஈ-மெ: info@cleantech.lk
தொ.பே: 0112 368 768

cleantech because we care

# சர்வதேச செய்திகள்

## உலகில் பத்தில் ஒருவருக்கு கொரோனா



உலகில் 10இல் ஒருவருக்கு கொவிட்–19 தொற்று பரவி இருக்கக் கூடும் என்று உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டின்படி உலகின் மிகப் பெரும்பான்மையான மக்கள் அச்சுறுத்தலில் இருப்பாத உலக சுகாதார அமைப்பு தலைவர்களின் சிறப்புக் கூட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

உலகில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானதாக உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 35 மில்லியனாக இருந்தபோதும், இதன் உண்மையான எண்ணிக்கை 800 மில்லியனை நெருங்குவதாக உலக சுகாதார அமைப்பு மதிப்பிட்டுள்ளது.


நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்ட எண்ணிக்கையை விடவும் உண்மையான எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும் என்று நிபுணர்கள் நீண்ட காலமாக கூறி வருகின்றனர்.

நோய்த் தொற்றை சர்வதேச அளவில் கையாள்வது குறித்து சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் உள்ள உலக சுகாதார அமைப்பின் தலைமையகத்திலேயே இந்தக் கூட்டம் கடந்த திங்களன்று இடம்பெற்றது.

இந்த நோய்த் தொற்று ஏற்பட்டு பத்து மாதங்களை தொட்டிருந்தபோதும் அது முடிவுக்கு வருவதற்கான சமிக்ஞைகள் குறைவாகவே காணப்படுகின்றன. கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதை அடுத்து பல நாடுகளிலும் இரண்டாவது அலை தாக்கம் ஏற்பட்டுள்ளதோடு அது சில நாடுகளில் முன்னரை விடவும் தீவிரம் அடைந்துள்ளது.

உலக மக்கள் தொகையில் 10 வீதத்தினர் நோய்த் தொற்றுக்கு உள்ளாகி இருப்பதாய் மதிப்பிடப்படுகிறது என்று உலக சுகாதார அமைப்பின் அவசரகாலத் திட்டங்களுக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் மைக் ரியான் தெரிவித்தார்.

## வெள்ளை மாளிகைக்கு திரும்பிய டிரம்ப் கொரோனா தொற்று பற்றி குறைமதிப்பீடு



கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மூன்று நாள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நிலையில் வெள்ளை மாளிகைக்கு திரும்பியுள்ளார்.

தொடர்ந்து நோய்த் தொற்று இருக்கும் நிலையில் அவர் வெள்ளை மாளிகை மாடி முகப்பில் தோன்றி புகைப்படத்திற்காக தமது முகக்கவசத்தையும் அகற்றினார்.

மருத்துவமனையில் இருந்து வெளியேறும் அளவுக்கு டிரம்ப் உடல்நிலை தேறிவிட்டதாகவும், கடந்த 72 மணிநேரமாக அவருக்கு மூச்சித்திணறல், காய்ச்சல் எதுவும் இல்லை எனவும் வெள்ளை மாளிகை தலைமை மருத்துவர் தெரிவித்துள்ளார்.

எனினும் டிரம்ப் மீது தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்படுவதாக குறிப்பிட்ட அவரது மருத்துவர், அவர் இன்னும் முழுமையாக ஆபத்து நிலையில் இருந்து விலகவில்லை என்று தெரிவித்தார்.

அண்மைய தினங்களில் டிரம்பின் பணிக் குழுவைச் சேர்ந்த பலருக்கும் கொவிட்–19 தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது.

டிரம்பின் உடல் நிலை குறித்து கடந்த வார இறுதியில் முரண்பாடான தகவல் வெளியான சூழலில் அவரது நோய்த் தீவிரத்தன்மை குறித்து இன்னும் கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது. மேலும், டிரம்பை தொடர்ந்து வெள்ளை மாளிகையில் பணிபுரியும் எத்தனை பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்ற கேள்விக்கும் இதுவரை பதிலில்லை.

உலகில் கொரோனா வைரஸினால் மோசமாக பாதிக்கப்பட்ட நாடாக இருக்கும் அமெரிக்காவில் 7.4 மில்லியன் நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு 210,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

எதிர்வரும் நவம்பர் 03 ஆம் திகதி தனது இரண்டாவது தவணைக்காக அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடனை எதிர்த்து போட்டியிடும் நிலையிலேயே டிரம்ப்புக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் வொசிங்டன் டி.சி புறநகர் பகுதியில் இருக்கும் இராணுவ மருத்துவமனையில் இருந்து கடந்த திங்கட்கிழமை மாலை வெளியேறிய டிரம்ப் ஹெலிகொப்டரில் சிறிது தூரம் பயணித்து வெள்ளை மாளிகையை வந்தடைந்தார்.

அங்கு அவர் தனது முகக்கவசத்தை அகற்றி இராணுவ பாணியில் வணக்கம் தெரிவித்தார்.

தொடர்ந்து பிரசார பாணியில் தாம் திரும்பி வரும் வீடியோ ஒன்றை அவர் ட்விட்டரில் பதிவிட்டார்.

வீடியோ செய்தி ஒன்றையும் வெளியிட்ட அவர், அமெரிக்க மக்கள் பணிக்கு திரும்பும்படி அழைப்பு விடுத்தார்.

“கொவிட்–19 வைரஸ் தொற்றுக்கு அஞ்சாதீர்கள். அது உங்கள் வாழ்க்கையை ஆட்கொள்ளவிடாதீர்கள். எங்களது நிர்வாகத்தில் நல்ல மருந்துகளைத் தயாரித்துள்ளோம்” என்று அவர் குறிப்பிட்டார்.

## டிரம்பின் மரணத்தை வேண்டிய பதிவுகளை நீக்கியது ட்விட்டர்




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மரணமடைய வேண்டும் என்று கூறும் பதிவுகளை ட்விட்டர் நீக்கியதை அடுத்து புதிய சர்ச்சை எழுந்துள்ளது.

அந்த விதிமுறையை ட்விட்டர் அனைவருக்கும் பின்பற்ற வேண்டும் என்று பலரும் வலியுறுத்தினர். கொவிட்–19 நோய்த்தொற்றால் டிரம்ப் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதை அடுத்து, புண்படுத்தக்கூடிய பதிவுகள் குறித்து ட்விட்டர் கருத்துரைத்தது.

ஒருவர் மரணமடைய வேண்டும் என்றோ, கடுமையாகக் காயமடைய வேண்டும் என்றோ, மரணம் விளைவிக்கக்கூடிய நோயால் பாதிக்கப்பட வேண்டும் என்றோ பதிவிடுவது தனது கொள்கைகளுக்குப் புறம்பானது என்பதால் அத்தகைய பதிவுகள் நீக்கப்பட்டும் என்று ட்விட்டர் தெரிவித்தது.

யாருக்கு எதிராகவும் அத்தகைய கருத்துகள் தெரிவிப்பதற்கு ட்விட்டரில் அனுமதி இல்லை என்று அது குறிப்பிட்டது.

## வெனிசுவேலாவில் நாணய தாள்களுக்கு பற்றாக்குறை



வெனிசுவேலாவில் உயர் பணவீக்கம் நாட்டில் பணப்பற்றாக்குறையை ஏற்படுத்தி இருப்பதால் பெரிய தொகை கொண்ட நாணயத் தாள்களை அச்சிட காகிதங்களை அந்நாடு இறக்குமதி செய்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாலி அச்சு நிறுவனம் ஒன்றில் இருந்த வெனிசுவேலா இந்த ஆண்டில் சுமார் 71 தொன் காகிதங்களை இறக்குமதி செய்துள்ளது. இதன்மூலம் அந்நாடு 100,000 பொலிவர்கள் பெறுமதியான நாணயத் தாள்களை அச்சிடவுள்ளது.

இது வெனிசுவேலாவின் அதிக பெறுமதியான நாணயத்தாளாக அமையவுள்ளது. எனினும் இதன் மதிப்பு வெறுமனே 0.23 டொலர்கள் மாத்திரம் என்பது குறிப்பிடத்தக்கது. வெனிசுவேலாவில் கடந்த ஆண்டின் பணவீக்கம் 2,400 வீதம் வரை உச்சம் கண்டு அந்நாட்டின் நாணய மதிப்பு வரலாறு காணாத அளவில் வீழ்ச்சி கண்டது. இதனால் சாதாரண மளிகைச் சாமான்கள் வாங்குவதற்குக் கூட பை நிறைய நாணயத் தாள்களை எடுத்துச் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது.

எகிப்து, சூடானுடன் முறுகல்

## அணைக்கு மேலால் விமானம் பறக்க எத்தியோப்பியா தடை



நைல் நதியில் கட்டப்பட்டிருக்கும் சர்ச்சைக்குரிய பாரிய அணைக்கு மேலால் விமானங்கள் பறப்பதற்கு எத்தியோப்பியா தடை விதித்துள்ளது.

4.8 பில்லியன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த அணை நாட்டின் பொருளாதாரத்திற்கு தீர்க்கமானதாக எத்தியோப்பியா கருதுகிறது.

இந்த அணை தொடர்பில் எகிப்து மற்றும் சூடான் அதிருப்தியில் உள்ளன. இதனால் தமது நாட்டின் நைல் நதி நீரோட்டத்தில் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று இந்த நாடுகள் கவலை அடைந்துள்ளன.

இந்நிலையில் இந்த அணையை பாதுகாக்க தயாராக இருப்பதாக எத்தியோப்பிய விமானப்படை ஒரு வாரத்திற்கு முன் எச்சரிக்கை விடுத்திருந்தது.

“அணையை பாதுகாப்பதற்காக அனைத்து விமானங்களுக்கும் தடை விதிக்கப்படுகின்றன” என்று எத்தியோப்பிய சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் வெசன்யெலே ஹனெக்னோ கடந்த திங்கட்கிழமை ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இந்த அணை தொடர்பில் எகிப்து மற்றும் சூடானுடன் இணக்கம் ஒன்றுக்கு வராத நிலையிலேயே எத்தியோப்பியா கடந்த ஜூலையில் அணையில் நீர் நிரப்பியது என்பது குறிப்பிடத்தக்கது.

## கருந்துளை கண்டுபிடிப்புகளுக்காக மூவருக்கு நோபல் பரிசு அறிவிப்பு



கருந்துளைகள் பற்றிய புரிதலுக்கான ஆராய்ச்சியில் ஈடுபட்ட மூன்று விஞ்ஞானிகளுக்கு இந்த ஆண்டின் பௌதீகவியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ரொஜர் பென்ரோஸ், ரெயின்ஹார்ட் கென்சல் மற்றும் அட்ரியா கேஸ் ஆகியோர் இந்த ஆண்டின் வெற்றியாளர்கள் என்று ஸ்டொக்ஹோமில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் நோபல் பரிசுக் குழு குறிப்பிட்டது.

இந்த வெற்றியாளர்கள் 1.1 மில்லியன் டொலர் பரிசுத் தொகையை பகிர்ந்துகொள்ளவுள்ளனர்.

சுவீடிஷ் தொழிலதிபரும் இரசாயனவியலாளருமான அல்பிரேட் நோபல் உயிரிழப்பதற்கு ஓர் ஆண்டுக்கு முன் 1895 ஆம் ஆண்டு இந்த பரிசு அறிமுகப்படுத்தப்பட்டது.

பிரபஞ்சத்தில் மிக அற்புதமான பொருள் ஒன்றை கொண்டாடுவதாக இந்த ஆண்டு விருது அமைகிறது என்று பௌதீகவியல் பரிசுக் குழுவின் தலைவர் டேவிட் ஹவிலாண்ட் தெரிவித்தார்.

அல்பர்ட் ஐன்ஸ்டைனின் பொதுச் சார்புக் கோட்பாட்டின் தவிர்க்க முடியாத விளைவுகளாக கருந்துளைகள் இருப்பது என்பதை பிரிட்டனில் பிறந்த பௌதீகவியலாளர் ரொஜர் பென்ரோஸ் விளக்கினார்.

எமது பால்வெளி மண்டலமான பால் வீதியின் மையப்பகுதியில் இரட்சத கருந்துளை ஒன்று இருப்பதற்கான மிக உறுதியான சான்றுகளை ரெயின்ஹார்ட் கென்சல் மற்றும் அட்ரியா கேஸ் வழங்கினர்.

இதில் பௌதீகவியலுக்கான நோபல் பரிசை வெல்லும் நான்காவது பெண்ணாக அட்ரியா கேஸ் பதிவாகியுள்ளார். இதற்கு முன் 1903 இல் மேரி கியுரி, 1963இல் கொப்பர்ட் மெயர் மற்றும் 2018இல் டொன்னா ஸ்ட்ரிக்லான்ட் ஆகியோர் இந்த விருதை வென்றிருத்தனர்.

கருந்துளை என்பது அதன் எல்லைக்குட் செல்லும், ஒளி உட்பட்ட எதுவுமே வெளியேற முடியாத அளவு வலுவான ஈர்ப்புச் சத்தியைக் கொண்டுள்ள, அண்டவெளியின் ஒரு பகுதியாகும்.

## மாலைதீவு முன்னாள் துணை ஜனாதிபதிக்கு 20 ஆண்டுகள் சிறை



ஊழல், பண மோசடி மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்ட மாலைதீவு முன்னாள் துணை ஜனாதிபதி அஹமது அதீப்புக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீனுக்கு நெருக்கமானவராக இருந்த அதீப், அவரை படுகொலை செய்ய முயன்றதாக 2015 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் மாலைதீவு குற்றவியல் நீதிமன்றம் கடந்த திங்களன்று அளித்த தீர்ப்பில் அதீப்புக்கு இரண்டு மில்லியன் ரூபியா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

## ஆர்ப்பாட்டத்தை அடுத்து கிரிகிஸ்தான் பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் ரத்து



பாரிய ஆர்ப்பாட்டங்களை அடுத்து கிரிகிஸ்தான் தேர்தல் முடிவை அந்நாட்டு தேர்தல் நிர்வாகம் ரத்துச் செய்துள்ளது.

புதிய தேர்தலை நடத்தக் கோரி ஆர்ப்பாட்டக்காரர்கள் பாராளுமன்றத்திற்குள் ஊடுருவி பொலிஸாருடன் மோதலில் ஈடுப்பட்டனர். இந்த பதற்றத்தால் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்திருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட அரசியல் சக்திகள் சட்ட விரோதமான முறையில் அதிகாரத்தை கைப்பற்ற முயல்வதாக ஜனாதிபதி சூரொன்பாய் ஜீபெகொவ் குற்றம்சாட்டி இருக்கும் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட 16 கட்சிகளில் நான்கு மாத்திரமே பாராளுமன்றம் நுழைவதற்கு தேவையான 7 வீத வாக்கு எல்லையை பெற்றுள்ளன. அதில் மூன்று ஜனாதிபதிக்கு நெருக்கமான கட்சிகளாகும்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை தலைநகர் பிஷ்கக்கில் உள்ள அலா தூ சதுக்கத்தில் ஒன்றுதிரண்ட சுமார் 5000 பேர் தேர்தல் முடிவை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க கண்ணீர் புகை மற்றும் தண்ணீர் பூச்சடிக்கப்பட்டபோது பொலிஸாருடன் மோதல் ஏற்பட்டது.



நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரிக்கும் இலங்கையிலுள்ள இத்தாலிய தூதுவர் Rita Giuliana Manellaவுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்றுக் காலை (06) நீதி அமைச்சில் நடைபெற்ற இரு நாடுகளுக்கிடையிலான நீதித்துறை ஒத்துழைப்பு தொடர்பாகவும் இலங்கையின் நீதிமன்ற கட்டமைப்பின் அடிப்படை வசதிகளின் மேம்பாடு குறித்தும் இங்கு பேசப்பட்டதுடன் இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனத்தன்மை தொடர்பிலும் இத்தாலிய தூதுவர் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.



ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சைபி, மரியாதை நிமித்தம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை அண்மையில் சந்தித்தார். பாராளுமன்றத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் அரசியல் தூதுவருடன் வர்த்தகம் மற்றும் தொடர்பாடல் துறைக்கான பிரதித் தலைவர் திருமதி அன்னே வாகியர் சட்டர்ஜியும் கலந்து கொண்டிருந்தார். பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவும் இச்சந்திப்பில் பங்கேற்றார்.

## அமைச்சரவை தீர்மானங்கள் "விசேட வைப்புக் கணக்கு"




நாட்டிற்கு வெளிநாட்டுச் செலாவணி கிடைப்பதை அதிகரிக்கும் நோக்கில் 06 மாத காலத்திற்கு வங்கிகளூடாக நாட்டிற்கு கிடைக்கும் பணத்தை வைப்புச் செய்வதற்காக 'விசேட வைப்புக் கணக்கு" எனும் பெயரில் சமகால வைப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்காக 2017ஆம் ஆண்டு 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழ் கட்டளையிடுவதற்கு 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

**ஊழியர் இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தில் திருத்தம்**

நாட்டைக் கட்டியெழுப்பும் 'சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கமைய 'நாட்டிற்காக வேலை செய்யும் கலாசாரம்" எனும் தொனிப்பொருளின் கீழ் 1934ஆம்

05

*வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில்*

## எந்த பகுதியாயினும் அரசாங்கம் இன, மத பாரபட்சத்துடன் செயற்படாது



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

அரசாங்கம் வடக்கு, கிழக்கிலோ அல்லது நாட்டில்வேறு எந்த பகுதியிலோ இன, மத பாரபட்சத்துடன் செயற்படுவதில்லையென இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வன்னி மாவட்ட எம்.பி சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்பி, மன்னார் மாவட்டத்தின் தாழ்வுபாடு பிரதேசத்தில் அமைந்திருந்த கலாசார நிலையம் ஒன்று தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் வடக்கு, கிழக்கில் தொல்பொருள் ஆய்வு என்ற ரீதியில் இன மத ரீதியாக பாரபட்சமான செயற்பாடுகள் இடம் பெறுகின்றன என்பதை அவர் சபையில் சுட்டிக்காட்டினார்.

அதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் தற்போதைய

05

*2020ஆம் ஆண்டுக்கான நிதிஒதுக்கு சட்ட மூலம்;*

## பாராளுமன்றில் சமர்ப்பிக்க அமைச்சரவை அங்கீகாரம்



2020ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலம், சட்டவாக்கத்திற்கான அங்கீகாரம் 2020ஆகஸ்ட் மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 2020ஆம் ஆண்டுக்கான மொத்த மீண்டெழும் செலவுகள் 2,692 பில்லியன் ரூபாய்களாவதுடன் மூலதனச் செலவு 1,846 பில்லியன்களாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இம் மதிப்பீட்டு ஒதுக்கீடுகளில் கீழ்வரும் ஒதுக்கீடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலக் கணக்குகள் இரண்டின் மூலமான ஒதுக்கீடுகள்

**#அரசியலமைப்பின் 150ஆவது**

05



தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் இலங்கைக்கான மாலைதீவு உயர்ஸ்தானிகர் உமர் அப்துல் ரசாக் ஆகியோருக்குமிடையிலான சந்திப்பொன்று அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றபோது.

## கம்பஹாவிலிருந்து கலஹா சென்ற இரு யுவதிகளுக்கு கொரோனா?

**சந்தேகத்தில் உறவினர்கள் தனிமைப்படுத்தலில்**

**தெல்தோட்டை தினகரன் நிருபர்**

கம்பஹா ஆடைத்தொழிற்சாலையில் கடமையாற்றிய கலஹா லெவலன் மணிக்கட்டி தோட்டத்தை சேர்ந்த இரு யுவதிகள் கொரோனா தொற்று சந்தேகத்தின் பேரில் சுகாதார அதிகாரிகளினால் கண்டி வைத்தியசாலைக்கு நேற்று செவ்வாய்கிழமை அழைத்துச் சென்றுள்ளனர் .

இதில் ஒரு யுவதி செவ்வாய்கிழமை அதிகாலை ஒருமணியளவில் சுகாதார அதிகாரிகளினால் வைத்தியசாலைக்கு எடுத்துசெல்லப்பட்டுள்ளார்.

மற்றைய யுவதி நேற்றுக் காலை 11 மணியளவில் சுகாதார அதிகாரிகளினால் வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளார். இவர் பயணித்த முச்சக்கர வண்டி சாரதி ஒருவரும் இந்த பெண் ஒருவரின் மாமனார் பயணித்த முச்சக்கரவண்டி சாரதி ஒருவருமாக

05

## வேலையற்றோர் வீதம் 5.7 இல் இருந்து 5.4 ஆக வீழ்ச்சி; பொருளாதாரத்தில் முன்னேற்றம்



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

கொரோனா காலப்பகுதியில் நல்லாட்சி அரசு ஆட்சியில் இருந்திருந்தால் நாடு இந்நேரம் அழிந்திருக்கும்.ஆனால் எமது அரசு அதற்கு முகங்கொடுத்தவாறு பொருளாதாரத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதோடு முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

வாய்மூல விடைக்கா க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது,

மூடிஸ் தரப்படுத்தல் நியாயமாக கணிப்பிடப்படவில்லை.இது தொடர்பில் எமது பதிலை அனுப்பியுள்ளோம். கொரோனாவுடன் ஏற்றுமதி

05

## திருமலை எண்ணெய் தாங்கிகளை மீளப்பெற இந்தியாவுடன் பேச்சு

*உதய கம்மன்பில*



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் இந்தியாவுக்கு 35 வருட குத்தகைக்கு விடப்பட்ட திருகோணமலை, சீனன்குடா பகுதியில் எண்ணெய்த்தாங்கிகளை மீள பெற்றுக்கொள்வது தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அமைச்சர் உதய கம்மன்பில பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய் மூல விடைக்கான வினாக்கள் வேளையில் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்;

05

## கொவிட் 19 பாதுகாப்புக்கு 1999 அவசர அழைப்பு எண் அறிமுகம்

கொவிட் 19 தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக்கொள்வதற்காக மக்களிடம் தகவல்களைப் பெற்றுக்கொள்ள 1999 என்ற உடனடி தொலைபேசி இலக்கமொன்றை சுகாதார மேம்பாட்டு பணியகம் நேற்று அறிவித்துள்ளது.

தற்போது சமூகத்தில் விசேட கவனத்திற்குள்ளாகியுள்ள கொவிட் 19 தொற்று குறித்து அறிந்துகொள்வதற்காக 24 மணி நேரமும் செயற்படும் இந்த அவசர தொலைபேசி ஊடாக தொடர்புகொண்டு இத்தொற்று குறித்து ஏற்படும் சந்தேகங்கள் மற்றும் பிரச்சினைகள் பற்றி மூன்று மொழிகளிலும் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இதன் நிமித்தம் விசேட மருத்துவ நிபுணர்களும் மருத்துவர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பணியகத்தின் பணிப்பாளர் டொக்டர் பாலித்த கருணபெரும நேற்று தெரிவித்துள்ளார்.

## செய்தித் துளிகள்

### பாராளுமன்ற அமர்வுகள் தொடரும் குழுக் கூட்டங்கள் இடைநிறுத்தம்

**எதிர்கால நடவடிக்கை குறித்து இன்று முடிவு**

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 சவால்களை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டு பாராளுமன்றக் கூட்டங்களை தொடர்ந்தும் நடத்திச் செல்வது தொடர்பில் பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான குழு நேற்று (06) தீர்மானித்தது.

பகல் மீண்டும் கூடி எதிர்கால நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெற்ற இக்கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் தீர்மானித்தனர். இருந்தபோதும், ஏற்கனவே

05

### யாழ். பல்கலை வவுனியா வளாகத்தில் 98 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை



**ஓமந்தை விஷேட நிருபர்**

கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தீவிரமடைந்ததையடுத்து, முன் எச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக வவுனியாவில் சிலரிடம் பிசிஆர் பரிசோதனைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

பம்பைமடுவிலமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில்

05

### ரியாஜின் விடுதலை பொலிஸ் நிர்வாக ரீதியான விடயம்

**அமைச்சர் கெஹலிய**

**சுப்ரமணியம் நிஷாந்தன்**

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் சகோதரர் ரியாஜ் விடுவிக்கப்பட்டமை பொலிஸ் நிர்வாக ரீதியான விடயமாகும். இதில் அரசியல்வாதிகள் தலையிட வேண்டியதில்லையென அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடக அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்

05

**பாடசாலை சீருடைத் துணி;**

### நான்கு நிறுவனங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

உள்ளூர் புடைவை உற்பத்தியாளர்களிடம் 2021ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைத் துணிக் கொள்வனவுக்கும், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பெறுகைச் செயன்முறையை துரிதமாக நிறைவு செய்வதற்கும் 2020 செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய பாடசாலைச் சீருடைத் துணி தொடர்பில் தரத்திற்கமைய உற்பத்தி செய்து, பகுதியாக்கப்பட்டு,

05

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 129.60 | 135.76 |
| கனடியன் டொலர் | 136.31 | 141.76 |
| யூரோ | 212.87 | 220.37 |
| ஜப்பான் யென் | 1.7127 | 1.7869 |
| சிங்கப்பூர் டொலர் | 132.88 | 138.16 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 235.24 | 242.99 |
| சுவிஸ் பிராங்க் | 197.53 | 205.17 |
| அமெரிக்க டொலர் | 182.43 | 186.75 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 489.40 | கட்டார் ரியால் | 50.68 |
| குவைத் டினார் | 602.71 | சவூதி ரியால் | 49.20 |
| ஓமான் ரியால் | 479.39 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.24 |




# நுவரெலியாவிலிருந்து மாலைதீவுக்கு மரக்கறி ஏற்றுமதிக்கு ஏற்பாடு

## மாலைதீவு உயர்ஸ்தானிகருடன் இராஜாங்க அமைச்சர் ஜீவன் பேச்சு

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் இலங்கைக்கான மாலைதீவு உயர்ஸ்தானிகர் உமர் அப்துல் ரசாக் ஆகியோருக்குமிடையிலான சந்திப்பொன்று அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது நுவரெலியா மாவட்டத்தில் விவசாய துறையை அபிவிருத்தி செய்யும் மரக்கறிகளை மாலைத்தீவுக்கு ஏற்றுமதி செய்தல் மற்றும் நுவரெலியா மாவட்ட இளைஞர், யுவதிகளின் விளையாட்டு துறையை மேம்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு நுவரெலியா மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது. நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் மற்றும் அமைச்சின் செயலாளர் டி.பி.ஜி குமாரசிறி மாலைத்தீவுக்கான உயர்ஸ்தானியகத்தின் துணைத் தலைவர் கதீஜா நஜிக்கா, உயர்ஸ்தானிகரின் செயலாளர் ஐஷத் நிஹாட், அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் மொஹமட் காதர் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.





# மாத்தளையில் ஒருவருக்கு கொவிட் – 19 தொற்று உறுதி

## மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றியவர் என தெரியவந்துள்ளது

**தம்புள்ள தினகரன் நிருபர்.**

மினுவாங்கொடை பிரண்டிக்ஸ் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிய மாத்தளை பளேப் பொள, எஹலேபொலயை பிரதேசத்தை சேர்ந்த ஒருவருக்கு கொரோனா தொற்று என நேற்று (06) உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக மாத்தளை மாவட்ட சுகாகார பணிப்பாளர் சேப்பாலி விக்ரம திலக்க தெரிவித்தார்.

மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோனைகளை அடுத்து அவருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக வெலிகந்த வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

இவரது மனைவி மற்றும் பிள்ளைகள் இருவரும் அவர்களுடைய வீட்டில் பொது சுகாதார உத்தியோகத்தர்களின் கண்காணிப்பில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மினுவாங்கொடை பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றியதாகக் கூறப்படும் மாத்தளை, வில்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த மற்றுமொரு நபர், நேற்று (06) தம்புள்ள டென்சில் கொப்பேகடுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சப்ரகமுவ மாகாணத்தில்

# 72 பேர் சுய தனிமைப்படுத்தல்; தனியார் வகுப்புகள் நடாத்த தடை

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் 72 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தின் கொரோனா தொற்று ஒழிப்பு குழுவின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இரத்தினபுரி மாவட்டத்தில் நிவித்திகல, இரத்தினபுரி, கொடக்கவெல, கலவான, இம்புல்பே, அயகம ஆகிய பிரதேசத்திலிருந்து 55 பேரும் கேகாலை மாவட்டத்தில் கேகாலை, வரக்காபொல, எட்டியாந்தோட்டை, ரம்புக்கன ஆகிய பிரதேசங்களிலிருந்து 17 பேரும் உட்பட மொத்தம் 72 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ள 72 பேரும் மினுவங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் சேவையாற்றியவர்கள் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை நடாத்தப்பட்டு வருவதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை சப்ரகமுவ மாகாணத்தில் தனியார் வகுப்புகள் நடாத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்தோடு சப்ரகமுவ மாகாணத்தில் தனியார் வைத்தியசாலைகள் சுகாதார விதிமுறை மற்றும் சுகாதார ஆலோசனைக்கமைய மேற்கொள்வதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தர பரீட்சை நடைபெறும் அனைத்து பாடசாலை கட்டடத்தொகுதிகளுக்கும் தொற்று நீக்கி மருந்து தெளிக்கப்படும். அத்தோடு பரீட்சைகளும் சுகாதார ஆலோசனைக்கமையவே நடாத்துவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. கொவிட் 19 தொற்று காரணமாக நாட்டில் அவசர நிலைமை எதுவும் ஏற்படுமாயின் மக்களுக்கு தேவையான உணவு தொகைகளை சேகரித்து வைக்குமாறு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ சப்ரகமுவ மாகாண கூட்டுறவு திணைக்கள அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

கொவிட் 19 தொற்று சப்ரகமுவ மாகாணத்தில் பரவுவதற்கான அறிகுறிகள் தென்பட்டால் அதை தடுப்பதற்கு அரச மற்றும் தனியார்துறைகளின் சேவையை உடனடியாக பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மேலும் தெரிவித்தார்.





# பிரவுன்லோ தோட்ட வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

**மஸ்கெலியா தினகரன் விஷேட நிருபர்**

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பிரவுன்லோ தோட்ட வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையால் பொதுமக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்துவருகின்றனர். பிரவுன்லோ தோட்டத்தில் 49 குடியிருப்புகள் காணப்படுகின்றன.

அதில் வசிக்கும் மக்கள் சுமார் 35 குடும்பங்களை சேர்ந்த சுமார் 130 பேர் பயன்படுத்துகின்றனர்.

இவ்வீதி புனரமைக்கப்படாமையால் பாடசாலை மாணவர்கள் மழை காலங்களில் சேற்றில் நடந்து செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர். இப்பாதையை பல வருடங்களாக அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் என அனைவரும் வந்து பார்வையிட்டு செல்கின்றனர். ஆனால் இது வரை எவரும் பணிகளை ஆரம்பித்ததாக தெரியவில்லை என பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

மஸ்கெலியா நகரத்திற்கு சென்று வர முச்சக்கரவண்டி சாரதிகள் முன் வருவதில்லையெனவும் அவ்வாறு வந்தாலும் 500 ரூபாவுக்கு மேல் சாரதிகள் வாடகை அறவிடுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இப்பகுதியில் வசித்து வரும் முதியோர் அல்லது யாரேனும் அவசரமாக சுகவீனமுற்றால் வைத்தியசாலை கொண்டு செல்ல பல இன்னல்களை சந்திக்க வேண்டியுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் ராஜ் அசோக்கிடம் வினவிய போது

பாதை அபிவிருத்திக்காக முன்னாள் அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான இராதாகிருஷ்னணின் பன்முகப்படுத்தபட்ட நிதியிலிருந்து 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்ட போதும் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் அந்நிதியைப் பெற முடியாதுள்ளது. தற்போது பிரதேச செயலகத்தின் ஊடாக மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களில் ஒன்றாக இப்பாதை புனரமைப்புக்கு வேண்டுகோள் ஒன்றை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# வனராஜா தோட்ட மக்களின் அவலம்

## போக்குவரத்து வசதியின்மையால் நடந்து செல்லும் மக்கள்

வனராஜா மேற்பிரிவு மற்றும் லக்ஷமி புரம் ஆகிய பிரதேசங்களை சேர்ந்த மக்கள் முறையான போக்குவரத்து வசதிகள் இன்மையால் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்துவருகின்றனர்.

இதனால் வனராஜா மேற்பிரிவு மற்றும் லக்ஷமி புரம் ஆகிய பிரதேசங்களை சேர்ந்த சுமார் 150 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்காலிமாக காட்டுபாதைகள், நீர் நிலைகள் போன்றவற்றை தமது போக்குவரத்துக்கு பயன்படுத்துகின்றனர்.

எனினும் புற்கள் நிறைந்த காட்டுபிரதேசங்களில் விஷபூச்சிகள், பாம்பு, காட்டுப்பன்றி போன்றவற்றின் நடமாட்டம் அதிகமாக காணப்படுவதால் தாம் பெரும் உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் பயணிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

நீர்நிலைகளில் காணப்படும் கற்கள் சில சமயங்களில் வழுக்குவதால் தமது பயணம் ஆபத்து நிறைந்ததாக இருப்பதாக மக்கள் அங்கலாய்கின்றனர்.

அதுமட்டுமின்றி மழைக்காலங்களில் நீர்நிலைகளில் நீர்மட்டம் அதிகரித்து காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.



## கொவிட் - 19 அச்சம்

# சப்ரகமுவ பல்கலை மாணவர்கள் 20 பேர் தனிமைப்படுத்தல்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் 20 மாணவர்கள் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக பொதுச் சுகாதார உத்தியோகத்தர் லாலித குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

வைத்தியர்களின் பணிப்புரைக்கமைய இவர்கள் தனியான பாதுகாப்பு அறைகளில் வைக்கப்பட்டுள்ளதாக சப்ரகமுவ பல்கலைக்கழக துணை வேந்தர் நேற்றுத் தெரிவித்தார். மாணவர்கள் 20 பேரும் கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொடை மற்றும் திவுலபிட்டிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என தெரியவருகின்றது.

இவர்களை பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்த முதல் இவர்களின் இரத்த மாதிரிகள் பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டு கோவிட் 19 வைரஸ் தொற்றியிருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே பீ.சீ.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் பிரதேச பொதுச் சுகாதார உத்தி யோகத்தர் தெரிவித்தார்.

# பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை

**(கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)**

கொவிட் 19 அச்சம் காரணமாக பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பேராதனைப் போதனா வைத்தியசாலைக்கு பி.சி.ஆர் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா பகுதியில் வசிக்கும் இவர்கள் இருவரும் கடந்த விடுமுறைகாலத்தில் அங்கு நடைபெற்ற சில களியாட்ட நிகழ்வுகளில் பங்குபற்றியதாக தெரியவந்ததையடுத்து சந்தேகத்தின் பெயரிலேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் பொறியியல் பீடத்தை சேர்ந்தவர், மற்றொருவர் மருத்துவபீடத்தை சேர்ந்தவர். இவை தவிர நேற்று சில பீடங்களில் விரிவுரைகள் தடை செய்யப்பட்டன. விளையாட்டு மைதானம், உள்ளக விளையாட்டு அரங்கு, வெளியாட்கள் தங்கும் விடுதிகள் போன்றன தற்காலிகமாக தடைசெய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னரே ஒதுக்கீடு செய்தவர்களுக்கும் அவை ரத்து செய்யப்பட்டுள்ளது. கம்பஹா மாவட்ட மாணவர்கள் தங்கியிருந்த விடுதிகளில் இருந்த ஏனையவர்களை அறையைவிட்டு வெளியேற வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமானவர்களை பல்கலைக்கழக சுகாதார நிலையத்திற்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

## சுகாதார வழிகாட்டல்களை...

ஆரம்பத்தின்போது விடுத்த விசேட அறிவிப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதற்கமைய பாராளுமன்றத்துக்கு வரும்போதும், பாராளுமன்றத்தில் இருக்கும்போதும் சுகாதார அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை கடுமையாகப் பின்பற்றுமாறும், பாராளுமன்றத்துக்கு வெளியே செயற்படும்போதும் அவற்றைப் பின்பற்றுமாறும் சபாநாயகர் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டார்.

## நாடு முழுவதும் திருவிழாக்கள்...

மாநாடுகள், சொற்பொழிவுகள், கண்காட்சிகள், இசை நிகழ்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள் உட்பட அனைத்து மக்கள் ஒன்றுகூடல்கள் நிகழ்வுகளை நடத்த மீண்டும் மறு அறிவித்தல் விடுக்கப்படும்வரை தடைவிதிக்கப்படுவதாகவும் கொவிட் 19 வைரஸ் ஒழிப்புக்காக அரசாங்கம் எடுக்கும் அனைத்து தீர்மானங்களையும் பொதுமக்கள் பின்பற்ற வேண்டுமெனவும் சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

## பொது மக்கள் சேவை...

பொது மக்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தருவது தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்கம் அறிவித்துள்ளது. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திடமிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக, அலுவலக நேரங்களில் (மு.ப. 8.00 மணி தொடக்கம் பி.ப. 4.30 வரை) கீழ்க் காணும் தொலைபேசி இலக்கங்களூடாக அல்லது மின்னஞ்சல் ஊடாக உரிய பிரிவுடன் தொடர்பு கொண்டு, உரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுமாறு பொது மக்களை தயவுடன் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கடவுச்சீட்டுப் பிரிவு
0707101060, 0707101070
குடியுரிமைப் பிரிவு 0707101030,
வெளிநாட்டுத் தூதரகப் பிரிவு
0115329233, 0115329235
வீசா பிரிவு 0707101050

## மைத்திரி என்னை பாதுகாப்பு சபை...

தன்னை அழைக்கவில்லையென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முதல் தடவையாக சாட்சியமளிக்கும் போதே ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டு, 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற ஆட்சிமாற்றம் வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக தனக்கு ஒரு நூல் ஒன்றைக் கூட எழுத முடியுமென தெரிவித்தார்.

மேலும் 52 நாள் அரசாங்கத்தின் போது பிரதமராக இருந்த மஹிந்த ராஜபஷவிடம், அவருக்கு பாதுகாப்பு சபைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்ததா? என தான் வினவியதாகவும் அவருக்கும் அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை என்றும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

## காளைகளின் பெருக்கம்..

மீதான விவாத்தில் கருத்துத் தெரிவித்த அவர்,

பாவனைக்கு தேவையான பொருட்களை தயார்படுத்திய பின்னர் அவற்றின் இறக்குமதியை தடை செய்வது உகந்தது. ஆனால் மஞ்சள் தூள் தடையினால் மஞ்சள் கடத்தல் அதிகரித்துள்ளது.நியாயமான விலைக்கு அவை மக்களுக்கு சென்றடைய வேண்டும்.

கடற்றொழிலாளர்கள்,விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்.விவசாயம் மற்றும் கால்நடைகள் என்பவற்றையே விவசாயிகள் நம்பியுள்ளனர்.பசுவதையை தடை செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.பசுவதையை ஏற்கிறோம். ஆனால் காளைகளுக்கு என்ன செய்வது என எதுவும் கூறப்படவில்லை.விவசாயிகள் தமது பெண்குழந்தைகளின் திருமணத்தில் சீதனமாக கால்நடைகளை தான் வழங்குகின்றனர். தற்பொழுது எமது பகுதிகளில் . கால்நடைகளில் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. மாடறுப்பு தடையால் காளைகளின் பெருக்கம் ஏற்படும்.எழுந்தமானமான முடிவினால் விவசாயிகள் பாதிக்கப்படுவர்.

பால் உற்பத்தியை அதிகரிப்பதை ஏற்கிறோம்.மீனவர் சமூகம் தொடர்ந்தும் பிரச்சினைகளை முகங்கொடுக்கின்றனர் என்றார்.

## உலகில் கொரோனா தொற்றால்...

இதுவரை பல்வேறு நாடுகளை சேர்ந்த 10 இலட்சத்து 45ஆயிரத்து 825 பேர் கொரோனா வைரசால் உயிரிழந்துள்ளனர். உலகம் முழுவதும் கொரோனாவால் 3 கோடியே 56 இலட்சத்து 92,634 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 2 கோடியே 68ஆயிரத்து 58,391 பேர் குணமடைந்துள்ளனர்.

மேலும் 66,785 பேர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்முனையில் 32 பேர்...

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் குண. சுகுணன் தெரிவித்தார். நாட்டில் தற்போது கொரோனா தொற்றுத் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் பொதுப் போக்குவரத்துகளில் பஸ்களில் பயணிக்கும் பிரயாணிகள் சமூக இடைவெளியைப் பேணி முகக் கவசம் அணிந்து செல்ல வேண்டும். மீறும் பட்சத்தில் பஸ்களின் சாரதிகள், நடத்துநர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார். தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள் கை கழுவுவதோடு கட்டயாம் சமூக இடைவெளியை பேணுமாறு கேட்டுள்ளார்.

## பாராளுமன்றில் சமர்ப்பிக்க... 03ஆம் பக்க தொடர்...

அரசியலமைப்பின் 03ஆம் உப அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட, 2020ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட செலவுகள் தொடர்பான ஒதுக்கீடு

# 2019ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ள ஆனாலும் கணக்கு வைக்கப்படாத 211 பில்லின் ரூபாய்கள் கணக்கு வைப்பதற்கான ஒதுக்கீடு

அதற்கமைய, 2020ஆம் நிதியாண்டுக்கான சட்டமூலமாக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கு சட்ட மாஅதிபரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இச்சட்டமூலத்தின் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடப்படுவதற்கும், பின்னர் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றுக்குச் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2021ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம், சட்டமூலமாக்குவதற்கு 2020 எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

## கம்பஹாவிலிருந்து கலஹா சென்ற... 03ஆம் பக்க தொடர்...

இருவர் சுயதனிமைப்படுத்தளுக்கு உற்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் பொருட்களை கொள்வனவு செய்த கலஹா நகரின் ஹோட்டல் ஒன்றும் . பெண்களின் வீட்டார் பொருள் கொள்வனவு செய்த மணிக்கட்டி தோட்டத்தின் கடையும் சுகாதார அதிகாரிகளினால் மூடப்பட்டுள்ளன. இரு யுவதிகளும் அருகருகே வசிப்பவர்கள். பதினெட்டு மற்றும் இருபத்தி இரண்டு வயதானவர்கள் என தெரியவந்துள்ளது.

மேற்படி தொழில்சாலைக்குச் சென்று சில நாட்களேயான பின்னர் இத் தமக்கு தொழில் பிடிக்கவில்லையென்று கடந்த நான்காம் திகதி வீடு திரும்பியுள்ளனர் .

பொதுப் போக்குவரத்து பஸ்களில் இவர்கள்பயணித்துள்ளனர் .

இவர்கள் வீட்டுச் சூழலிலுள்ள மக்கள் சுகாதார நடைமுறைகளை மிகக் கடினமாக கடைப்படிக்கும்படி சுகாதார அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

## பதியுதீன் விடுவிப்பு பொலிஸ்... 03ஆம் பக்க தொடர்...

போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தாவது, குற்றத்தடுப்பு பிரிவின் பணிப்பாளருக்கு திடீரென இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமையானது நிர்வாக ரீதியான தீர்மானமாகும். அதேபோன்று பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் சகோதரர் விடுவிக்கப்பட்டமையும் பொலிஸ் மற்றும் நீதிமன்றம் தொடர்பிலான பிரச்சினையாகும்.

ஜனாதிபதி இந்த விடயம் தொடர்பில் தெளிவாக தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். உரிய அதிகாரிகளின் விசாரணைகளின் பின்னர் சட்டரீதியாக அந்தச் செயற்பாடு இடம்பெறும் என்பதுடன், அதில் தாம் தலையீடுகளை மேற்கொள்ள விரும்பவில்லையெனவும் கூறியுள்ளார்.

நிர்வாக ரீதியாக எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் அரசியல்வாதிகள் தொடர்பு தேவையில்லை என்றார்.

## யாழ். பல்கலை வவுனியா... 03ஆம் பக்க தொடர்...

கல்வி பயின்றுவரும் கம்பஹா மற்றும் அதனை அண்டிய பகுதிகளை சேர்ந்த 90 பேருக்கு நேற்றுக் (06) காலை வவுனியா பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனையால் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. வவுனியா, தோணிக்கல் ஆலடிப்பகுதியில் வசிக்கும் உறவினர்களை மினுவாங்கொடையிலிருந்து வருகைதந்து சந்தித்த பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து அந்த குடும்பம் வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது.

## சாட்சியங்கள் கிடைப்பின் ரிஷாத்தின்...

எவ்வித தொடர்பும் கிடையாது என குறிப்பிட்ட அமைச்சர் விடுதலை செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதினின் சகோதரருக்கு எதிராக சாட்சியங்கள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அவர் எந்தநேரத்தில் வேண்டுமானாலும் கைது செய்யப்படாலமெனவும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களோடு தொடர்புடைய பலர் எதிர்காலத்தில் கைது செய்யப்படலாமெனவும் தெரிவித்தார். அரசியல்வாதிகளை போன்று ஊடகவியலாளர் மாநாடுகளை நடத்தி தன்னிச்சையாக கருத்துக்களை தெரிவித்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தொடர்பில் குற்றம் சுமத்திய அமைச்சர், அது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

## பாராளுமன்ற அமர்வுகள் தொடரும்... 03ஆம் பக்க தொடர்...

அழைக்கப்பட்டிருந்த குழுக் கூட்டங்களை இன்று (07) முதல் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இன்று (07) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (திருத்த) சட்டமூலம், பொருளாதார சேவை விதிப்பனவு (திருத்த) சட்டமூலம், துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்த) சட்டமூலம் ஆகியவை தொடர்பான இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் நடைபெறும்.

## நான்கு நிறுவனங்களுக்கு அமைச்சரவை... 03ஆம் பக்க தொடர்...

பொதியிடப்பட்டு கோட்டக் கல்விப் பணிமனைகளுக்கு விநியோகிப்பதற்கான ஒப்பந்தம் வான்கார்ட் இன்டஸ்றீஸ் (தனியார்) கம்பனி, தங்கொட்டுவ வீவிங் மில்ஸ், பிரபா டெக்ஸ் இன்டஸ்றீஸ், மற்றும் கிரியேடிவ் டெக்ஸ்டயில் (தனியார்) கம்பனிகளுக்கு வழங்குவதற்கு கல்வி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## குடாநாடு எந்நேரமும்...

யாழ் . மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகே சன் தெரிவித்தார். யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற கொரோனா ஒழிப்பு செயலணி கூட்டத்தினை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கம்பஹா மாவட்டத்தில் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்கள் என்ற அடிப்படையில் இனங்காணப்பட்டிருந்தவர்களில் இருவர் புங்குடுதீவை சேர்ந்தவர்கள் இங்கு வருகை தந்திருக்கிறார்கள். 30ஆம் திகதி மற்றும் மூன்றாம் திகதி இரண்டு பேர் இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களில் 3 ஆம் திகதி வந்தவருக்கு கொரோணா தொற்று இனங்காணப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் அவருடைய நெருங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் புங்குடுதீவு பகுதியில் கட்டாய சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். வேலணை பிரதேச செயலர் பிரிவில் 57 பேர் போக்குவரத்தில் மற்றும் ஏனைய இடங்களில் அந்த பெண்ணுடன் தொடர்புபட்ட என்ற அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளான பெண் உடன் பஸ்ஸில் பயணித்தவர் என்ற அடிப்படையில் சுமார் 88 பேர் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

மருதங்கேணி குடாரப்பு கிராமத்தில் 73 நபர்கள் அங்கு சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். 9 பேர் தனிமைப்படுத்தல் முகாமுக்கு அனுப்பட்டுள்ளார்கள். இதனைவிட எழுவைதீவைச் சேர்ந்த ஐந்து குடும்பங்களை சேர்ந்த 22 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவில் ஒருவருக்கு உறுதி செய்யப்பட்டுள்ள காரணமாக ஆயிரத்து 212 குடும்பங்களைச் சேர்ந்த 3915 பேர் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அந்த பகுதியில் முழுமையான முடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாண மாவட்டம் தற்போதைய அனர்த்தத்தை மிகவும் சிக்கலான நிலைமையினை எதிர்கொள்ளும் பாரிய ஒரு அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே அபாயகரமான சூழல் என்று நாங்கள் தற்பொழுது கருதப்பட வேண்டிய புங்குடுதீவு பகுதி முற்று முழுதாக முடக்கப்படுத்தப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் ஏனைய பகுதிகளிலும் சில சில செயற்பாடுகளை அரசாங்கத்தினுடைய அறிவுறுத்தலின் பிரகாரம் முடக்கி இருக்கின்றோம். அல்லது தற்காலிகமாக நிறுத்தி இருக்கின்றோம் என்றார்.

## திருமலை எண்ணெய் தாங்கிகளை... 03ஆம் பக்க தொடர்...

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் திருகோணமலை சீனன்குடாவிலுள்ள 75 எண்ணெய்த் தாங்கிகளை அன்றைய அரசாங்கம் இந்தியாவுக்கு 35 வருட குத்தகைக்கு வழங்கியது. அதில் 25 தாங்கிகளை மட்டுமே அரசாங்கம் உபயோகித்தது.

இரு தரப்பு அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை உடனடியாக நிவர்த்தி செய்ய முடியாத நிலையில் நாம் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம். மேற்படி எண்ணெய்த் தாங்கிகளில் 15 தாங்கிகளை மட்டுமே இந்திய அரசாங்கம் உபயோகப்படுத்தி வருகின்ற நிலையில் ஏனையவற்றை நாம் மீள பெற்றுக்கொள்ள பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோமென்றும் அமைச்சர் பதிலளித்தார்.

ஹேஷா விதானகே எம்பி தமது கேள்வியின் போது;

திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய்த் தாங்கி கட்டிடத் தொகுதி பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் 2,50.000 ஸ்டெர்லிங் பவுண் செலுத்தப்பட்டு அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு பகுதி இந்தியாவிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய எண்ணெய்த் தாங்கிகளையும் இந்தியாவிற்கு குத்தகைக்கு விடுவதற்கு அரசாங்கம் முடிவு எடுத்துள்ளதா? என அவர் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## எந்த பகுதியாயினும் அரசாங்கம்... 03ஆம் பக்க தொடர்...

அரசாங்கம் அல்லது அரச நிறுவனங்களோ இன, மத ரீதியான பாரபட்சத்துடன் செயற்படுவதில்லை. வடக்கு, கிழக்கில் தொல்பொருள் ஆய்வு தொடர்பான பிரச்சினைகள் இருக்குமானால் அதுதொடர்பான ஆதாரங்களுடன் அமைச்சுக்கு வந்து நேரடியாக கலந்துரையாடி தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியுமென குறிப்பிட்ட அவர், மேற்படி கலாசார நிலையம் தொடர்பான ஆவணங்களை கொண்டு வந்தால் அது தொடர்பிலும் முடிவுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் மேலும் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்; மன்னார் தாழ்வுப்பாடு பிரதேசத்திலுள்ள யுத்தத்தினால் சேதமடைந்துள்ள கலாசார நிலையத்தை புனரமைக்க 2018 ஆம் ஆண்டு 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளபோதும் அந்த நிலையம் அமைந்துள்ள காணி தனியாருக்கு சொந்தமானதென்பதனால் பணியை முன்னெடுக்க முடியாதுள்ளதென சுட்டிக்காட்டினார். அதன்போது விளக்கமளித்த சார்ள்ஸ் நிர்மலநாதன் எம். பி., காணியின் உறுதிப்பத்திரம் கலாசார நிலையத்தின் பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டது என்றார். இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க,

அரசாங்கத்தின் புதிய சுற்று நிருபமொன்றின் படி எதிர்வரும் 03 வருடங்களுக்கு அரசாங்கத்தினால் புதிய கட்டிடங்கள் எதையும் நிர்மாணிக்க முடியாது. எனினும் நீங்கள் எனது அமைச்சுக்கு வாருங்கள். அது தொடர்பில் மாற்று வழி ஒன்றைத்தேடுவோம் என்றார். வடக்கில் தொல்பொருள் திணைக்களத்தினர் இன, மத ரீதியாகச் செயற்படுவதாகவும் கூட்டங்களில் பங்கேற்க அவர்கள் மறுப்பதாகவும் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கூறியபோது, புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சின் கீழ் தொல்பொருள் திணைக்களம் இல்லை. அது ஜனாதிபதியின் பாதுகாப்பு அமைச்சுக்கு கீழ் செயற்படுகின்றது. எனினும் அரச திணைக்களமொன்று இன, மத ரீதியாக செயற்பட முடியாதென இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இதுவரை 708 பேருக்கு...

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் வேறு எந்தவொரு பொலிஸ் பிரிவுக்கும் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்படவில்லையெனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றி திவுலுபிட்டிய பகுதியை சேர்ந்த பெண் ஒருவருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிசெய்யப்பட்டதுடன், அவருடைய மகளுக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிய அனைத்து பணியாளர்களுக்கும் பி.சீ.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பணியாளர்கள் சென்றுள்ள இடங்கள் பயணத் தடங்கள் உட்பட அவர்கள் தொடர்புகளை மேற்கொண்டுள்ள அனைத்து நபர்களையும் தனிப்படுத்தலுக்கு உட்படுத்தி பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் பதிவாகியுள்ள கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்பில் இராணுவத் தளபதி கருத்து வெளியிடுகையில்,

திவுலபிட்டிய சம்பவத்தை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் பி.சீ.ஆர். பரிசோதனைகளின் பிரகாரம் நேற்றைய தினம் மாத்திரம் 321 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா தொற்றுக்குள்ளான பெண்ணுடன் மினுவங்கொட தொழிற்சாலையில் கடமையாற்றி வந்த 246 பேரே இவ்வாறு தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளான பெண்ணுடன் தொடர்பிலிருந்த 569 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்றார். இதேவேளை, கம்பஹா பொலிஸ் பிரிவுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 06 மணிமுதல் பொலிஸ் ஊடரங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று மாலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வேயாங்கொடை பொலிஸ் பிரிவு, மினுவங்கொடை பொலிஸ் பிரிவு, திவுலப்பிட்டிய பொலிஸ் பிரிவுகளுக்கு ஏற்கனவே பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறபிக்கப்பட்டுள்ளதுடன், கம்பஹா பொலிஸ் பிரிவுடன் சேர்த்து மொத்த நான்கு பொலிஸ் பிரிவுகளுக்கு இதுவரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு மறுஅறிவித்தல்வரை தொடரும் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இந்த நான்கு பொலிஸ் பிரிவுகளில் மாத்திரமே ஊடரங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், வேறு எந்தவொரு பொலிஸ் பிரிவிலும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவில்லையெனவும் உரிய தகவல்களை பொலிஸ் திணைக்களம் வெளியிடும் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவரும் நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தாலும் வெளியில் நடமாட வேண்டாமென அரசாங்கம் அறிவித்துள்ளதுடன், அனைவரையும் தங்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறும் அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்ட காலப்பகுதியில் அனைவரும் தமது வீடுகளில் இருக்க வேண்டும். தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதிக்குள் பிரதேசத்திற்குள் பிரவேசித்தல், பிரதேசத்தில் இருந்து வெளியேறுதல் முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் கூறியுள்ளது.

இதே வேளை முழு நாடும் முடக்கம் என்பது எளிதான முறை, ஆனால் அது மக்கள் பிழைப்புக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு விதிக்கப்படும் தடையாக அமையுமென்றும் இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் நேற்று (06) இணைந்துக்கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

கொரோனா தொற்றாளி அடையாளம் காணப்பட்டதுடன் உடனடியாக நாட்டை முடக்குவது முக்கியமானதல்ல எனவும் மாறாக அந்த நபரை இனம் கண்டு அதனூடாக சமூக பரவலை தடுப்பதே அவசியம் எனவும் இராணுவத் தளபதி கூறினார்.

முதல் தொற்றாளரான பெண் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவுடன் மூன்று பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கி பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அந்த பகுதிகளிலிருந்து அதிகமான மக்கள் வேலைக்கு வருவதை கருத்தில் கொண்டே நான்கு பொலிஸ் பிரிவுகளுக்கு மாத்திரம் இவ்வாறு ஊடரங்கு அமல்படுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார். ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்னரே அந்த பகுதிகளில் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

அந்தஆடை தொழிற்சாலையில் 1,400 பேர் தொழில் புரிகின்றனர். 400 பேர் துப்புரவு பணிகளில் ஈடுப்பட்டுள்ளனர். அவர்களில் 495 பேரைத் தவிர மற்ற அனைவரும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதியிலுள்ளனர். மீதமுள்ள 495 பேர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசிக்கின்றனர். ஆகவே அவர்களின் தொழிலை இடைநிறுத்தினால் பாதிப்பு ஏற்படும். தொழிற்சாலை பகுதிகளை விட்டு வெளியேறியவர்கள் அனைவரும் அடையாளம் காணப்பட்டு, நேற்றிரவு முதல் 125 க்கும் மேற்பட்டவர்களை இராணுவத்தினால் பராமறிக்கப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். எஞ்சியவர்களில் பெரும்பாலானோர் இந்த பகுதியில் வசிக்கின்றனர். அதன் காரணமாகவே நாம் இது போன்ற ஒரு சூழ்நிலையில் முழு முடக்கத்தை அமுலாக்கவில்லை. அதனை செய்வது மிகவும் எளிதானது, ஆனால் அது நாடு முன்னேறும் வழியாக அமையாது என்றார்.

## PCR பரிசோதனை அறிக்கைகளின்...

இதுவரையில் கிடைத்துள்ள பி.சி. ஆர் பரிசோதனை பெறுபேறுகளுக்கமைவாக 323 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளாகியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. 2000ஆம் வரையான பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றின் அறிக்கைகள் நாளை கிடைக்கவுள்ளன. அந்த பி.சீ.ஆர். முடிவுகளின் பிரகாரம்தான் பொலிஸ் ஊரடங்கு அல்லது ஏனைய விடயங்கள் தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தர பரீட்சைகளை நடத்துவது தொடர்பிலும் வெளியாகவுள்ள பி.சீர். ஆர். பரிசோதனைகளின் அடிப்படையிலேயே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். நாளைய தினம் (இன்று) கல்வி அமைச்சில் இதுதொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு அறிவிக்கப்படும். மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டிய காலமாகும். எதிர்வரும் 48 மணி நேரத்தில் தீர்மானமிக்கவை.

ஆடைத்தொழிற்சாலையில் எவ்வாறு வைரஸ் பரவியதென விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. அதேபோன்று அரசாங்கம் 100 சதவீதம் வைரஸை ஒழிக்க நடவடிக்கைகள் எடுத்தாலும் மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்காவிடின் அது கடினமான விடயமாகும் என்றார்.

## வயல் நிலங்களை நிரப்ப அரசு...

மஹிந்தானந்த அளுத்கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு முரணாக செயற்படும் அதிகாரிகள்தொடர்பில் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்என்றும்அமைச்சர்சபையில்தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின்போது புத்திக்க பத்திரன எம். பி.எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த அரசாங்கத்தின் காலத்தில் வயல் நிலங்களை வேறு பயன்பாடுகளுக்கு உபயோகப்படுத்தியுள்ள பெருமளவு செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

எமது அரசாங்கம் வயல் நிலங்களை வேறு பயன்பாட்டுக்காக உபயோகிப்பது தொடர்பில் கடுமையான கொள்கையை கடைப்பிடித்து வருகின்றது. தனிப்பட்ட ரீதியில் விவசாய அமைச்சர் என்ற வகையில் நான் அத்தகைய செயற்பாடுகளுக்கு முற்றிலும் எதிரானவன் என தெரிவித்தார்.

## அமைச்சரவை தீர்மானங்கள்... 03ஆம் பக்க தொடர்...

ஆண்டு 19ஆம் இலக்க ஊழியர் இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தைத் திருத்தியமைத்து திடீர் விபத்தின் போது ஊழியர்களுக்குக் கிடைக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படவுள்ளதாக அரசாங்கம் கூறியுள்ளது.

### சுற்றுலாத்துறைக்கு மானியம்

கொவிட் 19 தொற்று நிலைமையால் வாழ்வாதாரம் இழக்கப்பட்ட இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள சுற்றுலா வழிகாட்டுனர்கள் மற்றும் சுற்றுலா சாரதிகளுக்கு மானியம் வழங்குவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் 186 மில்லியன் ரூபாய்களை ஒதுக்குவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளதுடன், குறித்த நிதி சுற்றுலாத்துறை வழிகாட்டிகளுக்கும் சாரதிகளுக்கும் மானியமாக வழங்கப்பட்டவுள்ளது.

மானியங்கள் சுற்றுலாத் துறையிலுள்ள நபர்களுக்கும் வழங்குவதற்காக அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### மட்டு. பொது நூலகக் கட்டிடத்தொகுதி நிர்மாணித்தல்

மட்டக்களப்பு மாநகர சபை பொது நூலகக் கட்டிடத்தின் தரைமாடி கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக 2018ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய, இக் கட்டட நிர்மாணத்திற்காக தேசிய பெறுகைக் கோரல் கோரப்பட்டுள்ளதுடன், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரை மூலம் இந்த ஒப்பந்தம் 214.07 மில்லின் ரூபாய்களுக்கு பொக்ஸ் மார்க் கட்டின் தனியார் கம்பனிக்கு வழங்குவதற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## வேலையற்றோர் வீதம் 5.7 இல் இருந்து... 03ஆம் பக்க தொடர்...

வீழ்ச்சியடைந்துள்ளது.கடந்த இரு மாதங்களாக அந்த நிலைமை மாறி வருகிறது.ஒரு பில்லியன்களாக அது உயர்ந்துள்ளது.வர்த்தக தட்டுப்பாடு 08 பில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 5.8 பில்லியன்களாக குறைந்துள்ளது. சுற்றுலாத் துறை பாதிக்கப்பட்டுள்ளது.ஆனால் கணினி சேவை ஊடாக கிடைக்கும் வருமானம் உயர்ந்துள்ளது.கப்பலில் பொருள் ஏற்றி இறக்கல் வருமானமும் அதிகரித்துள்ளது.

கடந்த ஆட்சியில் 3.7 வீத பொருளாதார வளர்ச்சியே காணப்பட்டது. கஷ்டத்தில் பயன்படுத்துவதற்கே வெளிநாட்டு கையிருப்பு பேணப்படுகிறது.2014 இல் 8.2 பில்லியன்களாக இருந்த வெளிநாட்டு கையிருப்பு நல்லாட்சி'யில் குறைந்து 2019 இல் 7.6 பில்லியன்களாக வீழ்ச்சியடைந்தது. ஆனால் 2019 இல் 15 பில்லியன்களாக இதனை அதிகரிக்கவே மதிப்பீடு செய்யப்பட்டது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 21ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 19



**குறள் தரும் சிந்தனை**

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு

உடம்பின் அகத்து உறுப்பாகிய அன்பு
இல்லாதவர்க்கு உடம்பின் புறத்து
உறுப்புக்கள் எல்லாம் என்ன பயன் செய்யும்.

# விழிப்புணர்வுடன் மீண்டும் செயற்பட வேண்டிய தருணம்

உலகுக்கு பெரும் சவாலாக விளங்கிக் கொண்டிருக்கும் கொவிட் 19 தொற்று இலங்கையில் சமூகத்தில் பெரும் வீழ்ச்சி நிலைக்கு கொண்டு வரப்பட்டிருந்த சூழலில், கடந்த ஞாயிறன்று முதல் மீண்டும் பதிவாகத் தொடங்கியுள்ளது.புதிய தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளனர்.

மினுவாங்கொடையில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் பணியாற்றும் திவுலப் பிட்டியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு இவ்வைரஸ் தொற்று உ றுதியானதைத் தொடர்ந்து பல பிரதேசங்களிலும் இத்தொற்றுக்கு உள்ளானவர்கள் பதிவாகத் தொடங்கியுள்ளனர்.

இவ்வருடம் மார்ச் மாத நடுப் பகுதியில் இந்நாட்டில் தொடராகப் பதிவாகத் தொடங்கிய இத்தொற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பரந்துபட்ட நடவடிக்கைகளின் பயனாக ஏப்ரல் மாதத்தின் பின்னர் தணிந்து போனது. இந்நாட்டில் சமூகத்தில் இத்தொற்று பெரு வீழ்ச்சி நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. அதாவது ஓகஸ்ட் மாதமாகும் போது தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருப்பவர்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து அழைத்து வரப்படுபவர்கள் மத்தியில் மாத்திரம் பதிவாகக் கூடிய ஒரு தொற்றாக இத்தொற்று மாற்றமடைந்தது. இதன் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இத்தொற்று காரணமாக அமெரிக்கா உள்ளிட்ட அபிவிருத்தியடைந்த நாடுகள் கூட திணறிக் கொண்டிருக்கும் சூழலில், இத்தொற்றை இலங்கை கட்டுப்படுத்தியமை உலகையே ஆச்சரியப்பட வைத்திருந்தது. பல நாடுகளும் உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களும் இலங்கையின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பெரிதும் பாராட்டின.

இவ்வாறான சூழலில் மினுவாங்கொடையிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் திவுலப்பிட்டியைச் சேர்ந்த இப்பெண்ணுக்கு இத்தொற்று உறுதியானது. அதனைத் தொடர்ந்து இத்தொற்றின் பரவலை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மீண்டும் விரிவான அடிப்படையில் முன்னெடுத்துள்ளது.

குறிப்பாக மினுவாங்கொடை, திவுலப்பிட்டிய, வியாங்கொடை ஆகிய பொலிஸ் பிரதேசங்களில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஞாயிறன்று ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதோடு, நேற்று இரவு முதல் இந்த ஊரடங்குச் சட்டம் கம்பஹா பொலிஸ் பிரிவுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்களும் அவர்களது குடும்ப உறவினர்களும் வீடுகளிலிருந்து வெளியே செல்ல வேண்டாமென இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்தோடு சுகாதார அமைச்சு இசை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பொழுதுபோக்குகள் நிகழ்வுகள், கூட்டங்கள் கூடுதல் உள்ளிட்டவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறு பொதுமக்களைக் கேட்டுள்ளது.

இது சுமார் 500 பேர் பணியாற்றி வரும் ஒரு தொழிற்சாலையாகும். அதனால் இத்தொற்றுக்குள்ளான பெண் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து நாட்டில் பல பிரதேசங்களிலும் இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் இனங்காணப்படும் நிலை உருவாகியிருக்கிறது. அதனால் இத்தொழிற்சாலையில் பணிபுரிபவர்களும் அவர்களது உறவினர்கள் மற்றும் அவர்களோடு தொடர்புபட்டிருந்தவர்கள் என்றபடி ஆயிரத்திற்கும் மேற்பட்டோரும் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

திவுலப்பிட்டிய, மினுவாங்கொடை, மீரிகம, குருநாகல், கட்டான, யாழ்ப்பாணம், மொனராகலை, சீதுவை, அம்பாறை, ஜாஎல, மஹர ஆகிய பிரதேசங்களில் நேற்று வரையும் இத்தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று முதல் நேற்று வரையும் இத்தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்டு இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக 567 பேர் இனம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறான சூழலில் நாட்டு மக்கள் முன்னெச்சரிக்கையுடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டிய காலகட்டமிது. ஏனெனில் இத்தொற்றை கட்டுப்படுத்துவதற்கு இற்றை வரையும் தடுப்பு மருந்து பயன்பாட்டுக்கு வரவில்லை. அதனால் இதனைத் தவிர்த்துக் கொள்வதற்கான பிரதான மார்க்கங்களாக முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகழுவுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களே விளங்கி வருகின்றன.

அதன் காரணத்தினால் தற்போதைய சூழலில் தேவையற்ற பயணங்களை தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்த வேண்டும். அத்தோடு வீட்டுக்கு வெளியே மேற்கொள்ளும் எந்தப் பயணத்தின் போதும் முகக்கவசம் அணிந்து கொள்ளவும், வீட்டுக்கு வெளியில் சமூக இடைவெளியைப் பேணுவதிலும் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளத் தவறக் கூடாது.

இவ்வாறான நடவடிக்கைகள் இத்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு உதவுவதாக அமைவதோடு ஒவ்வொருவரது ஆரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்வதற்கு வழிவகுப்பதாகவும் அமையும். இது தம்மையும் குடும்பத்தையும் சமூகத்தையும் நாட்டையும் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு அளிக்கப்படும் பாரிய பங்களிப்பாகவும் விளங்கும்.

editor.tkn@lakehouse.lk



# சுகாதாரம் பேணுவதும் முன்னெச்சரிக்கையுமே பாதுகாப்பைத் தரும்

சற்றுக் காலமாக தணிந்திருந்த கொரோனா அச்சம் மீண்டும் தலைதூக்கியுள்ளது. இந்நிலையில் கொரோனா பற்றிய விழிப்புணர்வையும் பாதுகாப்பையும் தீவிரமாகப் பேண வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டுள்ளது.

விலங்குகளிடம் இருந்து மனிதனுக்குப் பரவிய கொவிட் 19 வைரஸ் மனிதர்களிடம் இருந்தே மற்றவர்களுக்குப் பரவத் தொடங்கியதால் உலகெங்கும் பத்து இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி விட்டனர். உலகில் இருந்து கொரோனா எப்போது முற்றாக நீங்குமென்பதே ஒவ்வொருவரின் ஏக்கமாக இருக்கின்றது.

இந்நிலையில் கொரோனா பற்றிய தகவல்களை மீண்டும் நினைவில் கொள்ள வேண்டியுள்ளது. கொரோனா வைரஸால் தாக்கப்பட்டவர்கள் பயன்படுத்திய பொருட்களில் கொவிட் வைரஸானது 12 மணி நேரம் உயிருடன் இருக்கும். எனவே நோய் தாக்கப்பட்டவர்களுடன் கைகுலுக்கினாலோ அருகில் நின்று பேசினாலோ கூட எளிதில் ஒரு மனிதனிடமிருந்து மற்றவர்களுக்கு இந்த வைரஸ் பரவி விடுவதற்கு வாய்ப்புள்ளது.

கொரோனா அறிகுறிகள் எவையென்பதை அறிந்து கொள்வோம். கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலில் காய்ச்சல் ஏற்படும். 2 நாட்களில் வரட்டு இருமல் ஏற்பட்டு, ஒரு வாரத்திற்குப் பிறகு மூச்சுத் திணறல் உள்ளிட்ட சுவாசப் பிரச்சினை உண்டாகும். வழக்கமான சளித்தொல்லை, இருமல், காய்ச்சல் மற்றும் ஆஸ்துமா அறிகுறிகளைக் கொண்டிருக்கும் முதியவர்களையும், குழந்தைகளையும், நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருப்பவர்களையும் கொரோனா எளிதில் தாக்கக் கூடும். கொரோனா வைரஸின் வீரியத்தைக் கட்டுப்படுத்தும் அளவிலான மருந்துகள் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த வைரஸ் மற்றவர்களுக்கு எளிதில் பரவும் என்பதால் நோய் பரவாமல் தடுப்பதே இப்போது முதன்மையானதாக இருக்கிறது. எனவே கொரோனா பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்கப்படுகிறது. வைரஸின் வீரியம் அவரவரின் நோய் எதிர்ப்புச் சக்திக்கு ஏற்ப குறையும் பட்சத்தில் தொடர்ந்து 28 நாட்கள் அவர்கள் மருத்துவக் கண்காணிப்பிலும் வைக்கப்படுகின்றனர்.

இதிலிருந்து எம்மை தற்காத்துக் கொள்வது எப்படி? வைரஸ் தாக்கத்தில் இருந்து தற்காத்துக் கொள்ள பொது இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கலாம். கைகுலுக்குவதை நிறுத்திக் கொண்டு இருகரம் கூப்பி வணக்கம் செலுத்தலாம். தும்மல், இருமலின் போது துணியைக் கொண்டு மறைத்துக் கொள்ளலாம். சுடுநீரைப் பருக வேண்டும். இரண்டு நாட்களுக்கு மேல் சளி, இருமல் தொல்லை இருந்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறலாம்.



குளிரூட்டப்பட்ட பொருட்கள், ஐஸ்கிரீம்களை தவிர்த்தல் நல்லது. சமூக ஊடகங்களில் உலா வரும் தேவையற்ற செய்திகளை படித்தும்,மற்றையோருக்குப் பகிர்ந்தும் பீதியடையாமல் அரசாங்கம் வெளியிடும் அறிவிப்புகளை மட்டுமே பின்பற்றினால் பதற்றத்தைத் தவிர்க்கலாம்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானோர் பேசும் போது, தும்மும் போது, இருமும் போது தெறிக்கும் எச்சில் துளிகள் வழியாக மற்றவர்களுக்கு கொரோனா பரவுவதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

தி நியூயார்க் டைம்ஸின் அறிக்கையின் படி மக்கள் மதுக்கடைகள், உணவகங்கள், அலுவலகங்கள், சந்தைகள் மற்றும் கசினோக்களுக்கு திரும்பிச் செல்லும் போது உலகளவில் நோய்த்தொற்றுகள் அதிகரித்து வருவதாகக் கூறுகிறது. காற்றில் நீடிக்காத ஆனால் பரப்புகளில் விழும் நீர்த்துளிகளால் மற்றவருக்குப் பரவும் ஆபத்து உள்ளது. அதனால்தான் கை கழுவுதல் ஒரு முக்கிய தடுப்பு நடவடிக்கையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

# கொரோனாவை கட்டுப்படுத்தும் தீவிர நடவடிக்கையில் அரசாங்கம்

கொரோனா வைரஸ் தாக்கம் உலகை அச்சுறுத்தி வல்லரசு நாடுகள் உள்ளிட்ட நாடுகளை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது. இது இலங்கையையும் விட்டு வைக்கவில்லை. கொரோனா வைரஸில் இருந்து மக்களைப் பாதுகாப்பதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலையில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கு அரசு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் கொரோனா தடுப்புச் செயலணி அமைக்கப்பட்டு பொலிசார், இராணுவத்தினர், கடற்படையினர், விமானப் படையினர் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் சுகாதார சேவையினர் உட்பட அரச அதிகாரிகள் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் கொரோனா நோய் தொற்றாளர்களை இனங்காணுதல் அவர்களைத் தனிமைப்படுத்துதல் அவர்களுக்கு ஆலோசனை வழங்குதல், சிகிச்சையளித்தல், நோய்த் தொற்றாளர்கள் தங்கியிருக்கும் பிரதேசங்களைத் தனிமைப்படுத்துதல் மற்றும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துதல் மூலம் கொரோனா கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று வழிபாட்டுத் தலங்கள், சந்தைகள், மக்கள் ஒன்றுகூடும் இடங்கள், பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், கல்விக் கல்லூரிகள் என்பன மூடப்பட்டு



கொரோனா தொற்று ஏற்படாமல் தடுப்பதற்கு பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயம்.

நாற்பதுக்கும் மேற்பட்ட தனிமைப்படுத்தல் முகாம்களில் தொற்றுக்குள்ளானதாக சந்தேகிக்கப்படும் நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டு கொரோனா தொற்று தொடர்பில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இனங்காணப்பட்டவர்கள் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர்.

இது மாத்திரமன்றி தொற்று நீக்கி தெளித்தல்,சமூக இடைவெளியைப் பேணுதல், ஊரடங்கு அமுல்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் வகையில் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள், அங்கவீனர்கள், மாதாந்த உதவித் தொகை பெறும் குடும்பங்கள், சிறுநீரக நோயாளர்கள் மற்றும் சுயதொழில் பாதிப்புக்குள்ளாகி வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு உதவித் தொகையாக முதல் கட்டமாக ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது.

அதேபோன்று இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக ஐயாயிரம் ரூபா மேற்குறிப்பிட்ட தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று கொரோனாவை கட்டுப்படுத்துதல் தொடர்பில் இரவு பகலாக செயற்பட்ட பாதுகாப்புப் படையினர், சுகாதாரப் பிரிவினர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோத்தர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளுக்கும் ஊக்குவிப்பு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா காரணமாக இலங்கையின் வருமானத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை, போக்குவரத்துத்துறை, விமான சேவைகள், ஏற்றுமதி இறக்குமதி, விவசாயம், மீன்பிடி என பல தொழில் துறைகள் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளன. இருந்த போதிலும் அரச ஊழியர்களுக்கான மாதாந்தச் சம்பளம் தடையின்றி வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட கொரோனா தொற்று மீண்டும் தலைதூக்கியுள்ளது. இந்த நிலையில் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
**(மருதமுனை தினகரன் நிருபர்)**

# முகக்கவசமின்றி நடமாட தடை: சந்தைகள், மதத் தலங்கள் பூட்டு

இன்று முதல் இரு வாரங்களுக்கு அம்பாறை மாவட்டத்தில் முகக்கவசமின்றி நடமாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வீட்டிலிருந்து வெளியேறும் போது முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும்.

அம்பாறை மாவட்ட அரசஅதிபர் டி.எம்.எல்.திசாநாயக்க தலைமையில் இடம்பெற்ற கொவிட்19 பாதுகாப்பு தொடர்பான அவசர விசேட மாநாட்டில் இதுபற்றி தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் மேலதிக அரச அதிபர் வே.ஜெகதீசன், இராணுவத்தின் 24வது படைப்பிரிவு கட்டளைத்துறை அதிகாரி திலக் வீரக்கோன், கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் குண.சுகுணன் அம்பாறை சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் பி.சேரசிங்க மற்றும் பிரதேச செயலாளர்கள் போக்குவரத்துத் துறை அதிகாரிகள், அனர்த்த முகாமைத் துஅதிகாரி உள்ளூராட்சி உதவிஆணையாளர், மதத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களாவன:

சகல ரியூட்டரிகளும் மூடப்பட வேண்டும். அதே போல் பிரதான சந்தைகளும் பூட்டப்பட வேண்டும். அதற்குப் பதிலாக முன்னர் கொரோனா முதலாவது அலை வந்த நேரம் எப்படி மைதானம் மற்றும் வீதியின் இரு மருங்கிலும் கடைகள் இடைவெளி விட்டு அமைக்கப்பட்டதோ அப்படி இயங்க வேண்டும்.

## அம்பாறை மாவட்டத்தில் கண்டிப்பான நடைமுறைகள்

சகல மதவழிபாட்டு தலங்களும் மூடப்பட வேண்டும். முக்கிய மதச்சடங்காக இருந்தால் குறித்த மதத் தலைவர் (பூசகர், பிக்கு, மௌலவி, போதகர்) ஓரிருவருடன் சமயச் சடங்கை நடத்தலாம். வழிபாட்டிற்காக பொதுமக்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. பஸ்ஸில் வான்களில் நின்று பயணிப்பதற்கும் தடை. ஆசனத்தில் அமர்ந்து சுகாதார நடைமுறைகளுடன் பயணிக்கவே அனுமதிக்கப்படும். மேலும் அம்பாறை கச்சேரியில் கொரோனா செயற்பாட்டு அறையொன்று 24மணி நேரமும் இயங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் அனர்த்த முகாமைத்துவ அதிகாரி, பொலிஸ் சுகாதாரப் பிரிவினர் ஆகியோர் இருப்பர்.

ஓரிருதினங்களில் மாவட்டத்தில் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தத்தம் பிரதேச வளங்களுக்கேற்ப கட்டுப்பாட்டு விதிமுறைகளை விதிப்பதற்காக அவசரக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, உள்ளூராட்சி மன்றத் தலைவர், பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் இக்கூட்டத்தை கூட்டி தீர்மானங்களை நிறைவேற்றி கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் உள்ள மக்கள் தகவல் தருபவர்களாக மாற வேண்டும். யாராவது வெளியூரிலிருந்து வந்தால் உடனடியாக அறியத் தர வேண்டும். அதற்கான அறிவித்தலை பொலிசார் பிரதேச செயலகத்தினர் பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

**(காரைதீவு குறூப் நிருபர்)**

# நகர்வலம்



# காணிப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண மாவட்டங்கள்தோறும் நீதிமன்றங்கள்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மக்கள் மத்தியில் நீண்ட காலமாகக் காணப்படும் காணிப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மாவட்ட அடிப்படையில் காணி விவகார நீதிமன்றங்களை ஸ்தாபிக்க தீர்மானித்துள்ளதாகவும் இதற்கான யோசனையை அமைச்சரவையில் விரைவில் சமர்பிக்கவுள்ளதாகவும் காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரம் கிழக்கு நுவரகம் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற காணி தொடர்பிலான பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகள் மற்றும் மக்களுடன், நடத்திய சந்திப்பிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



இங்கு உரையாற்றிய அமைச்சர் தெரிவித்ததாவது:

பொது மக்கள் மத்தியில் காணப்படும் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு காணியே முக்கிய காரணியாகவுள்ளது.காணி விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கும் பிச்சினைகள் இறுதியில் பாரதூரமான குற்றச் செயல்களில் முடிகின்றன. காணி தொடர்பிலான வழக்கு விசாரணைகள் 25 முதல் 30 வருடகாலம் வரை நீண்டு செல்கின்றன. சிலவேளைகளில் வழக்கு தாக்கல் செய்தவர் நியாயம் கிடைக்குமுன்பே மரணித்தும் விடுகின்றார். ஆகவே காணிப் பிரச்சினை தொடர்பிலான விசாணைகளை மூன்று மாத காலத்திற்குள் முடிக்க வேண்டும்.

பின்னர் இப்பிச்சினைக்கு தீர்வு காணும்பொருட்டு மாட்ட ரீதியில் நீதிமன்றங்களை நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இது தொடர்பில் அமைச்சு மட்டத்திலும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானம் தொடர்பான யோசனைகள் அமைச்சவையில் சமர்பிக்கப்படும். அரச காணிகளில் சட்டவிரோதமான முறையில் குடியேறியுள்ள பொது மக்கள் வேறொரு இடத்தில் குடியமர்த்தப்பட உள்ளனர். இவ்விடங்களுக்கான காணிகளும் இவர்களுக்கு வழங்கப்படும்.

காணி விவகாரம் தொடர்பிலான பிரச்சினைக்கு உடனடியாக முரன்பாடின்றி தீர்வுகளை முன்னெடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இதுபற்றி சம்பந்தப்பட்டோருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# தங்க நகைகள், பணங்களை திருடி வந்த நபர் கைது

**புத்தளம் விசேட நிருபர்**

தங்க நகைகள் மற்றும் பணம் என்பவற்றைக் கொள்ளையிட்ட பல சம்பவங்களுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் சந்தேக நபரை, இம்மாதம் 14ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு சிலாபம் மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார். வாரியாபொல பிரதேசத்தைச் சேர்ந்த புஞ்சி குருல்லா என அழைக்கப்படும் நபர் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சிலாபம் பிரிவின் குற்ற விசாரணைப் பிரிவின் கீழ், செயற்படும் தீர்க்கப்படாத குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகளால் இந்நபர் கைது செய்யப்பட்டிருந்தார். இந்நபர் சிலாபம் விலத்தவ பிரதேசத்தில் வைத்து 3200 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இவரை, ஏழு தினங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டது. நீர்கொழும்பு, குருநாகல், குளியாபிட்டி, சிலாபம், தங்கொட்டுவ, மாராவில, நாத்தாண்டி, வென்னப்புவ உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் பல வீடுகளில் இந்நபர் இக்கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

வைத்தியர்கள், பொறியியலாளர்கள் போன்றவர்கள் மற்றும் வெளி நாடுகளில் வசிப்போரின் வீடுகளிலே,இவர் கொள்ளையிட்டுள்ளார். காலை 6 மணியிலிருந்து பகல் 12 மணி வரையான காலப்பகுதியிலேயே இந்நபர் பொருட்களைத் திருடியுள்ளார்.

வீடுகளிலிருந்த தங்க நகைகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு பணங்களே, இவரால் களவாடப்பட்டுள்ளது. இவ்வாறு திருடப்பட்டு குருநாகல் பிரதேச நபர் ஒருவரிடம் விற்றிருந்த 17 பவுண் தங்க நகைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

## கிணற்றடியில் விழுந்து மரணம்

**புத்தளம் விசேட நிருபர்**

மது போதையில் வீட்டுக் கிணற்றடிக்கு சென்ற 59 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்தார். நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொபேஹேன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹபவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தச்சு வேலை செய்து வந்த இந்நபர், தனது மகன் வெளிநாடு சென்றதன் பின்னர், மருமகள் மற்றும் மகனின் இரு பிள்ளைகளைப் பார்த்துக் கொண்டு மகனின் வீட்டில் வசித்து வந்துள்ளார். இவர், தினமும் மதுபானம் அருந்தும் நபரென விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு வழமை போன்று மதுபோதையில் வந்துள்ள இந்நபர், இரவு 11.30 மணியளவில் சமையலறையில் சாப்பிடும் சத்தம் கேட்டதாகவும், அதிகாலை 5 மணியளவில் எழுந்து பார்த்த போது வீட்டின் அருகில் உள்ள கிணற்றடியில் உயிரிழந்து,கிடந்ததாகவும் அவரது மருமகள் தெரிவித்துள்ளார்.





தேசிய நன்னீர் அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கலாவெவ, விஜிதபுர கடற்றொழில் மீன்பிடி மற்றும் நன்னீர் அலுவலக பயிற்சி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரு நாள் செயலமர்வின் இறுதி நாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இராஜாங்க அமைச்சர்களான காஞ்சன விஜேசேகர,செஹான் சேமசிங்க ஆகியோர் இந்நிகழ்வில்,மீன் தொட்டிகளை பார்வையிடுவதை படங்களில் காணலாம். படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



பேருவளை,சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியில் சிறுவர் தின நிகழ்வுகள் அண்மையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இதன்போது தரம் 4 இல் கல்வி பயிலும் மாணவிகள் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் குழுவாக எடுத்துக் கொண்ட படம்.



புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயதுன்ன மற்றும் புத்தளம் மாவட்ட செயலாளர் சந்திரசிரி பண்டார ஆகியோருக்கு புத்தளம் மாவட்ட சர்வமத ஒன்றியத்தின் சார்பாக சிங்கள மொழி பெயர்ப்பு புனித அல் குர்ஆன் பிரதி மற்றும் இஸ்லாமிய புத்தங்கள் வழங்கப்பட்டன. புத்தளம் மாவட்ட ஜம்இயத்துல் உலமா தலைவர் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம், இவற்றை வழங்குவதையும் புத்தளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வெங்கட சுந்தாராம குருக்களையும் படத்தில் காணலாம். படங்கள்: புத்தளம் தினகரன் நிருபர்

# வடிகானை சுத்தம் செய்தவர் கானுக்குள் விழுந்து மரணம்

**ஹேமந்த டெப்**

மட்டக்குளி பிரதேசத்தில் பிரபல வர்த்தக தொகுதியில் அமைக்கப்பட்டிருந்த வடிகானில், நீரை அகற்றச் சென்ற கொழும்பு நகர சபையின் ஓய்வு பெற்ற ஊழியரொருவர், வடிகானில் வீழ்ந்து மரணமடைந்தார்.

கிராண்ட்பாஸ் சமகிபுர பிரதேசத்தில் வசித்த சேரசிங்க பதிரனகே சோமரத்ன எனும் அறுபது வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே

இவ்வாறு மரணமடைந்தார். கொழும்பு நகர திடீர் மரண விசாரணையாளர், சட்டத்தரணி இரேஷா தேசானி சமரவீர முன்னிலையில் நடைபெற்ற மரண விசாரணையில் சாட்சியமளித்த சம்பவத்தை நேரில் கண்ட சிரியானந்த சில்வா (60) கூறியதாவது:

மட்டக்குளி கார்கிள்ஸ் வர்த்தக தொகுதியில் அமைந்துள்ள வடிகானில், நீரை வெளியேற்றும் வேலைகள் அண்மையில் (03) இடம்பெற்றன. இப்பணியில் ஈடுபட்ட குறித்த அந்நபர், வடிகானில் திடீரென விழுந்தார்.

நாம் உடனடியாக அவரை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது, அவர் மரணமடைந்திருந்தார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் மகளான சேரசிங்க பதிரனகே நில்மினி (28) என்பவரும் இதில் சாட்சியமளித்தார்.

கொழும்பு நீதிமன்ற வைத்தியர் டபிள்யூ. ஆர். ஏ. எஸ். ராஜபக்ஷ இறந்தவரின் மரண பரிசோதனையை நடத்தினார். குறிப்பிட்ட வைத்திய அறிக்கை மற்றும் சாட்சியங்களை கருத்தில் கொண்டு கொழும்பு நகர திடீர் மரண பரிசோதகர், சட்டத்தரணி இரேஷா தேசானி சமரவீர திடீர் விபத்தால் இம்மரணம் ஏற்பட்டதெனத் தீர்ப்பளிதார்.

சம்பவம் தொடர்பாக மட்டக்குளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு



மேல் மாகாணம், பிலியந்தலை கல்வி வலயத்துக்குட்பட்ட இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியை, திருமதி சங்கர நாராயண ஐயர் கல்விச் சேவையாற்றி அறுபதாவது அகவையை நேற்று (06) செவ்வாய்க்கிழமை பூர்த்தி செய்து, ஆசிரியர் சேவையிலிருந்தும் ஓய்வு பெற்றார்.

யாழ்ப்பாணம் காரை நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், அக் கல்லூரியில் கல்வி கற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தனது கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். புஸ்சல்லாவை, சரஸ்வதி வித்தியாலயத்தில் இந்து நாகரீக ஆசிரியராக கடமையேற்று பணிபுரிந்த இவர், பின்னர் 20.05.1997 ஆம் ஆண்டு கொழும்பு இந்துக் கல்லூரியில் பணியாற்றியதுடன், இரத்மலானையில் இணைந்து (06) ஓய்வு பெறும்வரை 23 வருடங்களாகக் கடமையாற்றினார். இவர் பிலியந்தலைக் கல்வி வலயத்தில் ஆசிரியர் ஆலோசகராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# வெவ்வேறு விபத்துக்களில் இருவர் உயிரிழப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் பொலிஸ் வலயத்தின் இரு பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளதாக வலய போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர். கஹடகஸ்திகிலிய மற்றும் கெகிராவ பொலிஸ் பிரிவுகளிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.கெகிராவ தலாவ வீதியில் கெகிராவ பகுதி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், வேகத்தை இழந்து விபத்துக்குள்ளானதில் 24 வயதுடைய சேனபுர பகுதியை வசிப்பிடமாக கொண்ட இளைஞர் உயிரிழந்துள்ளார்.இவ்விபத்துகடந்த (03) திகதி இரவு 8.45 மணியளவில் இடம்பெற்றது. கஹடகஸ்திகிலிய மெகிச்சாவ பாளுவெவ பகுதியில் 04 ஆம் திகதி மாலை கார் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதி, விபத்துக்குள்ளானதில் சமாதிகம சீப்புகுளம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட 23 வயதுடைய இளைஞர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். காரின் சாரதியும் காயமடைந்து கஹட்டகஸ்திகிலிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக அநுராதபுரம் வலய போக்குவரத்து பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## சூதாட்டத்தில் ஈடுபட்ட ஒன்பது பேர் கைது

**புத்தளம் விசேட நிருபர்**

சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த நவகத்தேகம பிரதேச சபை உறுப்பினரைக் கைது செய்ததாக நவகத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வுறுப்பினர், நவகத்தேகம மியெல்லாவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சிலர் நவகத்தேகம நகருக்கு அண்மையில் அமைந்துள்ள வீடொன்றினுள் இரகசியமான முறையில் சூதாட்டத்தில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலையடுத்து, உடன் செயற்பட்ட நவகத்தேகம பொலிஸார் வீட்டை முற்றுகையிட்டனர். இதன் போது,பிரதேச சபை உறுப்பினர் உட்பட ஒன்பது பேரை பொலிஸார் கைது செய்தனர். அவ்விடத்திலிருந்து 63 ஆயிரம் ரூபா பணத்தையும் பொலிஸார் கைப்பற்றினர்.

## கடலை வியாபாரத்தின் பேரில் ஹெரோயின் விற்பனை: 07 பேர் கைது

**புத்தளம் விசேட நிருபர்**

பன்னல பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில், வடை மற்றும் கடலை விற்பனை செய்யும் போர்வையில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட வியாபாரி ஒருவர் உள்ளிட்ட ஏழு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களிடம் 17 கிராமும் 770 மில்லி கிராமும் எடையுடைய ஹெரோயினும் கைப்பற்றப்பட்டதாக பன்னல பொலிஸார் தெரிவித்தனர்.

19 - 32 வயதுக்கு இடைப்பட்ட ஹெரோயின் போதைக்கு அடிமையானவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்காளாவர்.

## உலக தபால் தினத்தை முன்னிட்டு புத்தளத்தில் இரத்ததான நிகழ்வு

**புத்தளம் தினகரன் நிருபர்**

உலக தபால் தினத்தை முன்னிட்டு, இரத்த தானம் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் பிரதான தபால் அலுவலகத்தில் இன்று புதன்கிழமை (07) காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இந்த இரத்த தான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பொது மக்கள் இதில் ஆர்வத்தோடு கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

உலக தபால் தினம் ஒக்டோபர் 09 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு மாநகர சபையின் செயற்பாடுகள் ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுக்கு சிறந்த முன்மாதிரி

**திறப்பனை தினகரன் நிருபர்**

நாட்டின் மிகப்பெரிய உள்ளூராட்சி மன்றமான கொழும்பு நகரசபையில் போட்டியிட்ட ஐக்கிய சமாதான கூட்டமைப்புக்கு 4700 வாக்குகளை வழங்கிய மக்களுக்கு மீண்டும் நன்றி தெரிவிப்பதாக ஐக்கிய சமாதன கூட்டமைப்பின் புதிய உறுப்பினர் கலீலுர்ரஹ்மான் தெரிவித்தார்.

கட்சியின் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் காதர் பதவி விலகியதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே, கலீலுர்ரஹ்மான் நியமிக்கப்பட்டார்.

அவர் தனது கன்னியுரையில் தெரிவித்ததாவது:காதர் ராஜினாமா செய்ததாலே,எனக்கு இப்பதவி கிடைத்தது. இதற்காக அவருக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன்.

உலக அரசியலிலும் தேசிய அரசியலிலும் பல மாற்றங்களை ஏற்படுத்திய தலைவர்களை உருவாக்கிய கொழும்பு மாநகர சபையில் உறுப்பினராக என்னை நியமித்த கட்சித் தலைமையின் ஜனநாயகம் பாராட்டுக்குரியது. கொழும்பு ஒரு வணிக தலைநகரம் மட்டுமல்ல, மக்கள் ஒற்றுமையுடன் வாழும் ஒரு வரலாற்று நகரமுமாகும். கொழும்பில் வாழும் பெரும்பான்மை மக்களிடையே இனம், மதம், சாதி, வேற்றுமைகள், பிரிவினைகள் எதுவும் இல்லை.

இந்த மாநகர சபை முற்போக்கான மற்றும் தொழிற்சங்க தலைவர்களை உருவாக்கியுள்ளது.

மாண்புமிகு அரசியல்வாதிகள் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, ஜே.ஆர். ஜெயவர்தன, ரணசிங்க பிரேமதாச, வியன் குணவர்தன, ரொபர்ட் குணவர்தன, ஏ.இ. குணசிங்க, என்.எம். பெரேரா, வின்சன் பெரேரா, சங்கரபிள்ளை சரவணமுத்து, ராசிக் ஃபரீத் போன்ற தேசிய அளவிலான தலைவர்களும்

இங்கேயே பயிற்றுவிக்கப்பட்டனர். மக்களின் பொது நலனைக் கருத்திற் கொண்டே எனது சேவைகள் அமையும். இந்தப்பணிகளுக்காக கட்சி பேதங்களை மறந்து நான் கை கோர்க்கத் தயார். தற்போதைய மேயரின் கீழ் பணியாற்றுவது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. கொழும்பு மாநகர சபை அனைத்து மதங்கள், கலாசாரங்களையும் மதிக்கும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

இந்நடவடிக்கைகள் ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கு சிறந்த முன்னுதாரணமாக அமையும் என்பது எனது நம்பிக்கை என்றும் அவர் குறிப்பிட்டார்.




மலையகத்தில் இன்றைய கால சூழ்நிலையில் முறையற்ற விதத்தில் கழிவுகள் முகாமை செய்யப்படாமையால் பெரும்பாலும் தோட்டப்புற மக்கள் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றனர். எமது நாட்டைப் பொறுத்தவரையில் நகர சபை, பிரதேச சபை பகுதிகளில் வசிக்கும் மக்களிடையே குப்பை கூளங்களை எடுத்துச் செல்வதற்கான ஒரு திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அதற்கேற்றவாறு அம் மக்களும் கழிவுகளை தரம் பிரித்து கையளித்தும் வருகின்றனர். ஆனால் மலையக தோட்டப்புறங்களில் தோட்ட நிர்வாகத்தில் அக்காலத்தில் ஒரு பொதுவான இடத்தில் தான் (குப்பைக்குழி) அமைக்கப்படும்.

# பெருந்தோட்ட கழிவு முகாமைத்துவம்



ஒரு குழியை ஆழமாக வெட்டி, அதிலேயே குப்பைகளை அகற்றி வந்தனர். இது இவ்வாறே காலங்காலமாக தொடர்ந்து வந்தது. ஒருவழியாக இவை நாளாக உக்கிய உரமாகியது. பின் தோட்டங்கள் செய்பவரகள் அதனை உரமாக பயன்படுத்தி வந்தனர். ஆனால் அந்த குழியில் உடைந்த கண்ணாடிப் போத்தல்கள், பிளாஸ்டிக் பொருட்கள் என்பன மண்ணில் புதைக்கப்பட்டே வந்தன. இருந்தாலும் இதுவொரு பாரிய பிரச்சினையாக இருக்கவில்லை. ஆனால் இன்றோ லயன் வீடுகளுக்கு புறம்பாக தனி வீட்டுத் திட்டம் என்பன அமைக்கப்பட்டுள்ள போதும் கழிவுகள் முறையாக அகற்றப்படுவதில்லை. அதாவது ஒரு பொது இடத்தை மாத்திரமே பல குடும்பங்கள் பயன்படுத்தி வருவதால் இடப்பற்றாக்குறை ஏற்படுகிறது. அத்தோடு குப்பைகள் வகைப் பிரித்தோ ஏனைய எந்த மார்க்கமோ இன்றி அனைத்துக் குப்பைக் கழிவுகளும் ஒன்றாகவே கொட்டப்பட்டு வருகின்றன. அதாவது கண்ணாடி, பிளாஸ்டிக், பொலித்தீன், கடதாசி, சமையலறைக் கழிவுகள், சுகாதார நப்கீன்கள், இரும்புத்துண்டுகள், பல்ப்கள், தகரத்துண்டுகள் என இவற்றின் பட்டியல் நீண்டுகொண்டே செல்லும்.





இப்படி முறையற்ற விதத்தில் குப்பைகள் ஒன்று சேர்வதால் இவற்றை பராமரிப்பதும் கடினம். எனவே நிர்வாகங்களும் இவற்றிற்கு முடிவு காண முடியாது தவிக்கின்றனர். சில தோட்டப்புறங்களில் சில முகாமையாளர்கள் சில குப்பை தொட்டிகளை வழங்கி அதில் குப்பைகளை சேகரிக்க வழி செய்தாலும் மிருகங்கள் கிண்டிக் கிளறி பாதைகளில் போட்டு சுகாதார சீர்கேடுகளை ஏற்படுத்துகின்றன. இவை மழைக் காலங்களில் நீரில் கலந்து இனம் காண முடியாத நோய்களை உருவாக்குகின்றன.

இதற்கு தற்காலிகமாக தீர்வுகளோ நிரந்தர தீர்வுகளோ இல்லை. இதற்கென ஒரு கொள்கை ரீதியான திட்டம் வகுக்கப்படவேண்டும். பிரதேச சபைகள் இதனை தமது பொறுப்பில் எடுக்க வேண்டும். பின்னர் அதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

மக்களிடம் நேரடியாக சென்று இது பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

தோட்டப் பகுதிகளில் குப்பை முகாமைத்துவம் எவரும் அதிகமாக அறிந்த சொல் அல்ல. குப்பை கூளங்கலால் ஏற்படும் சூழல் பாதிப்பு மற்றும் அதனால் மனித இனத்துக்கு வரும் மறைமுக விளைவுகள் பற்றிய தெளிவற்றவர்களாகவே வாழ்கின்றனர்.



**சுந்தரராஜ் சுபாஷினி...**

# 'மிருகங்கள் வாழ்வதற்கான உரிமையை பாதுகாக்க வேண்டும்'

*டொக்டர். சமித் நாணயக்கார*

விலங்குகள் பொருட்கள் அல்ல. ஆனால் மனிதர்களை போன்று இந்த பூமியில் வாழ்வதற்கான உரிமையை கொண்ட உயிரினங்களாகும்.

பௌத்த தரிசனத்திற்கமைவாக கட்டியெழுப்பப்பட்ட கலாசாரத்திற்கு உரிமை கூறும் நாம், மிருகங்கள் வாழ்வதற்கான உரிமையை பாதுகாக்க வேண்டியுள்ள போதிலும், நிகழ்காலத்தில் மிருகங்களுக்கு எதிராக இடம்பெறும் இம்சைகள், வதைகள் மற்றும் அடக்குமுறைகளை தடுப்பதற்கு முடியாத நிலையிலுள்ளோம்.

மிருகங்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்க வேண்டிய தேவை எமக்கு இருந்தாலும், நடைமுறையிலுள்ள சட்ட கட்டமைப்பு அதற்கு பாரிய தடையாக உள்ளது என்று டொக்டர். சமித் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,...

நூற்றாண்டுக்கு மேற்பட்ட பழைமையான சட்டங்கள் பலமாக இல்லாமை காரணமாக, அதற்காக எதனையும் செய்வதற்கு நிகழ்கால சமூகத்தால் முடியாதுள்ளது. இலங்கையில் தற்போது 1907 ஆம் ஆண்டு மிருக நல உரிமைகளை பாதுகாப்பதற்காக வரையறுக்கப்பட்ட சட்ட கட்டமைப்பே உள்ளது.

தற்போதுள்ள பழைய சட்டத்திற்கு பதிலாக சர்வதேச தரங்களுக்கமைவாக தயாரிக்கப்பட்ட மிருக நலன் புரி சட்டமூலத்தை, இலங்கை நீதி ஆணைக்குழுவானது தற்போது அரசாங்கத்திற்கு சிபார்சு செய்துள்ளது.

கடந்த காலங்களில் மிருகங்களுக்கு எதிராக இடம்பெற்ற இம்சைகள் தொடர்பாக மக்கள் அதிர்ச்சியடைந்த சம்பவங்கள் பல இடம்பெற்றபோதிலும், மிருகங்களின் பாதுகாப்பு தொடர்பாக எந்தவொரு சட்ட வரைவும் பழைமையான அந்த மிருக நல சட்டமூலத்தில் உள்ளடக்கப்படாமையால் அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாதுள்ளது. அந்த வெற்றிடத்தை நிரப்புவதே புதிய மிருக நலன்புரி சட்டமூலத்தின் நோக்கம்.

அடிக்கடி அப்பாவி மிருகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இம்சைகள், அவற்றை கொல்லுவதை சட்டரீதியாக தடுத்து நிறுத்துவதற்கு தற்போதைய சட்டத்தால் முடியாதுள்ளபோதிலும், புதிய சட்டமூலத்தில் அறிமுகப்படுத்தியுள்ள சட்ட வரைவில் மிருகங்களின் பாதுகாப்பு நன்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மிருக இம்சை தொடர்பாக யாராவது குற்றவாளியானாலும் தற்போதைய சட்டத்தின் கீழ் 20 ரூபா தண்டம் மற்றும் மூன்று மாத சிறைத்தண்டனைக்கு உட்படுவர் என்பதுடன் இது மிருக வதையை தடுத்து நிறுத்துவதற்கு ஒருபோதும் போதுமானதல்ல.

இந்த பலவீனங்களை தவிர்த்து, உத்தேச புதிய சட்டத்தின் கீழ், ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட தண்டம் மற்றும் நீண்டகால சிறைத் தண்டனை வழங்க சிபார்சு செய்யப்பட்டுள்ளதுடன் அனைத்து மிருகங்களும் இதனால் பாதுகாக்கப்படும்.

நிகழ்காலத்தில் தண்டனை வழங்கப்படும் குற்றம் என சில மிருக வதைகளே உள்ளன. புதிய சட்டமூலம் ஊடாக அதிகளவு வதைகளுக்கு தண்டனை வழங்கப்படும்.

இது தவிர மிருக நலன்புரி அதிகார சபையை ஸ்தாபிப்பதும் புதிய சட்டமூலம் ஊடாக சிபார்சு செய்யப்பட்டுள்ள இன்னொரு முக்கிய அம்சமாகும்.

இந்த புதிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான இறுதி கட்டத்தை தற்போது அடைந்துள்ளதுடன் சமூகத்தில் ஏற்படும் விழிப்புணர்வு ஊடாக அதனை துரிதமாக நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பதே எமது நோக்கம்.


www.nlb.lk

05.10.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 734,933

பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 28,662,240.00

ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 27

NLB NATIONAL LOTTERIES

Mega POWER மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 633
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 05/10/2020

ஆங்கில எழுத்து X சுப்பர் இலக்கம் 14 வெற்றி இலக்கங்கள் 19 32 64 73

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 04 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 121 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 286 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 7,237 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 4,762 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 118,774 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 21,665 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ .52,108,839.60

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.11,379,279.20
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.18,840,400.80

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 4,386,960.00

தேசிய லொத்தர் சபை www.nlb.lk

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2561 சீட்டிழுப்பு திகதி 05.10.2020

ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 12 17 23 44

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 06 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 198 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 425 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10709 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6981 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 176045 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 31885 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 226,250

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 7,929,740.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,549,841.20

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324
Fax: 0114 663 416 Web: www.nlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 05 / 10 / 2020 1541 சீட்டிழுப்பு இலக்கம்

சுப்பர் இலக்கம் 12 வெற்றி இலக்கங்கள் 18 39 47 61

| | | | |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | - |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 15,000.00 | 15 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 113 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 391 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 5038 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 4522 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 65076 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாததிரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 16255 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 2,817,940.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியில் இருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,144,078.28

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல. 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01.
Phone : 0114 607 000, 0112 324 324
Fax : 0114 663 416 Web : www.nlb.lk

வாசனா சம்பத Vasana Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 1619
திகதி 2020.10.05

வெற்றி இலக்கங்கள் I
அன்றும் இன்றும் வீரன்
வெற்றி இலக்கங்கள் 09 15 55 58

| பரிசு | பரிசுக்கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 1,000,000/- | - |
| 02 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000/- | 04 |
| 03 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 2,000/- | 90 |
| 04 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500/- | 180 |
| 05 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 100/- | 3,899 |
| 06 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 60/- | 2,421 |
| 07 ஆம் பரிசு | 1 இலக்கம் மட்டும் பொருந்துமாயின் | 20/- | 59,871 |
| 08 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் பொருந்துமாயின் | 20/- | 9,786 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 2,598,300.00

அடுத்த சீட்டிழுப்புக்கான ஸ்டார் சுப்பர் பரிசு ரூ. 24,216,550.40

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
PRIZES OF FIVE LAKHS OR OVER ARE LIABLE TO GOVT TAXES. WINNERS MUST PRODUCE NATIONAL IDENTITY CARD TO RECEIVE PRIZES. WINNING TICKETS ARE VALID FROM THE DAY OF THE DRAW FOR A PERIOD OF SIX MONTHS ONLY.

சீட்டிழுப்பு இலக்கம் : 4266 உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத

திகதி: 05-10-2020

வெற்றி எழுத்து W வெற்றி இலக்கங்கள் 5 1 1 0 0 8

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 5 1 1 0 0 8 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 1 1 0 0 8 | ரூபா. 100,000/- | 13 |
| 3ஆம் பரிசு | 1 0 0 8 | ரூபா. 10,000/- | 114 |
| 4 ஆம் பரிசு | 0 0 8 | ரூபா. 1,000/- | 1,175 |
| 5ஆம் பரிசு | 0 8 | ரூபா. 100/- | 11,684 |
| 6ஆம் பரிசு | 8 | ரூபா. 20/- | 116,100 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 5 1 1 0 0 | ரூபா. 10,000/- | 10 |
| 8ஆம் பரிசு | 5 1 1 0 | ரூபா. 1,000/- | 110 |
| 9ஆம் பரிசு | 5 1 1 | ரூபா. 100/- | 1,122 |
| 10ஆம் பரிசு | 5 1 | ரூபா. 50/- | 11,494 |
| 11ஆம் பரிசு | W | ரூபா. 20/- | 46,350 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 10,929,300.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.21,827,893.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை
32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

## பெரும்பான்மையினர் ஒன்றிணைந்து எடுக்கும் தீர்மானம் ஜனநாயகம் அல்ல

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

*ஓமந்தை விஷேட நிருபர்*



பெரும்பான்மையினர் ஒன்றிணைந்து எடுக்கும் தீர்மானங்கள் தான் ஜனநாயகம் என்று பலர் நினைக்கிறார்கள். சிறு தொகையினராக உள்ளவர்களிற்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் பெருந்தொகையானவர்களின் விருப்பத்திற்கு இணங்க ஏற்படுத்தப்படும் ஜனநாயகமே உண்மையான ஜனநாயகம் என தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

வவுனியாவிற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அவர் இளைஞர்கள் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் உரையாற்றும் போது,

ஜனநாயகத்திற்கு இளைஞர்கள் தேவை. இளைஞர்களிற்கு ஜனநாயகம் தேவை. தற்போது ஜனநாயகத்தை பற்றி பேசுபவர்கள் எங்களைப் போன்ற வயது முதிர்ந்தவர்களாகவும் அல்லது காலாவதியானவர்களாகவுமே இருக்கின்றனர். அதைபற்றி பேசுவதற்கு தேவையானவர்கள் இளைஞர்களே.

ஜேசுவும், நபியும், புத்தனும், இளைஞர்களாக இருந்த போதே தமது சமயப் பணிகளை மேற்கொண்டனர்.

இந்து மதத்திலும் அவ்வாறு இருக்கிறது. இப்படியிருக்கும்போது இளைஞர்களினால் ஒன்றும் செய்ய முடியாது என்று எப்படி நாங்கள் கூற முடியும்.

உங்களது இதயத்தில் ஜனநாயகம், சமத்துவம் தொடர்பாக தீப்பொறி ஒன்று எரிந்துகொண்டே இருக்கும். அவை ஒன்றிணைந்து எரிமலை சுவாலையாகும். அது வன்முறை எரிமலையாக மாறக்கூடாது. ஜனநாயகத்தை நோக்கிச் செல்கின்ற அமைதியான எரிமலையாக மாறவேண்டும்.

எனவே இளைஞர்களை ஜனநாயகம் நோக்கி ஈர்த்தெடுக்க வேண்டும். அவர்களும் தங்களது பங்களிப்பை ஜனநாயகத்திற்கு வழங்குவதற்கு முன்வரவேண்டும். பெரும்பான்மையினர் ஒன்றிணைந்து எடுக்கும் தீர்மானங்கள் தான் ஜனநாயகம் என்று பலர் நினைக்கிறார்கள்.

உண்மையான ஜனநாயகம் என்பது சிறு தொகையினராக உள்ளவர்களிற்கு எவ்விதமான பாதிப்பும் நிகழாத விதத்தில் பெருந்தொகையானவர்களின் விருப்பத்திற்கு இணங்க ஏற்படுத்தப்படும் ஜனநாயகமே உண்மையான ஜனநாயகம். ஆட்சியில் மாத்திரமல்ல சாதாரணமாக ஒரு மரணசங்கங்களில் கூட பெருந்தொகையினர் சிறுதொகையினரது உரிமைகளை நசுக்கி செயற்படும் விதத்தினை நாம் காண்கின்றோம்.

பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கேற்ப ஆட்சி நடைபெற வேண்டும் என்பதை கருத்தில் கொண்டிருப்பதே மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பெரும் தடைக்கல்லாக அமைந்திருப்பதுடன், அந்தநாடுகள் முன்னேற முடியாமல் தவிப்பதற்கும் காரணமாகின்றது என்றார்.

## கொவிட் 19 தொற்றுக்கு எதிராக ஸ்தீரனமான நடவடிக்கைகள்

### யாழ். பல்கலை துணைவேந்தர்

*சுண்டுக்குளி நிருபர்*



நாட்டில் எழுந்துள்ள கொரோனாப் பெருந்தொற்றுப் பரவல் அச்சுறுத்தல் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஸ்தீரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் துணை வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தெரிவித்தார்.

நாட்டில் எழுந்துள்ள கொரோனாப் பெருந்தொற்றுப் பரவல் அச்சுறுத்தலையடுத்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி மீளாய்வு செய்வதற்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாலை, துணைவேந்தர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில், நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, பதிவாளர், அனைத்துப் பீடங்களினதும் பீடாதிபதிகள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர், மாணவர் நலச் சேவைகள் உதவிப் பதிவாளர் உட்படப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பரிசோதனைகளை நெறிப்படுத்தும் வகையிலும், பீடாதிபதிகளை ஒருங்கிணைக்கும் வகையிலும், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவத் துறையைச் சேர்ந்த மருத்துவர் எஸ். சுரேந்திரகுமாரன் செயற்படவுள்ளார் என துணைவேந்தர் குறிப்பிட்டார்.

## க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு வடக்கில் 20,325 மாணவர்கள்

*கந்தர்மடம் நிருபர்*

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் இருந்து 116 பரீட்சை நிலையங்களிலும் 20 ஆயிரத்து 325 மாணவர்கள் தோற்றவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

இவர்களில் 16 ஆயிரத்து 949 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 3 ஆயிரத்து 379 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் உள்ளடங்குகின்றனர்.

இதேநேரம் 11ஆம் திகதி நடைபெறும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 18 ஆயிரத்து 387 மாணவர்கள் 212 பரீட்சை மண்டபங்களில் பரீட்சைக்கு தோற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குளத்தில் வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

*புதுக்குடியிருப்பு நிருபர்*

புதுக்குடியிருப்பு பகுதியில் சிறுவன் ஒருவன் குளத்தில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளதுடன் கிளிநொச்சி உருத்திரபுரத்தினை சேர்ந்த பாலசுப்பிரமணியம் பாணுசன் என்ற 11 வயதான சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருகையில்,

கிளிநொச்சியிலிருந்து பாடசாலை விடுமுறை காரணமாக வள்ளிபுனத்தில் உள்ள உறவினர்களின் வீட்டிற்கு சொன்றுள்ளார்கள். இடைக்கட்டு பகுதியில் சிறுவர்களுடன் நாவல்பழம் பறித்து சாப்பிட்டுவிட்டு இடைக்கட்டு குளத்தில் குளிக்க சென்றவேளை நீரில் மூழ்கி தத்தளித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் குறித்த சிறுவனுடன் சென்ற ஏனைய சிறுவர்கள் அயலவர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்ட சிறுவன் மூங்கிலாறு ஆதார மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்ட போது அங்கு உயிரிழந்துள்ளான்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுவருவதுடன் சிறுவனின் சடலம் மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சமாதான நீதவான் தனிமைப்படுத்தலில்

*ஓமந்தை விஷேட நிருபர்*

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் பணியாற்றிய கூமாங்குளம் பகுதியில் வசித்து வரும் சமாதான நீதவான் ஒருவர் நேற்று காலை பொலிசார் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

வவுனியா கூமாங்குளம் பகுதியில் வசித்து வரும் குறித்த சமாதான நீதவான் வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் சமாதான நீதவனாக கடமையாற்றி வருகின்றார்.

இந்நிலையில் அவரிடம் ஒப்பம் பெற்றுக் கொள்வதற்காக கொரோனா நோய் தொற்றுக்குட்பட்ட தொற்றாளார் ஒருவர் வந்து சென்றதை உறுதிப்படுத்தியதையடுத்து அவரைத் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

## வவுனியாவில் குடும்பம் ஒன்று தனிமைப்படுத்தலில்

*ஓமந்தை விஷேட நிருபர்*

வவுனியா தோணிக்கல் ஆலடிப் பகுதியில் வசிக்கும் குடும்பமொன்றினை அண்மையில் சந்தித்த ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அக் குடும்பத்தினர் வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என வவுனியா சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கூறுகையில்,

வவுனியா ஆலடிப்பகுதியில் வசிக்கும் குடும்பமொன்றினை அண்மையில் ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்ணொருவர் சந்தித்து சென்றுள்ளார்.


இந்நிலையில் குறித்த பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து அவர் வவுனியாவில் சந்தித்த குடும்பத்தினரை தற்போது தனிமைப்படுத்தியுள்ளோம்.

எனவே குறித்த பகுதிக்கு பொது மக்களை செல்ல வேண்டாம் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

தோணிக்கல் ஆலடிப்பகுதியில் புகையிரத கடவைக்கு அருகாமையில் சிறிய கடையொன்றினை நடத்தி வரும் குடும்பமொன்றே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனையும் இடம்பெறவுள்ளது.

## ஆவா வினோதனின் வீட்டின் மீது தாக்குதல்

*சுண்டுக்குளி நிருபர்*



ஆவா வினோதனின் வீட்டுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் ஒன்று வீட்டிலிருந்த பொருட்களை சேதப்படுத்தி மோட்டார் சைக்கிள்கள் இரண்டை தீவைத்து எரியூட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணுவில் துரை வீதியில் உள்ள வீட்டிலேயே நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த 26ஆம் திகதி யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் மானிப்பாயைச் சேர்ந்த தனுரொக் என்ற இளைஞனை வாளால் வெட்டி காயப்படுத்திய குற்றச்சாட்டில் ஆவா வினோதன் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்த நிலையில் எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையிலேயே ஆவா வினோதனின் வீட்டில் வன்முறைக் கும்பல் ஒன்றால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## தென்னிலங்கையின் உரிமைகளையும் 20வது அரசியல் திருத்தம் பறிக்கும்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

*சாவகச்சேரி விசேட நிருபர்*



தென்னிலங்கையின் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தினை தமிழ் மக்களும் எதிர்த்து சிங்கள தேசத்தின் மனசாட்சியை தட்டி எழுப்ப வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

சனிக்கிழமை தென்மராட்சி மறவன்புலோ பகுதியில் நடைபெற்ற முதியோர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இங்கு மேலும் கூறுகையில்,

புதிய அரசாங்கம் புதியதொரு அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கு சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

புதிய அரசியலமைப்பினை நிறைவேற்ற முன்னர் அவசரமாக இருக்கின்ற அரசியலமைப்பிற்கு திருத்தம் ஒன்றினை ஏற்படுத்தும் நோக்கோடு 20ஆவது திருத்தம் என்ற பெயரிலே ஒருசில திருத்தங்களை இந்த அரசியலமைப்பிற்கு கொண்டுவர உத்தேசித்திருக்கிறார்கள்.

இந்த அரசியலமைப்பு ஒற்றையாட்சி அரசியலமைப்பு. தமிழ் மக்களாகிய நாம் கடந்த 72ஆண்டுகளாக ஒற்றையாட்சி அரசியலமைப்பினை நிராகரித்து வருகிறோம். ஏனென்றால் ஒற்றையாட்சி அரசியலமைப்பில் சிங்கள பௌத்த மக்களுக்கு மட்டும் தான் இடம் இருக்கிறது.

எண்ணிக்கையில் சிறியவர்களாக இருக்கும் தமிழர்களை மட்டுமல்ல சிங்கள தேசத்திற்கு உள்ளேயே பெரும்பான்மை இருக்கும் வகையில் ஏனையவர்களுடைய கருத்தை கருத்திலேயே எடுக்காமல் ஆட்சி செய்யக்கூடிய ஒரு மோசமான ஒரு அரசியலமைப்பாகத் தான் இந்த ஒற்றையாட்சி அரசியலமைப்பின் விதிமுறைகள் அமைந்துள்ளன என்றார்.



யாழப்பாண மத்திய பேருந்து நிலையத்தில் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டிருந்த போது... படம்: பருத்தித்துறை விசேட நிருபர்

## ஆதன வரியை குறைக்க கடிதம்

*பரந்தன் குறூப் நிருபர்*

கரைச்சி பிரதேச சபையால் அறவிடப்படும் 10 வீத ஆதன வரியை 5 வீதமாக்க வேண்டும் எனவும், போரால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு அதுவே பொருத்தமானது எனவும் குறிப்பிட்டு முன்னால் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் குமாரசாமி தருமராசா உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கரைச்சி பிரதேச சபை ஆட்சி அமைப்பதற்கு ஒரு ஆசனம் தேவையாக இருந்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் தெரிவான குறித்த பிரதேச சபை உறுப்பினரும் தனது ஆதரவினை வழங்கியிருந்தார்.

இந்நிலையில் ஆதன வரி அறவீடு செய்வது தொடர்பில் பிரதேச சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. குறித்த ஆதன வரியானது 10 வீதம் அறவீடு செய்யப்படுவதனால் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்வதாகவும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிடம் இவ்வாறு வரிச் சுமையை சுமத்தாது அவர்களை பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வடமராட்சியில் ஐவர் தனிமைப்படுத்தல்

*கரவெட்டி தினகரன் நிருபர்*

புங்குடுதீவு கொரோனா தொற்றாளியான பெண் சென்ற பருத்தித்துறை பஸ் வண்டியில் பயணித்த பயணிகளில் பருத்தித்துறை தும்பளை ஐயனார் கலட்டியைச் சேர்ந்த 5 பேர் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு சென்று தம்மை அடையாளப்படுத்தியதைத் தொடரந்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவு கொரோனா தொற்றுக்குள்ளான பெண் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு பருத்தித்துறை கொழும்பு பஸ் வண்டியில் புத்தளத்திலிருந்து கொடிகாமம் வரை பயணித்திருந்தார். அவர் ஞாயிறு அதிகாலை 4.30 மணியளவில் கொடிகாமம் வந்து இறங்கினார்.

ஆகையால் பருத்தித்துறை பஸ் வண்டியில் பயணித்தோருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து குறித்த பஸ் வண்டியில் பயணித்த வடமராட்சி வாசிகள் துன்னாலை, நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில் இப் பேருந்தில் பயணித்தவர்கள் தம்மை தொடர்புகொள்ள வேண்டும் என சுகாதாரப் பிரிவினர் அறிவித்த நிலையிலேயே இவ் ஐந்து பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை இச் சம்பவத்தைத் தொடர்ந்து பருத்தித்துறை கொழும்பு பஸ் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

## வீட்டுத்திட்டங்களுக்கான மீதிப் பணம் வழங்கல்

*சாவகச்சேரி விசேட நிருபர்*

யாழ்ப்பாணம் வசந்தபுரம் வீட்டுத்திட்டங்களுக்கான மீதிப் பணம் வழங்கும் செயற்பாடு நேற்று மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த யாழ் மாவட்டத்திற்கு வந்திருந்த போது குறித்த மக்களால் கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது. இதன் விளைவாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வீட்டுத்திட்ட கொடுப்பனவு வழங்கும் செயற்பாடு மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் 58 வீட்டுத் திட்டங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.



## வாகனம் மோதியதால் அரச சொத்துக்கள் சேதம்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற விபத்தில் அரச சொத்துக்களிற்கு சேதம் ஏற்பட்டதுடன் வாகனத்தில் பயணித்தவர்கள் தெய்வாதீனமாக தப்பித்தனர். பளையிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த வானின் முன்னுள்ள சக்கரத்தில் காற்று வெளியேறியமையால் கட்டுப்பாட்டை இழந்து வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனால் கிளிநொச்சி ஏ9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

வீதியின் மையத்தில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரங்கள் சேதமடைந்ததுடன் வீதி மின்விளக்கு கம்பமும் சேதமடைந்துள்ளது. வாகனத்தில் பயணித்த இந்து மத தலைவர்கள் தெய்வாதீனமாக எவ்வித பாதிப்பும் இல்லாது தப்பித்துக் கொண்டனர்.

## தமிழ் இலக்கிய படைப்பாளர் ஒன்றுகூடல்

**கோப்பாய் நிருபர்**

தமிழ் இலக்கியப் படைப்பாளிகளின் ஒன்று கூடல் நவம்பர் மாதம் பிற்பகுதியில் ஒருநாள் நிகழ்வாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழில் எழுதும் முன்னோடிப் படைப்பாளிகளுக்கும் புதிய தலைமுறைப் படைப்பாளிகளுக்குமிடையிலான இணைப்புப் பாலமாகவும் இலக்கியப் படைப்புகள் குறித்தும் பரஸ்பரம் அறிமுகம் மற்றும் கருத்துகள் பரிமாறும் தளமாகவும் இந்த ஒன்று கூடல் அமைய இருக்கிறது. நிகழ்வை நடத்துவோர் அழைக்கப்படும் முன்னோடிப் படைப்பாளிகள் தவிர்ந்த 75 பேர் நிகழ்வில் கலந்துகொள்ள முடியும்.

முன்னோடி இலக்கியப் படைப்பாளிகள் தமது இலக்கிய அனுபவங்களைப் பகிர்தல், பங்குகொள்ளும் இலக்கியப் படைப்பாளிகள், ஆர்வலர்கள் தம்மை அறிமுகம் செய்து கொள்ளுதல், இளைய தலைமுறைப் படைப்பாளிகளின் இலக்கியப் படைப்புகளை முன்னோடி எழுத்தாளர்கள் திறனாய்வு செய்தல் என்ற வகையில் இந்த ஒன்று கூடல் அமைவதுடன் கலந்துரையாடலும் இடம்பெறும்.

மேலதிக விவரங்களுக்கு 0788102244 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் ashroffshihabden@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ள முடியும்.

## விபசாரத்தில் ஈடுபட்ட சந்தேகம்; பெண்கள் கைது

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா நகர்ப் பகுதியில் விபசார தொழிலில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 5 பெண்களை வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலத்தின் கீழ் செயற்படும் போதைத்தடுப்பு பொலிசார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நகர்ப்பகுதியில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் சோதனைகளை மேற்கொண்ட பொலிசார் விபசார தொழிலில் ஈடுபட முயற்சித்த குற்றச்சாட்டில் 5 பெண்களை கைது செய்துள்ளனர்.

குருநாகல், முல்லைத்தீவு, நெடுங்கேணி, விஸ்வமடு ஆகிய பகுதிகளை சேர்ந்த பெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீதிகளில் கொள்கலன்களில் நீர் விற்பனை செய்யத் தடை

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் வீதிகளில் கொள்கலன்களில் குடிநீர் விற்பனை செய்வதற்கு தடை செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார பிரதிப் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்தார்.

வெளி மாவட்டங்கலிருந்து வருகைதந்த பலர் இப் பகுதியில் குடிநீர் விற்பனையில் ஈடுபடுவதால் நீரின் சுகாதாரத் தன்மை மற்றும் உள்ளூர் வியாபாரிகளின் வர்த்தகம் பாதிப்புக்குள்ளாகின்றமை போன்ற காரணிகளால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

மத்திய சுகாதார அமைச்சினால் குடிநீர் விநியோகம் செய்யப்படும் விடயமாக ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதாவது குடிநீர் விநியோகத்தை தெருக்களில் விற்பனை செய்வதை தவிர்க்கும்படியும் அவசரம் ஏற்படும் பட்சத்தில் ஆயிரம் லீற்றருக்கு குறைவான முறையில் கொண்டு செல்ல முடியும் எனவும், நீர் விநியோகத்துக்கு பாவிக்கப்படும் நீர், கொள்கலன், பைப் போன்றவைகள் சுகாதாரத்துக்கு ஏற்ப அமைந்திருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா காலத்தில் மக்கள் நடமாட முடியாத நிலையில் இவ் குடிநீரை வீடு வீடாக விநியோகம் செய்ய அனுமதி கோரப்பட்டது. அதற்கு அவ் சூழ்நிலையை கருத்திற்கொண்டு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இருந்தும் இவ் விநியோகம் நூறு வீதம் சுகாதார முறைப்படி இருந்ததாக கூற முடியாது. அத்துடன் மன்னாருக்கு வெளியிலிருந்து நீர் விநியோகம் செய்வோர் எவ்வாறான நீரை விநியோகம் செய்கின்றார்கள் என்பது தெரியாது இருக்கின்றது.

ஆனால் தற்பொழுது ஊரடங்கு சட்டம் இப் பகுதியில் இல்லாமையால் சுகாதார முறைப்படி குடிநீர் விநியோகிக்காத சேவையை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதிலும் வெளி மாவட்டங்களிலிருந்து பலர் சுகாதாரத்துக்கு மாறான முறையில் குடிநீர் விநியோகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது விடயமாக அண்மையில் நாங்கள் குடிநீர் விநியோகத்தர்களுடன் ஒரு கலந்துரையாடல் நடத்தினோம்.

இதில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமானது தற்பொழுது மன்னார் மாவட்டத்துக்கு கொள்கலனில் நீர் கொண்டு தெருக்களில் விற்பனை செய்ய வேண்டிய அவசியம் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார்.



யாழ்ப்பாணம் ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் கழகம் மற்றும் படிப்பகக் கட்டடம் புதிய அரசின் சப்ரிகம (நிறைவான கிராமம்) திட்ட நிதியில் புனரமைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் கழக உறுப்பினர்களையும் படத்தில் காணலாம். சாவகச்சேரி விசேட நிருபர்

## முல்லைத்தீவில் 70,000 ஏக்கரில் நெல் விதைப்பு

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் 70,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் தற்போது காலபோக நெல் விதைப்பு நடைபெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விவசாய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக பிரதேச செயலகங்கள் ஊடாக மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டத்தில் உள்ள வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பிரிவு, முத்தையன்கட்டு நீர்ப்பாசனப் பிரிவு ஆகியவற்றின் கீழுள்ள நீர்ப்பாசனக் குளங்களுக்கும் கமநல சேவை நிலையங்களின் கீழ் வருகின்ற சிறிய குளங்களுக்கும் கூட்டங்கள் நிறைவடைந்துள்ளன.

இந்நிலையில் காலபோக நெற்செய்கையில் புழுதி விதைப்பில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பிரதேச செயலகங்கள் ஊடாக நடத்தப்படுகின்ற கூட்டங்களில் பயிர்ச் செய்கையுடன் தொடர்புடைய திணைக்களங்கள் விவசாயிகளுக்கான பயிர்ச் செய்கை வெற்றிக்கான ஆலோசனைகளை வழங்கிவருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகாரிகள் நடத்துகின்ற கூட்டங்களில் யானைகளின் தொல்லைகளினை கட்டுப்படுத்தி விவசாய நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் விவசாயிகள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அரச அலுவலகத்தில் தேன்கூடு; மக்கள் அச்சம்



**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

கிளிநொச்சி நகரத்தில் பொதுமக்கள் சேவையினைப் பெறும் திணைக்களங்களில் தேன் கூடுகள், குளவிக் கூடுகள் உருவாகி இருக்கின்றமை சேவைகளைப் பெறச் செல்கின்ற பொதுமக்கள் மத்தியில் அச்சத்தினை உருவாக்கியுள்ளது.

அடிக்கடி குளவிக் கூடுகள், தேன் கூடுகள் உருவாகும்போது வனஜீவராசிகள் திணைக்களத்தினால் குறித்த கூடுகள் அகற்றப்பட்டுள்ளன. ஆனால் தற்போது பொதுமக்கள் சேவையினைப் பெறுகின்ற முக்கிய திணைக்களம் ஒன்றில் தேன் கூடு அமைந்திருப்பதன் காரணமாக அது எச்சந்தர்ப்பத்திலும் கலைந்து பொதுமக்களையும் உத்தியோகத்தர்களையும் தாக்கக் கூடிய அபாயநிலை காணப்படுகின்றது.

## துளிர்



பவதாரணி ராஜசிங்கம்

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே. அது நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்பினிலே" என்று நண்பர் ஒருவர் கூறியது என்னை உறுத்திக் கொண்டிருந்தது.

குழந்தையின் வளர்ப்பில் எல்லாம் அன்னையை மட்டுமே சார்ந்ததா? தந்தை அதன் மீது பொறுப்பற்றவராகிவிட முடியுமா?. ஆரம்ப காலத்தில் பெண்கள் வீட்டோடு முடக்கப்பட்டு இருந்தனர். தாய்வழி சமூக அமைப்பில் உடல் ரீதியாகவும் பெண் தன்னை நிரூபித்தே இருந்தாள்.

ஆனால் காலவோட்டத்தில் தந்தைவழி சமூகம் வளர அவள் ஒடுக்கப்பட்டாள். மீள இன்று அவள் தன்னை மீட்டெடுத்துக் கொண்டிருக்கிறாள். இதன் வழியில் நான் கண்டதை பகிர்கிறேன்.

"நீலப்பூ விழி மங்கையர் தலையாய கலைகள் ஆய்ந்து தம்வீடு போதல் கண்டேன் உலவிடு மடமைப் பேயின் உடம்பின்தோல் உரிதல் கண்டேன்" இது பாவேந்தர் பாரதிதாசன் அழகின் சிரிப்பில் எடுத்தியம்பியது.

பெண்கள் கல்வி கற்கத் தொடங்கினால் மடமைப்பேயின் தோல் உரியத் தொடங்கிவிடும் என்று பாவேந்தர் கூறுகின்றார். தேர்தல் காலத்தில் களமிறங்கிய போது சில குடும்பங்களில் வறுமை அல்லது வேறு சில காரணங்களிற்காக சிறுமிகள் கற்றலில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தனர்.

அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் நான் மீளவும் வலியுறுத்தி வந்தது பெண்களை கல்விகற்க வழி செய்யுங்கள். அவர்கள் தமது காலில் வேரூன்ற மட்டுமல்ல; அவர்களே அடுத்த தலைமுறைக்கான அறிவின் ஊற்று. அவர்கள் கல்லாத நிலையில் தலைமுறையே தடுமாறும் நிலை உருவாகும்.

பெண் கல்வி, உரிமைகள் பற்றிப் பேசவும் நமக்கு ஆண் ஒருவன் தேவைப்பட்டிருக்கிறான். அவன் அன்று முதல் குரல் எழுப்பாமலிருந்திருந்தால் இன்று நாம் அப்படியே இருந்திருக்க கூடும்.

பெண்களின் முன்னேற்றத்திற்கு பாரதியார் மூன்று வழிகளை கூறியிருந்தார். முதலாவது உபாயம் கல்வி; இரண்டாவது உபாயம் கல்வி; மூன்றாவது உபாயம் கல்வியே! இதன்படி பெண்கள் முன்னேற கல்வியை தவிர வேறு எல்லா விதமான உபாயமும் இருப்பதாக அவரும் அறிந்ததில்லை.

சிலர் அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?" என்று எண்ணுகின்றனர். இந்த சிந்தனை முட்டாள்களுக்கானது. நீங்கள் இன்று பார்க்கின்ற, வியக்கின்ற அத்தனை துறைகளிலும் பெண்கள் கொடிகட்டிப் பறக்கிறார்கள். ஓர் ஆணைப் படிக்க வைத்தால் அவன் மட்டும் முன்னேறுவான்.

ஒரு பெண்ணை படிக்க வைத்தால் அந்தக் குடும்பமே முன்னேறும் என்றார் ஈ.வெ., ராமசாமி. இங்கே நான் பெண் கல்வியை வலியுறுத்த காரணமுண்டு. நமது சமூக கட்டமைப்பில் இன்னும் குடும்பத்தை அதாவது தலைமுறையை சரியாக நேர்வழியில் எடுத்து செல்பவளாகவும் அவ்வாறு செய்ய முடியாதவிடத்து குற்றம்கொள்பவளாயும் நாம் கட்டமைத்திருப்பது பெண்ணை அல்லவா? ஆக அவள் உலகை அறிதல் என்பது தலைமுறைக்கே அவசியமானது.

முன்னைய காலங்களில் பெண்கள் வேலைக்கு செல்லவில்லை. வீட்டிலிருந்து அந்த சூழலை மட்டுமே கவனித்தார்கள். ஆனால் இன்று காலம்தான் அப்படி இல்லை. மாற்றமே மாறாதது என்பது சத்தியமானது. ஆனால் சரிசமமாய் ஆணுக்கு பெண் என இருவரும் உழைப்பால் ஒன்றுபடுகின்றனர்.

ஆக குடும்பம் என்ற கட்டமைப்பில் வரும்போது அங்கே ஆணும் பொறுப்புடையவன் ஆகிறான். அவர்களுக்கென தனித்தனியே பொறுப்புக்கள் இல்லை. பரஷ்பரம் புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் தேவை. இது ஆணுக்கு எதிரானதல்ல. பாரதி என்ற ஆண் இட்ட வேரில் தானே நாம் கிளை பரப்பினோம்.

மகாபாரதத்தில் குருஷேஸ்திர போரிற்குவித்திட்டது பரஸ்பர புரிந்துணர்வல்லாத பெற்றோரின் வளர்பே என்பது என் கருத்து. கௌரவர்கள் வளர்ப்பில் அதிக சிரத்தையை ஆசிரியர்கள் வெளிப்படுத்தியிருப்பினும் பெற்றோர் இக் கடமையைச் சரிவர செய்யவில்லை. திருதராஷ்டிரர் பிறப்பிலேயே கண்ணற்றவர்.

மற்றவரோ கணவனுக்கு செய்யும் தியாகத்தில் தன் கடமையை மறந்து கண் இருந்தும் குருடராய் இருந்தார். காந்தாரி அதனை சுட்டிக்காட்ட முயன்றாலும் திருதராஷ்டிர் ஏற்பதாயில்லை. கௌரவர்கள் இழைத்த தவறுகளை பாசம் என்ற அவர்களது கண்கள் மறைக்க போதாதகுறைக்கு சகுனியின் தூண்டல் வேறு அவர்களை பாதித்தது. விளைவு போர் மூண்டு கௌரவகுலமே நிர்மூலமானது. அதிகாரமற்ற அவர்களது பாசம் விளைவை விபரீதமாக்கியது. பாரதம் நமக்கு உணர்தியது இப் படிப்பினை.

இன்றைய எல்லா பெற்றோருக்கும் இது ஒரு சிறந்த கற்பித்தல். பெற்றோர் குழந்தைகள் வளர்ப்பதில் சிரத்தையுடன் நடக்கவேண்டும். பொதுவாய் இருவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும். அன்று சகுனி எனில் அவனுக்கு நிகராகவே நாம் விஞ்ஞான யுகத்தின் சில ஒவ்வாத வளர்ச்சிகளைக் கொள்ளலாம். ஒருவர் அறிவைப் பெறும் வழிகளும் அதனை இழக்கும் வழிகளும் அதிகம்.

ஆனால் இவற்றில் நல்லவழியைக் காட்டும் அதிகாரம் பெற்றோரை பரஸ்பரமாய் சார்ந்தது. பாசத்துடன் அந்த அதிகாரம் இணையும் போது இன்றைய சமுதாயம் நிச்சயம் நாளைய விடியலை நோக்கிப் பயணிக்கும். மண்ணில் பிறந்த பின்னே கற்கத் தொடங்கும் பிள்ளைக்கு கற்பித்தலைச் சரியாக்குவதால் அவர்களின் வாழ்வை வளமாக்க முடியும்.

இப் பொறுப்பு முதலில் எம்மைச் சார்ந்ததே என்பது ஐயமற்றது. நாளை வருங்கால துளிர்கள் விரல் நீட்டிக் கேட்கும் கேள்விகளுக்கு நாம் பொறுப்புக் கூறவேண்டாமா?.

## கரையொதுங்கிய இந்திய மீனவரின் சடலத்தை இந்தியாவுக்கு அனுப்ப தூதரகம் நடவடிக்கை

**கந்தர்மடம் நிருபர்**

அல்லைப்பிட்டியில் கரை ஒதுங்கிய இந்திய மீனவனின் சடலத்தை இந்தியத் தூதரகம் பொறுப்பேற்று இந்தியாவிற்கு அனுப்பி வைக்க யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்தியாவில் இருந்து கடற்றொழிலிற்காக கடந்த புதன்கிழமை புறப்பட்ட நிலையில் நடுக்கடலில் மாயமான மீனவர் எனக் கருதப்படுபவர் யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி கடற்கரையில் ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமை காலை இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து தங்கச்சிமடத்தை சேர்ந்த தனிக்கிளாஸ் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் புதன்கிழமை இரவு கச்சத்தீவுக்கு அண்மையில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது திடீரென கடலில் சீற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் படகிலிருந்து கார்சன் நிலை தடுமாறி நடுக்கடலில் விழுந்து மாயமானார்.

இவரது உடலாக இருக்கலாம் எனக் கருதப்பட்ட நிலையில் குறித்த உடலத்தை அடையாளம் காட்டி நீதிமன்ற அனுமதியின் பெயரில் யாழில் உள்ள இந்தியத் தூதரகம் அதனைப் பொறுப்பேற்றுள்ளது. இதன் அடிப்படையில் குறித்த சடலம் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

## யாழில் 7 மாதங்களில் 13 ஆயிரம் பி.சி.ஆர் பரிசோதனைகள்

**கோப்பாய் நிருபர்**



யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியினால் இதுவரை சுமார் 13 ஆயிரம் பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் 05ஆம் திகதி வரையான காலப் பகுதியிலேயே 13 ஆயிரம் பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவில் நபர்களுடன் தொடர்புபட்டவர்கள் என சந்தேகப்படும் மருதங்கேணியில் உள்ள 60 பேரும் புங்குடுதீவு மற்றும் ஏனைய பகுதிகளில் இருந்து சுமார் 100 பேரில் பி.சி.ஆர் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

எனவே பொது மக்கள் சமூகத் தொற்று தொடர்பாக அவதானமாக இருக்க வேண்டியதுடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதும் அவசியமாகும் என்றார்.

## முல்லைத்தீவில் 210 ஏக்கரில் உழுந்து செய்கை

**மாவட்ட கமநல உதவி ஆணையாளர் தகவல்**

**பரந்தன் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன் குளம், துணுக்காய் ஆகிய கமநலசேவை நிலையங்களின் கீழ் இவ்வாண்டு இடைப் போகமாக 210 ஏக்கர் நிலப்பரப்பில் உழுந்து செய்கை மேற்கொள்ளப்பட்டதாக மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.புனிதகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒள்றாக காணப்படும் வவுனிக்குளத்தின் கீழ் இவ்வாண்டு மூன்றுபோக பயிர்ச் செய்கை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

அதாவது இவ்வாண்டுக்கான காலபோக செய்கையின் போது சுமார் ஆறாயிரம் ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதையடுத்து இவ்வாண்டுக்கான சிறுபோகம் நிறைவு பெற்றவுடன் மூன்றாவது போகமாக உப உணவு செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடை செய்யப்பட்டுள்ளன.

மூன்றாவது போக செய்கையின் போது நிலக்கடலை, பயறு, கௌபி, உழுந்து போன்ற உப உணவுப் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக அறுவடை செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, மேற்படி குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உழுந்து செய்கை எதிர்பார்த்த இலக்கை எட்டியுள்ளது.

அதாவது துணுக்காய் கமநலசேவை நிலையத்தின் கீழ் 140 ஏக்கர் நிலப்பரப்பிலும் பாண்டியன்குளம் கமநலசேவை நிலையத்தின் கீழ் 70 ஏக்கர் நிலப்பரப்பிலும் இவ்வாறு உழுந்து செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடை செய்யப்பட்டுள்ளது என்றார்.

# கொரோனா தொற்றுக்குள்ளான புங்குடுதீவு பெண் பயணித்த பேருந்து விபரம் வெளியீடு

**பருத்தித்துறை விசேட நிருபர்**

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் புங்குடுதீவைச் சேர்ந்த பெண்ணுக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து வீடு திரும்பிய பயண ஒழுங்குகளை வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

அதனால் அப் பெண் பயணம் செய்த பேருந்தில் பயணம் செய்தவர்கள் சமூக அக்கறை கொண்டு சுகாதாரத் துறையுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட பெண், கொழும்பு புறக்கோட்டையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு Ran Silu WP ND 6500 என்ற பேருந்தில் பயணித்துள்ளார்.

அவர் ஞாயிற்றுக்கிழமை (ஒக்.4) அதிகாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து NP ND 8790 இலக்கமுடைய Matha என்ற பேருந்தில் அதிகாலை 5 மணிக்கு புறப்பட்டு புங்குடுதீவை காலை 7 மணிக்குச் சென்றடைந்துள்ளார்.

எனவே கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேற்படி இரண்டு பேருந்துகளிலும் பயணித்தவர்கள் உடனடியாக வடமாகாண சுகாதார திணைக்களத்தின் 021 222 6666 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளுங்கள் என்றார்.

# 'குட்டி சுட்டி' யின் சிறுவர் தின விழா









சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு லேக்ஹவுஸ் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த சிறுவர் தின நிகழ்வும் சிறுவர்களுக்கான வெளியீடான 'குட்டி சுட்டி' அறிமுக விழாவும் யாழ்.இராமநாதன் மகளீர் கல்லூரியில் ஒக்டோபர் 02ஆம் திகதி நடைபெற்ற போது...

# உடையார் கட்டு குளத்தின் கீழான நெற் செய்கை திகதி அறிவிப்பு

**புதுக்குடியிருப்பு நிருபர்**



முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள உடையார் கட்டு குளத்தின் கீழ் 2020/2021 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை 1280 ஏக்கரில் செய்கை பண்ண தீர்மானிக்கப் பட்டுள்ளது.

குளத்தில் போதியளவு தண்ணீர் உள்ளதால் நீர் முகாமைத்துவத்திற்கு ஏற்ப நீர் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையினை தொடர்ந்து குளத்தில் நீர் உள்ள காரணத்தினால் 300 ஏக்கர் வரை இடைப்போகம் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

காலபோக நெற்செய்கை தற்போது தொடங்கியுள்ள காரணத்தினால் 01.10.2020 தொடக்கம் கால்நடைகளை உரிமையாளர்கள் கட்டுப்படுத்த வேண்டும் என கமக்கார அமைப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலபோக நெற்செய்கையினை எதிர்வரும் 25.10.2020 வரைக்கு முன் செய்கை பண்ண வேண்டும் என அறிவிக்கப் பட்டுள்ளதுடன் கால்நடை உரிமையாளர்கள் தங்கள் கால்நடைகளை கட்டி வளர்க்க வேண்டும் என்றும் கட்டாக்காலியாக திரியும் கால்நடைகள் பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு தண்டம் அறவிடப்படும் என்றும் கமக்கார அமைப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோதமாக மணல் அகழ்ந்த அறுவர் கைது



**புதுக்குடியிருப்பு நிருபர்**

முல்லைத்தீவு குமுழமுனைப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஆறு உழவு இயந்திரங்களுடன் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் குமுழமுனை ஆண்டாங்குளம் பகுதியில் வைத்தே இவ் ஆறு பேரும் கைது செய்யப்பட்டதாக முல்லைத்தீவு பொலிசார் தெரிவித்தனர்.

பொலிசாருக்கு கிடைத்த தகவலின் படி உதவி பொலிஸ் அதிகாரி சி.ஜ.கேரத் தலைமையிலான மங்கள,தௌபிக்,வணசிங்க,திலக்,ஜெயவர்த்தன தலைமையிலான குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

# வாள்களுடன் இருவர் கைது

**கோப்பாய் நிருபர்**



யாழில் வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் இருவர் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண குற்றத் தடுப்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து 2 வாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 23 மற்றும் 33 வயதுடைய இளைஞர்களாக காணப்படுவதுடன் சம்பவம் தொடர்பில் யாழ் குற்றத்தடுப்பு பொலிசார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்வி சமூக நம்பிக்கை நிதியம் அங்குரார்ப்பணம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா பூந்தோட்டம் அருள்மிகு ஸ்ரீ லக்மி சமேத நரசிம்மர் ஆலயத்தின் பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் ஸ்ரீ லக்மி நரசிம்மர் கல்வி சமூக நம்பிக்கை நிதியம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்வி மற்றும் சமூக மட்டத்தில் வறுமையில் வாடும் மக்களின் மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டு கட்டமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்டுள்ள குறித்த நிதியத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு ஆலயத்தின் பரிபாலன சபை தலைவர் கோ. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகதாரலிங்கம், கு.திலீபன், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், பிரதேச செயலாளர் நா.கமலதாசன், சமூக சேவை உத்தியோகத்தர் எஸ் ஸ்ரீனிவாசன், இந்து கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார உத்தியோகத்தர் நகரசபை பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட வர்த்தக பிரமுகர்கள் சமூக நலன் விரும்பிகள் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# யாழ்.பேருந்து தரிப்பிட மலசலகூடம் நேரத்துடன் பூட்டுவதால் பாதிப்பு

**கோப்பாய் நிருபர்**

யாழ். பேருந்து தரிப்பிடத்தில் அமைந்துள்ள பொது மலசல கூடம் இரவில் பூட்டப்படுவதால் வெளி மாவட்டங்களில் இருந்து வருகைதரும் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்தின் பல மில்லியன் ரூபா செலவில் பொதுமக்களுக்காக அமைக்கப்பட்ட குறித்த பொது மலசல கூடம் இரவு 8.30 மணிக்கு பின்னர் பூட்டப்பட்டு மறுநாள் அதிகாலை 5 மணிக்கு பின்னரே திறப்பதாக பயணிகள் குறிப்பிடுகின்றனர்.

வெளி மாவட்டங்களில் இருந்து பெரும்பாலும் இரவு 9 மணிக்கு பின்னரே இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டிகள் அதிகம் வருகை தருகின்ற நிலையில் கொழும்பில் இருந்து வருகைதரும் பேருந்துகள் அதிகாலை 2மணி தொடக்கம் 4மணி வரையான நேரங்களிலே யாழ் பஸ் தரிப்பிடத்தை வந்தடைகிறது.

இவ்வாறு நீண்ட தூர பயணத்தின் பின் அதிகாலைவேளை யாழ். பஸ் நிலையத்தை வந்தடையும் பயணிகள் பஸ் தரிப்பிட பொது மலசல கூடம் பூட்டப்பட்டிருப்பதால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதோடு பெண்களே அதிகம் பாதிக்கப்படுவதாக குற்றம்சாட்டப்படுகிறது. ஆகவே மக்களுக்கு பொறுப்பானதும் பாதுகாப்பான சேவையை வழங்கும் இலங்கை போக்குவரத்துச் சபையின் அதிகாரிகள் குறித்த விடயம் தொடர்பில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# இளைஞர்களுக்கான செயலமர்வு

**மாங்குளம் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டதில் வேலைவாய்ப்பின்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் மென் திறன் மேம்பாட்டு செயலமர்வு ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இச் செயலமர்வை இலங்கை பொறியியலாளர் சங்க கிளிநொச்சி மாவட்ட பிரிவும் வடமாகாண தொழில்முறை சார் தலைமைத்துவ மேம்பாட்டு நிறுவனம் முல்லைத்தீவு மாவட்ட செயலக மனித வலு மற்றும் வேலை வாய்ப்பு பிரிவு இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

# வற்றாப்பளை கமக்கார அமைப்புக்கு உரமானியம்

## கமநல உத்தியோகத்தர்

**விஜயரத்தினம் சரவணன்**

முல்லைத்தீவு முள்ளியவளை கமநலசேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட வற்றாப்பளை கமக்கார அமைப்பிற்கு பெரும்போகத்திற்கான உர மானியம் வழங்கிவைக்கப் பட்டுள்ளதாக கமநல சேவைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.சுகந்தன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,முள்ளியவளை கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ் இம் முறை ஐந்தாயிரம் ஏக்கருக்கு மேல் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் இரண்டாயிரம் ஏக்கருக்குரிய உரமானியம் தற்போது எம்மிடம் களஞ்சியப்படுத்தலில் உள்ளது. அந்தவகையில் பெரும்போக நெற்செய்கைக்கான உரமானியத்தினை முதற்கட்டமாக வற்றாப்பளை கமக்கார அமைப்பிற்கு வழங்கியிருக்கின்றோம். தொடர்ச்சியாக ஏனைய கமக்கார அமைப்புகளுக்கும் உரமானியம் வழங்குவதற்குரிய செயற்பாட்டினை துரிதமாக மேற்கொள்ளவுள்ளோம் என்றார்.



# கிளிநொச்சியின் அடையாளம்

# இரணைமடு

கிளிநொச்சி பற்றி பேசுவதாக இருந்தால் இரணைமடுவை தவிர்த்துவிட்டு பேச முடியாது. இரணைமடு கிளிநொச்சியின் ஒரு பிரதான அடையாளம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு அடையாளம் இருப்பது போல் கிளிநொச்சியின் அடையாளமாக இரணைமடு காணப்படுகிறது.

வடக்கின் நெற்களஞ்சியமாக கிளிநொச்சி மாவட்டம் திகழ்வதற்கு இரணைமடுவே பிரதான காரணம். இரணைமடுவின் நீர் பயன்பாடு தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றபோதும், கிளிநொச்சி மக்களின் வாழ்வியலில் தவிர்க்க முடியாத ஒன்றாக இரணைமடு மாறிவிட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ள இரணைமடு குளத்திற்கு வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து பிரதானமாக கனகராயன் ஆற்றின் ஊடாக நீர் வருகிறது. ஆனால் இரணைமடுகுளத்தின் நீர்ப்பாசனத்திணைக்கள நிர்வாகம் மற்றும் அதன் பாசன பயன்பாடு என்பது முற்றுமுழுதாக கிளிநொச்சி மாவட்டத்திற்குரியதாக காணப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் மிகப்பெரிய குளமாகவும் இலங்கைத்தீவில் ஏழாவது பெரிய குளமாகவும் காணப்படுகின்ற இரணைமடு குளத்தின் வரலாறு 1885 இல் ஆரம்பிக்கிறது. இதனைத் தவிர இரணைமடு பிரதேசம் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகள் தொன்மைமிக்க பிரதேசம் எனவும் தொல்லியலாளர்களும் குறிப்பிடுகின்றனர்.




ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் இரணைமடு படுகையில் கனடா, பிரிட்டிஷ் அதிகாரியான சேர்ஹென்றிபாட் 1885ல் அப்போதைய பிரிட்டிஷ் அரச அதிபர் டேக்கிற்கு இரணைமடு நீர்த்தேக்கத்தை அமைக்கும் ஆலோசனையை முன் வைத்தார்.

1866ல் பிரிட்டிஷ் நீர்ப்பாசன பொறியிலாளரும் தொல்பொருள் தேடலாளருமான ஹென்றி பாக்கர், இரணைமடு நீர்த்தேக்கத்துக்கான திட்டத்தை வரைந்தார். அவரின் திட்டத்தில் இரணைமடுவின் கீழ் 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டிருந்தது.

1900ல் பிரிட்டிஷ் நீர்ப்பாசன பொறியியலாளர் பிரௌன் வரும் வரை இரணைமடு கட்டுமானம் வரைவு மட்டத்திலேயே இருந்தது. பொறியியலாளர் பிரௌன் அப்போதிருந்த கரைச்சிப் பகுதியில் வாழ்ந்த வெற்றிவேலு என்பவரைச் சந்தித்து இரணைமடு படுகை வனத்தை முழுமையாக ஆராய்ந்தார்.

1902இல் தொடங்கி 1922இல் கட்டி முடிக்கப்பட்ட இந்த நீர்த்தேக்கம் அன்று பிரிட்டிஷ் ஆட்சியில் இலங்கை அரசியலில் செல்வாக்காக இருந்த சேர்.பொன்.இராமநாதனின் பரிந்துரையில் அவருடைய 1000 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்ச் செய்கைக்காகக் கட்டப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது.

அப்போது குளம் 24 அடி ஆழமாகவும் 40 ஆயிரம் ஏக்கர் அடி கொள்ளளவாகவும் காணப்பட்டது.

இந்த நீர்த்தேக்கத்தைக் கட்டும் பணியில் இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட தொழிலாளர்களே பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என இரணைமடு பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களோடு யாழ் பல்கலைக்கழகத்தின் பொறியியல்துறை விரிவுரையாளர் சுப்பிரமணியம் சிவகுமாரின் இரணைமடு பற்றிய கட்டுரை ஒன்றிலும் குறிப்பிட்டப்பட்டுள்ளது.

1922 இல் 19 இலட்சத்து 4 ஆயிரம் ரூபா செலவில் இரணைமடு முதல் கட்டமாக முழுமையாக்கப்பட்டது. அப்போது இரணைமடுவின் கொள்ளளவு 44 ஆயிரம் ஏக்கர் அடி, ஆழம் 22 அடி.




1948, 1951இல் இரண்டாம் கட்டக் கொள்ளளவு அதிகரிப்பு நடைபெற்றது. அப்போது கொள்ளளவு 82 ஆயிரத்து 400 ஏக்கர் அடியாகும். இதன்மூலம் குளத்தின் நீர்மட்ட ஆழம் 30 அடியாக உயர்த்தப்பட்டது. பின்னர் 1954 1956 மூன்றாம் கட்ட பணியின் போது குளத்தின் ஆழம் 32 அடியாகவும் கொள்ளளவு 93,500 ஏக்கராகவும் காணப்பட்டது.

4 ஆம் கட்டமாக கொள்ளளவு அதிகரிப்பு 1975, 1977 இடம்பெற்றது. அக் கொள்ளளவு அதிகரிப் பின்போது இரணைமடுவின் கொள்ளளவு 1 இலட்சத்து 6500 ஏக்கர் அடியாக அதிகமானது. ஆழம் 34 அடியாகும். பின்னர் இறுதியாக கடந்த 2013, 2017ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2000 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கும் வரைக்கும் இரணைமடு குளத்தின் நீர் கொள்ளளவு இவ்வாறே காணப்பட்டது.

ஆனால் அபிவிருத்தியின் பின்னர் 36 அடியாக ஆழம் அதிகரிக்கப்பட்டு அதன் கொள்ளளவு ஒரு இலட்சத்து 19,500 ஏக்கர் அடியாக (147 எம்.சி.எம்) அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இரணைமடு குளத்தின் கீழ் சராசரி 8500 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு வந்த சிறுபோக நெற்செய்கை 12,500 ஏக்கராக மாற்றப்படும் என கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்திருந்தது.

## இரணைமடுவும் குடியேற்றமும்

1902 – 1920 இரணைமடு புனரமைப்பு பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு மருதநகர் கிராமத்தில் காணிகள் வழங்கப்பட்டு குடியேற்றப்பட்டார்கள். இதன் பின்னர் 1934 ஆம் ஆண்டு மகிழங்காடு பன்னங்கண்டி காணிகள் மத்திய வகுப்புத்திட்டத்தின் கீழ் பத்து ஏக்கர் வீதம் வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து 1935இல் கணேசபுரம் கிராமத்தில் 72 ஏக்கர் காணிகள் ஐந்து ஏக்கர் வீதமும், 1950 ஆம் ஆண்டு உருத்திரபுரம் டி10 குடியேற்றமும், 1951 இல் உருத்திரபுரம் டி 8 குடியேற்றமும் நான்கு ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டன. மேலும் 1953 இல் வட்டக்கச்சியில் குடியேற்றத்திட்டமும், 1954 இல் முரசுமோட்டை குடியேற்ற திட்டத்தில் மூன்று ஏக்கர் வீதம்183 காணிகளும், ஊரியானில் மூன்று ஏக்கர் வீதமும் இரணைமடுவை அடிப்படையாக கொண்டு குடியேற்றப்பட்டன. இந்தக் குடியேற்றக் காலப்பகுதிகள் அனைத்தும் இரணைமடுகுளத்தின் நீர் கொள்ளளவு அதிகரிக்கப்பட்ட காலத்திலாகும்.

## இரணைமடுவும் விவசாயமும்

இதனைத் தவிர 2012 தொடக்கம் குளத்தின் கீழான வாய்க்கால், வீதிகள், நெற்களஞ்சியங்கள், கிணறுகள் என விவசாய உட்கட்டுமானப் பணிகள் சர்வதேச விவசாய அபிவிருத்திக்கான நிதியம் 3250 மில்லியன் ரூபா இலகு கடன் மூலம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது எனவும் இரணைமடுகுளத்தின கீழ் விவசாய நடவடிக்கையாக நெற்செய்கை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்டத்திலுள்ள 24,935 விவசாயக் குடும்பங்களில் 7,000விவசாயக் குடும்பங்கள் இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் விவசாயத்தை மேற்கொள்வோராகக் காணப்படுகின்றனர். இது மாவட்டத்தின் மொத்த விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கையில் 35வீதமாகும். இதனைத்தவிர 408 மில்லின்கள் ரூபா நிதி செலவில் இரணைமடுவின் கீழ் திருவையாறு பிரதேசத்திற்கான ஏற்று நீர்ப்பாசனம் மீள்புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இங்கு சூரிய மின்சக்தியில் இயங்கும் வகையில் இந்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளமை முக்கியமானது.

## நன்னீர் மீன் பிடி

இரணைமடு குளத்தின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் வாழ்கின்ற மக்களில் பலர் நன்னீர் மீன் பிடியை நம்பி வாழ்கின்ற குடும்பங்களாக காணப்படுகின்றனர். இதில் மேற்கு பகுதியில் சாந்தபுரம் கிராமம் முக்கியமானது.

## குடி நீர்

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பிரதேசங்களுக்கு குடிநீர் தற்போது குழாய் வழி குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக பூநகரி, பளை, கண்டாவளையின் சில பகுதிகள், கரைச்சி பிரதேசத்தின் பல கிராமங்கள் இந்த குடிநீர் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளன. இதில் கிளிநொச்சி நகரும் நகரை அண்டிய பிரதேசங்கள் தற்போது குடிநீரை பெற்றுள்ளன.

எனவே இந்த குடிநீர் திட்டத்திற்கான நீர் இரணைமடுகுளத்திலிருந்தே பெறப்படுகிறது. அத்தோடு கிளிநொச்சியின் பல பிரதேசங்களின் நிலத்தடி நீரை பேணுவதிலும் இரணைமடுகுளம் பங்கு வகிக்கிறது.

## தொழில் வாய்ப்பு

இரணைமடுகுளத்தின் மூலம் விவசாயம் நன்னீர் மீன்பிடி போன்றவற்றில் நேரடியாக பங்குகொண்டு தங்களின் தொழிலை மேற்கொண்டுவருகின்றவர்களை விட ஆயிரக்கணக்கானவர்கள் மறைமுக வேலைவாய்ப்பு மற்றும் வருமானங்களை பெறுகின்றவர்களாக காணப்படுகின்றனர். விவசாய தொழிலாளிகள், விவசாய உள்ளீடுகள் விற்பனையாளர்கள், நன்னீர் மீன் விற்பனையாளர்கள் என பலர் இதில் அடங்குகின்றனர். எனவே இப்படி கிளிநொச்சியின் வாழ்வியலோடு ஒன்றர கலந்துவிட்ட இரணைமடு கிளிநொச்சி மக்களின் அடையாளம் மட்டுமல்ல மாவட்டத்தின் அடையாளமும் கூட.



மு.தமிழ்ச்செல்வன்
















# தினகரன் கற்பக விருட்சம் நிகழ்வின் நிழல்கள்

Our valuable sponsors:














வழமையான கோடிக்கணக்கான பரிசுகளுக்கு மேலதிகமாக

தினசரி ரூ. 500 வீதம் ஏராளமான பரிசுகளை வெல்லுங்கள்

## நாளாந்தம் சனிதா வாங்குங்கள்

புதிய பரிசமைப்புடன்

## வாரத்தின் 7 நாட்களும் சீட்டிழுக்கப்படுகின்றது

நிதி அமைச்சு – அபிவிருத்தி லொத்தர் சபை | www.dlb.lk

www.peoplesinsurance.lk




# பீப்பள்ஸ் இன்சூரன்ஸ்

இலங்கைவாழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டு, என்றும், எப்பொழுதும், எவ்வித இக்கட்டான தருணத்திலும், உங்களுடன் இணைந்திருந்து, உங்களை அன்புடன் பாதுகாக்கும் பீப்பள்ஸ் குழுமத்தின் நிறுவனமான பீப்பள்ஸ் இன்சூரன்ஸ், சிறந்த காப்புறுதி சேவைகளை ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக வழங்கி வருகின்றது.

அன்றாட வாழ்க்கை, வியாபாரம் என பல தேவையுணர்ந்து அவரவர்க்கேற்ற காப்புறுதித் தேவைகளுக்கான தீர்வுகளால் வடக்குவாழ் மக்களினது வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தி வருவதுடன், மேலும் பல புதிய அனுகூலங்களையும் வழங்குகின்றது.

## தொடர்ந்தும் உங்கள் காப்புறுதித் தேவைகளை நிறைவேற்றித் தருவதற்காக வடக்கில் வியாபித்துள்ள பீப்பள்ஸ் இன்சூரன்ஸின் கிளைகள்:

**யாழ்ப்பாணம்:**
**பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி,**
**(பிராந்திய கிளை)**
இல. 12, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: ந. சுபாங்கன்
தொ.பே.: 0703743022 / 0776590322

**வவுனியா:**
**பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி,**
**(பிராந்திய கிளை)**
42/46, 1ம் குறுக்குத்தெரு,
வவுனியா.
தொடர்புகளுக்கு: ச. சுகிர்தன்
தொ.பே.: 0768096036 / 0716921832

**கிளிநொச்சி:**
**பீப்பள்ஸ் லீஸிங் அன்ட்**
**ஃபினான்ஸ் பிஎல்சி,**
A-9 வீதி, கரடிபோக்கு சந்தி,
கிளிநொச்சி.
தொடர்புகளுக்கு: கு. மோகனேஸ்வரன்
தொ.பே.: 0766088885/ 0715306487

**சுன்னாகம்:**
**பீப்பள்ஸ் லீஸிங் அன்ட்**
**ஃபினான்ஸ் பிஎல்சி,**
இல. 115, காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.
தொடர்புகளுக்கு: கி. நிரூஜன்
தொ.பே.: 0701320474 / 0771043636


**நெல்லியடி:**
**பீப்பள்ஸ் லீஸிங் அன்ட்**
**ஃபினான்ஸ் பிஎல்சி,**
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.
தொடர்புகளுக்கு: அ. அனோஜன்
தொ.பே.: 0701672300 / 0778976209

PEOPLE'S BANK
இன் உறுப்பினர்
PLC

**பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி,** இல.07, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05.
தொலைபேசி : +94 11-2 126 126 | தொலைநகல்: +94 11-2 126 109 | மின்னஞ்சல்: pilassist@plc.lk
**துரித இலக்கம் - 0112 206 306**

PEOPLE'S INSURANCE
அன்புடன் பாதுகாக்கும்

• வாகனம் • வீடு • வியாபாரம் • திருட்டு • இயந்திரம் • கடல் • சுற்றுலா • தீ







இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஒக்டோபர் மாதம் 7ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the Sunday Observer

SUNDAY OBSERVER

Marriage Proposals for 15 Words - Rs. 560/-

For each additional word Rs. 23/- will be charged

To avoid inconvenience, send your Marriage Proposals through e-mail...

classified@lakehouse.lk

For confirmation & more details - Anusha - 077 7 278 948 | Piyumi - 011 2 429 383 | Ramani - 011 2 429 347

# பெறுகை அறிவித்தல்

## சுகாதாரத் திணைக்களம் (மே.மா)

## கொழும்பு பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்

எமது பிரிவிற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| லொட் இலக்கம் | உருப்படி | தொகை |
|---|---|---|
| லொட் இலக்கம் 01 | AUTOCLAVE FOR LABORATORY AT DGH AWISSAWELLA | 01 |
| லொட் இலக்கம் 02 | TABLE TOP MINI AUTOCLAVES | 19 |
| லொட் இலக்கம் 03 | EXERCISE ECG MACHINE FOR BH HOMAGAMA | 01 |
| லொட் இலக்கம் 04 | CONVERSION OF USED CONTAINERS AS OFFICE FOR PUBLIC HEALTH INSPECTORS | 04 |

விலைமனு ஆவணங்களை 2020.10.07 முதல் 2020.10.27 வரையான வார வேலை நாட்களில், மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை, மீளளிக்கப்படாத, லொட் இலக்கம் 01 தொடர்பாக ரூ. 1,000.00 உம், லொட் இலக்கம் 02 தொடர்பாக ரூ 2,200.00 உம், லொட் இலக்கம் 03, 04 தொடர்பாக ரூ. 1,200.00 கட்டணமொன்றையும் கொழும்பு பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும். தேவையெனில், கட்டணம் செலுத்தப்படாது விலைமனு ஆவணங்களை இந்த அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

லொட் இலக்கம் 04 தொடர்பான முன்னோடி விலைமனுக் கூட்டமொன்ற 2020.10.12 அன்று மு.ப. 10.00 மணிக்கு, கொழும்பு பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும்

பூரணப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்கள் இரண்டு பிரதிகளைக் கொண்டதாக (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக) முத்திரை பொறிக்கப்பட்டு, இந்த அலுவலகத்தின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படவோ அல்லது பதிவுத் தபாலில் ‘தலைவர், பெறுகைக் குழு, பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. 1287, புதிய செயலாளர் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு 10’ என்ற முகவரிக்கு அனுப்பப்படவோ வேண்டும். விலைமனுக்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் லொட் இலக்கம் (.......) வழங்கப்படுவது தொடர்பான விலைமனுக்கள் - 2020 எனக் குறிப்பிட வேண்டும்.

விலைமனுக்கள் பொறுப்பேற்கப்படாத 2020.10.28 அன்று மு.ப. 10.00 மணிக்கு முடிவடைவதுடன், அவைதிறக்கப்படுவது, 2020.10.28 அன்று முப. 10.00 மணிக்கு இந்த அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதுடன் மேற்படி நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவரின் அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்கு கலந்துகொள்ளலாம்.

**தொலைபேசி இலக்கம் - 011-2452022**

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - கொழும்பு**
**த.பெ. 1287,**
**புதிய செயலாளர் கட்டிடம்,**
**மாளிகாவத்தை,**
**கொழும்பு 10**

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

**கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல்கள் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு**

# பதவி வெற்றிடம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையிலுள்ள பின்வரும் பதவியை நிரப்புவதற்காக பொருத்தமான தகைமையுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பாவனையாளர் அலுவல்கள் பேரவைக்கான செயலாளர் (HM I-I)

நுகர்வோர் அலுவல்கள் சட்டத்தினால் விதிக்கப்பட்ட பாவனையாளர் அலுவல்கள் பேரவையின் தினசரி செயற்பாடுகளின் அனைத்துமடங்கிய நிருவாகம் பேரவையின் அனைத்து நடவடிக்கைகளின் ஆவணங்கள் மற்றும் குறிப்புக்களை பேணல். பேரவையின் புலன்விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பாக பேரவையினால் உருவாக்கப்பட்ட அறிவித்தல்கள் மற்றும் கட்டளைகளை தயாரித்தல் மற்றும் அனுப்புதல், பேரவையின் புலன்விசாரணைகள் மற்றும் விசாரணைகளின் நோக்கத்திற்காக பேரவையினால் தேவைப்படுத்தப்படும் அனைத்து சான்றுகளையும் தயாரித்தல் மற்றும் பெற்றுக் கொள்ளல். பேரவையின் புலன்விசாரணைகள் மற்றும் விசாரணைகளுக்காக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை மற்றும் ஏனைய உரித்தான நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளல்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:** 15 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவத்துடன் கம்பனியொன்றின் செயலாளராக ஒரு சட்டத்தரணி நிலையியல் பேரவையின் அல்லது ஒழுங்குபடுத்தும் அமைப்பொன்றில் நிருவாக மட்டத்தில் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் செயலாளரொருவராக பணியாற்றிருத்தல்.

**உள்வாரி:** பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் உரித்தான பாடப்பரப்பில் I ஆம் தர முகாமையாளர் வகுதி (MM 1-1)பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை.

**சம்பள அளவுத்திட்டம்:** 02/ 2016 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் எச்எம் 1-1 2016: ரூபா (81,670 – 15 X 2,270 – 115,720)

**வயது:** 35 வயதிற்கு குறையாமலும் 55 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

**போக்குவரத்து மற்றும் எரிபொருள் படி:** உத்தியோகபூர்வ வாகனமொன்றை பாவிப்பதற்கான அல்லது மாதாந்த போக்குவரத்து படியாக 50,000 ரூபா அத்துடன் 120 லீற்றர் எரிபொருள் படி வழங்குவதற்கான தகுதி.

**பொது நிபந்தனைகள்:**

**படிகள்:** சம்பளத்திற்கு மேலதிகமாக, வாழ்க்கைச் செலவுப் படி, தொழில்சார் படி மற்றும் வேறேதாவது ஏற்புடைய படிகளும் உரித்தான அரசாங்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் வழங்கப்படும்.

**நியமனத்தின் தன்மை:** நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் உரித்தான அரசாங்க சுற்றறிக்கைகளின் பிரகாரமான ஏற்பாடுகளுக்கான தகுதித்தன்மை.

**நியமனத்தின்போது வழங்கப்படும் சம்பளம்:** வெளிவாரியாக நியமிக்கப்படும் நபர்கள் சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப படிநிலையில் அமர்த்தப்படுவார்கள். உள்ளவாரி நியமிக்கப்படும் நபர்களின் சம்பளமானது தாபனக் கோவை-1 இன் VII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**உறுதிப்படுத்தல்:** நியமிக்கப்படும் விண்ணப்பதாரிகள் மூன்று வருடங்களுக்கான தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள். அவர் (ஆண்/பெண்) அவரது தகுதிகாண் காலப்பகுதியில் அவரது (ஆண்/பெண்) செயற்பாடு மற்றும் நடத்தை ஆகியன திருப்திகரமாக இருந்தால் அவர் அவரது பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். உள்வாரியாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஏற்கனவே அவரது பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் ஒரு வருட காலத்திற்கான பதில் கடமையாற்றும் காலத்திற்கு உட்பட்டதாகவிருப்பார்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையானது நியமிக்கும் அலுவலரினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் நடாத்தப்படும்.

**ஏனையவை:** இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு ஆயத்தமாகவிருத்தல் வேண்டும். பதவியை சிறந்த முறையில் செயற்படுத்துவதற்காக உடல் மற்றும் உள அபிவிருத்தியில் சிறந்த நிலையை கொண்டிருத்தல் வேண்டும். மிகச்சிறந்த குணவியல்புகளை கொண்டிருத்தல் வேண்டும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களில் 2020.10.21 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பித்தல் வேண்டும். தகைமைகளை சான்று பகரும் உரித்தான சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். அரச துறைகளின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் நிறுவனங்களின் தலைவர்களூடாகவே அனுப்பப்படல் வேண்டும். மேலேயுள்ள தேவைப்படுத்தல்களுக்கு ஒத்திசையாத விண்ணப்பங்கள், பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் இறுதித் திகதிக்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஆதரவு தேடல் தகைமையை இழத்தல் என கருதப்படும். விண்ணப்பிக்கும் பதவி தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும். உங்கள் விண்ணப்பங்களை தயவு செய்து பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.

**தலைவர்,**
**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை,**
**2 ஆம் மாடி, கூமொநி செயலகக் கட்டிடம்,**
**இல.: 27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு-02.**

## வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையை நடைமுறைப்படுத்துவதற்கான விலைமனுக் கோரல்

2020/2021 ஆண்டில் கரவனல்ல, மற்றும் மாவனல்லை ஆதார வைத்தியசாலைகளின் சிற்றுண்டிச்சாலைகளை நடைமுறைப்படுத்துவதற்காக 2020.10.22 மு.ப. 10.00 வரை தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2020.10.08 முதல் 2020.10.21 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேகாலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலக கணக்குப் பிரிவில் இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்கள் விலைமனுப்படிவங்களுடன் வழங்கப்படும்.

**மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**கேகாலை**
**தொ.பே.இல. 035-2222549/ 035-2222578/ 035-2222571**
**தொலைநகல் இல: 035-2221253**

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்**
**கேகாலை.**

## ரிதிகம பிரதேச சபை

# வழங்குநர்களைப் பதிவு செய்துகொள்ளல் – 2021ஆம் வருடம்

2021ஆம் வருடத்திற்காக இச்சபைக்குத் தேவைப்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்துகொள்ளல் 2020-12-15ம் திகதி பி.ப. 3.00 மணி வரை மேற்கொள்ளப்படும்.

பதிவு செய்து கொள்ள விரும்பும் உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்கள் ஒவ்வொரு விடயத்திற்குமான குறித்த கட்டணத்தை காசோலை மூலமாகவோ அல்லது ரொக்கப் பணமாகச் செலுத்தப்பட்டு பதிவு செய்யப்படல் வேண்டும். பெயர் மற்றும் வியாபாரத்தின் விபரங்களுடன் ‘தலைவர், பிரதேச சபை, ரிதிகம’ என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படவோ அல்லது நேரில் வந்து விண்ணப்பங்கள் கையளிக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ‘வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2021ஆம் வருடம்’ என எழுதப்பட வேண்டியதுடன் காசோலைகள், ‘ரிதிகம பிரதேச சபை நிதியம்’ பெயரில் அனுப்பப்பட வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களுடனும் வியாபார பதிவுச் சான்றிதழ், வங்கிக் கணக்கு, அனுபவம் முதலியனவற்றை நிரூபிப்பதற்காகத் தேவைப்படும் ஆவணங்களின் புகைப்படப் பிரதிகளை அனுப்பிவைக்க வேண்டும். நிர்மாணிப்புகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் மேலேயுள்ள ஆவணங்களுக்குப் புறம்பாக ICTAD பதிவுச் சான்றிதழ், பெறுமதிச் சான்றிதழ் என்பன பிரதேச செயலாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், வெற்றிகரமான ஒப்பந்தக்காரர் என நிரூபிப்பதற்காக எழுத்து மூல சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும். (ICTAD பதிவுச் சான்றிதழ் இருந்தால் பெறுமதிச் சான்றிதழ் அவசியமில்லை)

பதிவு செய்து கொண்டவர்களிடமிருந்து விலைமனு கோரப்பட்டு, குறித்த சேவைகளை நிறைவேற்றிக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அதற்குப் பறம்பாக விலைமனு கோரப்பட்டு சேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றத் தவறும் நபர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும்

| தொடர் இலக் கம். | பொருள் மற்றும் சேவை | பதிவுக் கட்டணம் (10% முத்திரை வரி சகிதம்) (ரூ) |
|---|---|---|
| | **வழங்கல்கள்** | |
| 1 | காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1100.00 |
| 2 | அச்சுப் பொறிகளுக்கான டோனர் | 1100.00 |
| 3 | மரத்தளபாடங்கள் மற்றும் இரும்பினாலான வீட்டுத் தளபாடங்கள் | 1100.00 |
| 4 | துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் கிருமிநாசினித் திரவங்கள் | 1100.00 |
| 5 | வீதிக்காக ஹியூம் குழாய்கள் மற்றும் சீமெந்து தயாரிப்புகள் | 1100.00 |
| 6 | சகல கனரக உபகரணங்கள் | 1100.00 |
| 7 | வீதி விளக்குகள், வீதி விளக்கு உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்கள் | 1100.00 |
| 8 | சீருடை மற்றும் ஏனைய துணிவகைகள் / பாதணிகள் | 1100.00 |
| 9 | வீதிப் பராமரிப்புச் செய்வதற்கான பெகோ வீதி செப்பனிடும் இயந்திரம் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் | 1100.00 |
| 10 | தட்டச்சு, கணக்கிடும் பொறி, புகைப்படப் பிரதி பண்ணும் இயந்திரம், ரோணியோ இயந்திரம், டுப்ளோ இயந்திரம், அச்சுப் பொறிகளுக்குத் தேவையான துணையுறுப்புக்களை வழங்கல் | 1100.00 |
| 11 | நீர்க்குழாய் துணைப்பாகங்கள் மற்றும் நீர் வழங்கல் உபகரணங்கள் | 1100.00 |
| 12 | கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | 1100.00 |
| 13 | அனைத்து வகையான டயர், டியூப், பெட்டறிகள் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் | 1100.00 |
| 14 | நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 1100.00 |
| 15 | மணல், செங்கல், சக்கைக் கல், கிரவல் மற்றும் கருங்கல் | 1100.00 |
| 16 | தும்புத்தடி, ஈர்க்கிள், மலசலகூடத் தூரிகை மற்றும் சுகாதார உபகரணங்கள் | 1100.00 |
| 17 | அரிந்த மரம், தீராந்திகள், ரீப்பைகள், பலகை மற்றும் இறப்பர் விறகு வழங்குதல் | 1100.00 |
| 18 | தகனச்சாலைக்கு எரிவாயு வழங்குதல் | |
| 19 | தும்பு ஈர்க்கிள் செயற்றிட்டத்திற்குத் தேவையான பொருட்கள் (தும்பு, ஓலை, மரப் பிடிகள் மற்றும் ஏனைய துணைப்பாகங்கள்) | 1100.00 |
| | **சேவைகள்** | |
| 01 | மோட்டார் வாகன திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்களை மேற்கொள்ளல் | 1100.00 |
| 02 | பழைய பத்திரிகைகள் மற்றும் சிதைந்த பொருட்களைக் கொள்வனவு செய்தல் | 1100.00 |
| 03 | பெயர்ப்பலகைகள், பதாகைகள் வரைதல் நினைவுப் படிவங்கள் வழங்கல். | 1100.00 |
| 04 | தொழிலாளர் ஆயுதங்களை தயாரித்தல் மற்றும் திருத்தவேலைகள் | 1100.00 |
| 05 | கணனி இயந்திர திருத்தவேலைகள் | 1100.00 |
| 06 | அச்சு வேலைகள் (பி.ச. அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள், பற்றுச்சீட்டுகள்) | 1100.00 |
| 07 | மொழி பெயர்ப்புச் சேவைகள் | 1100.00 |
| 08 | காணிகளை அளப்பதற்கான நில அளவையாளர்கள் | 1100.00 |
| 09 | நிறப்பூச்சு பூசுபவர்கள் | 1100.00 |
| 10 | மரங்களை வெட்டுவோர் | 1100.00 |
| 11 | தகனச்சாலை பராமரிப்புச் சேவைகளைச் செய்தல் | 1100.00 |
| 12 | சட்டத்தரணி சேவைகளை வழங்குதல் | 1100.00 |
| 13 | உபசார சேவைகளை வழங்குதல் | 1100.00 |
| 14 | தட்டச்சுப் பொறிகள், கணித்தல் பொறிகள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்கள், அச்சுப் பொறிகளின் திருத்தவேலைகள் | 1100.00 |
| 15 | பக்கோ இயந்திரம், வீதி அழுத்தும் இயந்திரம், மோட்டார் கிரேடர் இயந்திரங்களின் திருத்தவேலைகள் | 1100.00 |
| | **ஒப்பந்தக்காரர்கள்** | |
| | 2,000,000.00 ரூபாவிற்குக் குறைவான கைத்தொழில்களுக்காக | 1100.00 |
| | 2,000,000.00 ரூபாவிற்குக் கூடுதலான கைத்தொழில்களுக்காக | 1100.00 |

**தலைவர்,**
**கே. வில்பட் குலதுங்க,**
**ரிதிகம பிரதேச சபை**

**2020-10-02ஆம் திகதி,**
**ரிதிகம பிரதேச சபை அலுவலகத்தில்.**

# பெறுகை அறிவித்தல்

திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

## இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் தொழிற்பயிற்சி நிலையக் கட்டிடங்களை நவீனமயப்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

| தொ. இல. | மாவட்டம் | விபரங்கள் (தலைப்பு) | பெறுகை இலக்கம் | பொறியியல் மதிப்பீடு (சில்லறைச் செலவுகள் மற்றும் வெட் இன்றி) ரூபா மில்லியன் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி | தேவையான CIDA (ICTAD) பதிவு (கட்டிடங்கள்) | மீளளிக்கப் படாத ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அம்பாறை | தமன தொழிற் பயிற்சி நிலையத்தின் கட்டிடங்களை நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் | VTA/PROC/CON/SSDP/SM/2020/ 04/ Damana - Rehabilitation and Improvements | 5.5 | ரொக்கப் பணமாக 27,750.00 ரூபா (இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட) பற்றுச்சீட்டு அல்லது 55,500.00 ரூபா பெறுமதியான வங்கிப் பிணை முறி | C 07 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் | 1000.00 |
| 2 | மொனராகலை | அத்திமலை தொழிற் பயிற்சி நிலையத்தின் கட்டிடங்களை நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் | VTA/PROC/CON/SSDP/SM/2020/ 05/ Athimale - Rehabilitation and Improvements | 3.9 | ரொக்கப் பணமாக 19,500.00 ரூபா (இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட) பற்றுச்சீட்டு அல்லது 39,000.00 ரூபா பெறுமதியான வங்கிப் பிணை முறி | C 08 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் | 1000.00 |
| 3 | மொனராகலை | அத்திமலை தொழிற் பயிற்சி நிலையத்தின் விவசாய உபகரண பயிற்சி வேலைத் தளத்தை மேம்படுத்துதல் மற்றும் எல்லை வேலியை நிர்மாணித்தல் | VTA/PROC/CON/SSDP/SM/2020/ 15/ Athimale - Agriculture Equipment Workshop & Fence | 3.2 | ரொக்கப் பணமாக 16,000.00 ரூபா (இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட) பற்றுச்சீட்டு அல்லது 32,000.00 ரூபா பெறுமதியான வங்கிப் பிணை முறி | C 08 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் | 1000.00 |
| 4 | மாத்தறை | றுஹுனுகம தொழிற் பயிற்சி நிலையப் பிரதான கட்டிடத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் வேலைகள் | VTA/PROC/CON/SSDP/SM/2020/ 06/ Ruhunugama – Extension of Main Building | 8.1 | ரொக்கப் பணமாக 40,000.00 ரூபா (இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட) பற்றுச்சீட்டு அல்லது 80,000.00 ரூபா பெறுமதியான வங்கிப் பிணை முறி | C 07 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் | 1000.00 |
| 5 | திருகோணமலை | சேருநுவர தொழிற் பயிற்சி நிலையக் கட்டிடத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் சிற்றுண்டிச்சாலையை நிர்மாணித்தல் | VTA/PROC/CON/SSDP/SM/2020/ 07/Serunuwara - Rehabilitation and Improvements to Main Building and Cafeteria | 6.2 | ரொக்கப் பணமாக 30,000.00 ரூபா (இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட) பற்றுச்சீட்டு அல்லது 60,000.00 ரூபா பெறுமதியான வங்கிப் பிணை முறி | C 07 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் | 1000.00 |
| 6 | ஹம்பாந்தோட்டை | வெலிப்பிட்டிய தொழிற் பயிற்சி நிலைய பிரதான கட்டிடத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் | VTA/PROC/CON/SSDP/SM/2020/ 08/ Welipitiya - Rehabilitation & Improvement to Main Building and Retaining Wall | 4.4 | ரொக்கப் பணமாக 22,000.00 ரூபா (இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட) பற்றுச்சீட்டு அல்லது 44,000.00 ரூபா பெறுமதியான வங்கிப் பிணை முறி | C 08 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் | 1000.00 |
| 7 | ஹம்பாந்தோட்டை | வெலிப்பிட்டிய தொழிற் பயிற்சி நிலையத்தின் வேலைத் தளத்தை மேம்படுத்துதல் மற்றும் சிற்றுண்டிச்சாலையை நிர்மாணித்தல் | VTA/PROC/CON/SSDP/SM/2020/ 17/ Welipitiya – Extension to Workshop Building and Cafeteria | 3.0 | ரொக்கப் பணமாக 14,500.00 ரூபா (இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட) பற்றுச்சீட்டு அல்லது 29,000.00 ரூபா பெறுமதியான வங்கிப் பிணை முறி | C 08 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் | 1000.00 |
| 8 | யாழ்ப்பாணம் | கைதடி தொழிற் பயிற்சி நிலையக் கட்டிடத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் | VTA/PROC/CON/SSDP/SM/2020/ 10/ Kaithadi - Rehabilitation and Improvements | 8.1 | ரொக்கப் பணமாக 40,000.00 ரூபா (இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட) பற்றுச்சீட்டு அல்லது 80,000.00 ரூபா பெறுமதியான வங்கிப் பிணை முறி | C 07 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் | 1000.00 |
| 9 | கம்பஹா | கட்டான தொழிற் பயிற்சி நிலையக் கட்டிடத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் | VTA/PROC/CON/SSDP/SM/2020/ 11/ Katana - Rehabilitation and Improvements | 6.5 | ரொக்கப் பணமாக 32,500.00 ரூபா (இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட) பற்றுச்சீட்டு அல்லது 65,000.00 ரூபா பெறுமதியான வங்கிப் பிணை முறி | C 07 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் | 1000.00 |
| 10 | மட்டக்களப்பு | வாகறை தொழிற் பயிற்சி நிலையக் கட்டிடத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் | VTA/PROC/CON/SSDP/SM/2020/ 12/ Vaharei - Rehabilitation and Improvements | 3.8 | ரொக்கப் பணமாக 19,000.00 ரூபா (இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட) பற்றுச்சீட்டு அல்லது 38,000.00 ரூபா பெறுமதியான வங்கிப் பிணை முறி | C 08 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் | 1000.00 |
| 11 | மாத்தளை | இரத்தோட்ட தொழிற் பயிற்சி நிலையத்தில் எல்லைச் சுவர் மற்றும் சிற்றுண்டிச்சாலையை நிர்மாணித்தல் | VTA/PROC/CON/SSDP/SM/2020/ 13/ Rattota – Retaining Wall & Cafeteria | 8.1 | ரொக்கப் பணமாக 39,000.00 ரூபா (இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட) பற்றுச்சீட்டு அல்லது 78,000.00 ரூபா பெறுமதியான வங்கிப் பிணை முறி | C 07 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் | 1000.00 |
| 12 | கிளிநொச்சி | கண்டாவளை தொழிற் பயிற்சி நிலையக் கட்டிடத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் | VTA/PROC/CON/SSDP/SM/2020/ 09/ Kandawalai - Rehabilitation and Improvements | 2.5 | ரொக்கப் பணமாக 12,500.00 ரூபா (இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட) பற்றுச்சீட்டு அல்லது 25,000.00 ரூபா பெறுமதியான வங்கிப் பிணை முறி | C 08 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் | 1000.00 |

1. தலைவர், சிறு பெறுகைக் குழு, இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினால் மேற்படி தொழிற் பயிற்சி நிலையங்களின் கட்டிடங்களை நவீனமயப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி வேலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டி ரீதியிலான நடைமுறையில் விலைகள் கோரப்படும். (NCB) இந்தப் பெறுகையின் மதிப்பீட்டுத் தொகை 50 மில்லியன் ரூபாவுக்கும் குறைவாக உள்ளமையினால் 4/2016(ii)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச முன்னுரிமை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவு வகைப்படுத்தலுக்கு இயைபான முன்னுரிமை வழங்கப்படும்.
3. கட்டிட நிர்மாண ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு இயைபான முன் தகைமைகள் ஒவ்வொரு விலைக்கோரல் ஆவணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதுடன் ஒப்பந்தத்திற்காக விண்ணப்பிக்கையில் ஒப்பந்தக்காரர் இது தொடர்பான கவனத்தைச் செலுத்துமாறு அறிவிக்கப்படுகின்றது.
4. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் தேவையான மேலதிக விபரங்கள் மற்றும் விலைக்கோரல் ஆவணங்களை 2020-10-07ஆம் திகதி முதல் 2020-10-19ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களைத் தொடர்பு கொண்டு அல்லது வருகை தந்து பரீட்சித்துப் பார்க்கலாம்.

**உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்),**
**பெறுகைப் பிரிவு,**
**இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை,**
**4வது மாடி, 'நிபுணதா பியச', 354/2, எல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05.**
**தொ.பே. 011-2352150 தொலைநகல்: 011-2352150**

5. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேற்படி (04ஆம் இலக்கம்) முகவரிக்கு CIDA (ICTAD) பதிவுச் சான்றிதழின் புகைப்படப் பிரதி சகிதம் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2020-10-07ஆம் திகதி முதல் 2020-10-19ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் ஒவ்வொரு விலைமனுவுக்கும் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் சிறாப்பருக்கு செலுத்தியதன் பின் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
6. இதற்கு இயைபான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2020-10-14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேற்படி 04ஆம் இலக்க முகவரியிலுள்ள இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் 5ஆம் மாடியில் இடம்பெறும்.
7. மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை வைப்பை ரொக்கப் பணமாக இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இணைத்தோ அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் தலைவர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை எனும் பெயரில் பெற்றுக்கொண்ட வங்கிப் பிணை முறியொன்றின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை அதன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் (Bid Box) 2020-10-20ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2020-10-20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
9. ஒரு விலைமனுதாரர் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாண ஒப்பந்தம் ஒன்றுக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கோ விலைக்கோரல்களை முன்வைக்கலாம் என்பதுடன் இயைபுடைய ஒப்பந்தத்திற்காக விலைக்கோரல் ஆவணங்களை வெவ்வேறாக சமர்ப்பித்தல் வேண்டும். சகல விலைமனுக்களுடனும் மேற்படி அட்டவணையில் ஒவ்வொரு பெறுகைக்காக காட்டப்பட்டுள்ள வகையில் வெவ்வேறான மீளளிக்கப்படும் பண வைப்புப் பற்றுச்சீட்டு அல்லது வங்கிப் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும். (மூலப் பிரதியுடன் இணைத்தல் வேண்டும்)
10. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுகை இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
11. இது துரிதமான வேலைத் திட்டமென்பதனால் மேற்படி சகல செயற்றிட்டங்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ள கால எல்லையினுள் நிறைவு செய்தல் அவசியமும் கட்டாயமுமாகும்.

**தலைவர்,**
**சிறிய பெறுகைக் குழு,**
**இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை,**
**4வது மாடி, "நிபுணதா பியச", 324/2, எல்விட்டிகல மாவத்தை,**
**நாரஹேன்பிட்டி,**
**கொழும்பு 05.**

**For classified advertisements and for replies**
received in response to advertisements published under Lake House box numbers
Please Contact → MANAGER FRONT OFFICE → Hotline: 1949
LAKE HOUSE

# காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)
## 39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2013, நவம்பர் 22 ஆந் திகதிய 1837/56 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 348 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) இன் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு அரசின் சார்பில் அச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (அ) ஆம் பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட முழுக்காணித் துண்டினை இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்,

**எஸ்.எம். சந்திரசேன,**
**காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.**

**எனது இல : 4-3/ 10/2011/LRB/44.**
**காணி எடுத்தல் உத்தியோகத்தரின் இல.:GCF/ATH/KD/21A/LR.**
**காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,**
**'பிஹிகத மெதுர', காணிச் செயலகம், இல. 1200/6,**
**ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,**
**2020, யூலை 15.**

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவெல பிரதேச செயலாளர் - பிரிவில், இல. 479ஈ- பட்டபொத கிராம அலுவலர் பிரிவில் தலங்கம தெற்கு(கடுவெல மாநகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2020.02.18 ஆந் திகதிய COKDW/2019/645 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித்துண்டு:

**1. துண்டு 'A' - லபுவெல்தெனிய அல்லது ஈரியகஹ கும்புர - விஸ்தீரணம் : (11.35 பேர்ச்சஸ்) 0.0287 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு B மற்றும் கொ 8559 ஆம் ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 23: கிழக்கு : கொ 8559 ஆம் ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 23: தெற்கு: கொ 8559 ஆம் ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 23 மற்றும் 25, கொ 9681 ஆம் ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 24: மேற்கு: கொ 9681 ஆம் ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 24 மற்றும் 27, இந்த வரைபடத்தின் துண்டு B.

08-562

## பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**ரத்னவீர ட்ரேடிங் இன்டர்நெஷனல் (பிறைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம்: **பீவீ 119210**
கூட்டிணைக்கப்பட்ட திகதி:
**2017.01.05**
பதிவு முகவரி:
**இல. 77, அவேரியவத்த, அலுபோமுல்ல, பாணந்துறை.**

**பணிப்பாளர்**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ், பின்வரும் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி 2019.02.25ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

கம்பனிப் பெயர்:
**புவர் பீப்பல்ஸ் வெல்பெயார் பவுண்டேஷன்**
கம்பனி இல:
**ஜி ஏ 00209238**
பதிவு செய்யப்பட்ட முகவரி:
**கலாநிதி அல்ஹாஜ் M.L.A.M. ஹிஸ்புல்லா அரங்க வீதி, 25/27, சரீப் ஹாஜி ஒழுங்கை, காத்தான்குடி-03.**

**எம்.எப். பாத்திமா பஸ்ரினா**
**கம்பனிச் செயலாளர்**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்: **ராதா டிரேடிங் இன்டஸ்டிரீஸ் (பிரைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம்: PV 91549
பதிவு முகவரி: **இல. S 26, 2ஆம் மாடி, சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11**
கம்பனியின் புதிய பெயர்: **ராதா டிரேடிங் (பீவீடி) எல்டிடி**

**மேற்படி கம்பனி சார்பாக**
**Varners International (Private) Limited**
**Level 14, West Tower, World Trade Center,**
**Echelon Square, Colombo 01. T.P. 0114394350**

# பெறுகை அறிவித்தல்
## பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2021

### ஆதார வைத்தியசாலை (போதனா) - கம்பளை

2021 ஆண்டிற்காக கம்பளை - ஆதார வைத்தியசாலைக்கு (போதனா) பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்யும் முகமாக, கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள, ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரால் 2020.10.28ஆம் திகதி மு.ப. 10.00 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொடர் இல. | விடயம் | தகைமைகள் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. | 2021ஆம் வருடத்திற்கான பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் | M8 அல்லது C9 (திருத்தப்பட்ட பதிவு செய்தல் விதிமுறைக்கமைய) EM5 அல்லது அதற்கு மேல் (மின்சார பராமரிப்பிற்காக) | ரூபா 1500.00 |

02. கேள்வி ஆவணங்களை, 2020.10.07ஆம் திகதி வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 - பி.ப. 2.00 இற்கு இடையான காலத்திற்குள் கம்பளை, ஆதார வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கான தகைமையை உறுதி செய்யும் சான்றுகள் மற்றும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் கம்பளை, ஆதார வைத்தியசாலையின் கணக்காளரிடம் காசாகச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொண்ட பொதுப்படிவம் 172 பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது வேறு வைத்தியசாலை அல்லது வைத்தியசாலைகளில் கடந்த அண்மைய மூன்று வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு வேலைகள் சம்பந்தமாக அனுபவம் பற்றிய சான்றிதழ்களை சமர்ப்பித்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

04. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை 2020.10.28ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கம்பளை, ஆதார வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2021'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்தவுடன் அதாவது 2020.10.28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வைத்தியசாலை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரபூர்வ பிரதிநிதி இந்நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.

06. கேள்வி ஆவணங்களை அலுவலக நேரங்களில் கட்டணமின்றி பரீட்சிக்கலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை (போதனா)**
**கம்பளை**

# சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை - வெலிசறை
## பண்டங்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2021

2021 வருடத்திற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக, இலங்கையிலுள்ள வழங்குநர்கள்/ பதிவு செய்து கொண்டுள்ள வர்த்தக சங்கங்கள்/ கூட்டுறவுச் சங்கங்கள்/ கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

01. அனைத்து விண்ணப்பங்களும் 2020 நவம்பர் 09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு 'பணிப்பாளர், சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை, வெலிசறை' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 2021 வருடம் தொடர்பாக வழங்குநர்களைப் பதிவு செய்தல் எனக் குறிப்பிடப்பட வேண்டியதுடன், தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| (அ) வழங்கல்கள் | (ஆ) சேவைகள் |
|---|---|
| 1. அச்சு இயந்திரம்/ ரோணியோ இயந்திரம் தொடர்பாகத் தேவைப்படும் ரிபன்/ டோணர்/ கார்ட்ரிஜ் உள்ளிட்ட அலுவலக காகிதாதிகள். | 17. அலுவலக உபகரணங்களைப் புதுப்பித்தல்/ பழுது பார்த்தல். (போட்டோக்கொப்பி இயந்திரம், ரோணியோ இயந்திரம், கணனி, தட்டச்சு, பெக்ஸ் இயந்திரம் போன்றவை) |
| 2. உலோக/ மரத்தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 18. அனைத்துவகையிலான வாகன பழுதுபார்த்தல்கள், வாகன வளிச்சீராக்கி மற்றும் மின்சாரத் தொகுதி பழுதுபார்த்தல்கள், நிறப் பூச்சிடல் மற்றும் புதுப்பித்தல் |
| 3. கணனி இயந்திரம்/ பெக்ஸ் இயந்திரம்/ ரோணியோ இயந்திரம்/ டுப்ளோ இயந்திரம் மற்றும் கணனி மென்பொருள், வன்பொருள் போன்ற துணைறுப்புக்கள் | 19. உலோக/ மரத்தளபாட பழுதுபார்த்தல்கள் (பிரம்பினாலான கதிரைகள் உள்ளிட்டவை) |
| 4. மெத்தை/ தும்புத்தடி/ கூட்டுமாறு/ தூரிகை மற்றும் அனைத்து வகையிலான தும்பு/ இறப்பர் கலப்பு தயாரிப்புகள் | 20. இரும்பு கட்டில்கள் நோயாளி காவுவண்டிகள்/ சக்கர நாற்காலிகள்/ சேலைன் ஸ்டேன்ட் உள்ளிட்ட மருத்துவமனை உபகரணங்களைப் பழுதுபார்த்தல். |
| 5. சுகாதார, பாவனைப் பொருட்கள் மற்றும் கழிவுகளை அகற்றும் பொலித்தின் பேக் உள்ளிட்டவை. | 21. வளிச்சீராக்கி, குளிர் சாதனப் பெட்டிகளைப் புதுப்பித்தல் மற்றும் பழுதுபார்த்தல். |
| 6. ஹார்ட்வெயார் பொருட்கள் (கட்டிட உபகரணங்கள் மற்றும் மின்சார உருப்படிகள் உள்ளிட்டவை) | 22. மின்சார உபகரணங்களைப் பழுதுபார்த்தல். |
| 7. வாகன உதிரிப்பாகங்கள்/ டயர்/ டியூப் மற்றும் பற்றரி | 23. மின்சார சேர்கிட், மின்சாரக் கம்பிகள் மற்றும் மின் வழங்கல் தொடர்பான பழுதுபார்த்தல்கள் மற்றும் புதுப்பித்தல்கள் |
| 8. பெயர்ப்பலகை மற்றும் அறிவித்தல் பலகை | 24. பிரேத அறை குளிர் சாதனப் பெட்டியைப் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் |
| 9. மின்சார துணையுறுப்புக்கள் மற்றும் உபகரணங்கள் (வளிச்சீராக்கி இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டி மற்றும் மின்விசிறி உள்ளிட்ட மின்சார உபகரணங்கள்.) | 25. கேஸ் அடுப்புகளைப் பழுதுபார்த்தல் |
| 10. அச்சிடும் வேலைகள் (மருந்து உறைகள்/ எக்ஸ் கதிர், சீ.டி கதிர் அறிக்கைகளை சேர்க்கும் உறைகள்/ கார்ட் போர்ட் உமிழ்நீரைத் துப்பும் கொள்கலன்கள்/ ஆய்வுகூட அறிக்கைகளின் பிரதிகள் போன்றவை.) | 26. உரிமை கோரப்படாத சடலங்களை அடக்கம் செய்தல். |
| 11. சப்பாத்து (பூட்ஸ் மற்றும் கென்வஸ்)/ செருப்பு, ரெக்ஸின் மற்றும் இறப்பர் தயாரிப்புகள் | 27. மின்பிறப்பாக்கிகளைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல். |
| 12. மருத்துவமனை துணிகள் (படுக்கை விரிப்புகள், சதுரவடிவ துணிகள், நுளம்புவலை, துவாய், திரைச்சேலைகள்)/ சீருடைகள் போன்றவை. | 28. இறப்பர் முத்திரைகளைத் தயாரித்தல். |
| 13. நோயாளி காவு வண்டிகள், ட்ரொலி, சக்கர நாற்காலிகள், சேலைன் ஸ்டேன்ட், உணவு ட்ரொலிகள் உள்ளிட்ட மருத்துவமனை உபகரணங்கள் | |
| 14. மருந்து மற்றும் சத்திர சிகிச்சை பாவனைப் பொருட்கள் | |
| 15. எக்ஸ்கதிர் பிரிவு தொடர்பாகத் தேவைப்படும் மருத்துவ உபகரணங்கள் | |
| 16. ஆய்வுகூடம் தொடர்பாகத் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள் | |

02. அந்தந்த பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் பத்திரங்களுக்கமைவாக 4A அளவிலான கடதாசியில் விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

### பண்டங்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் பத்திரம் - 2021
### சுவாச நோய்கள் தொடர்பான தேசிய வைத்தியசாலை - வெலிசறை

1. விண்ணப்பதாரர்/ ஒப்பந்தக்காரரின் பெயர்:
2. முகவரி:-
3. தொலைபேசி இலக்கம் - கைப்பேசி/ வதிவிட தொலைபேசி
4. பெக்ஸ் இலக்கம்:
5. மின்னஞ்சல் முகவரி:
6. சமூகவலைத்தள தொலைபேசி இலக்கம் :(உ.தா: WhatsApp/ Viber)
7. விண்ணப்பிக்கும் வழங்கல்கள்/ சேவைகள் தொடர்பான தொடரிலக்கம்:
8. வியாபாரத்தின் பெயர்:
9. வியாபாரத்தின் முகவரி:
10. வியாபார பதிவிலக்கம்: (விண்ணப்பிக்கும் சேவைகள்/ வழங்கல்கள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள வியாபார பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைப்பது கட்டாயமாகும்.)
11. வழங்குநர்களின் தன்மை (வர்த்தக பிரதிநிதி/ விநியோகஸ்தர்/ உற்பத்தி நிறுவனம்/ முகவர்கள்)
12. கடன் வசதி காலப் பகுதி/ கடன் தொகை மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குவது தொடர்பான விபரங்கள்
13. பணம் செலுத்திய பற்றுச் சீட்டு/ காசுக் கட்டளையின் இலக்கம் மற்றும் தொகை.
14. திகதி.
15. வியாபாரத்தின் பணிப்பாளர்/ முகாமையாளரின் கையொப்பம்:

03. விண்ணப்பதாரர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் ஒவ்வொரு பண்டம்/ சேவை தொடர்பாகவும் உருப்படியொன்றிற்காக மீளளிக்கப்படாத ரூ. 700.00 தொகையொன்றை வைப்புச் செய்ய வேண்டும். மேற்படி தொகையானது ராகம பிரதான தபால் அலுவலகத்தில் மாற்றிக்கொள்ளும் வகையில், பணிப்பாளர், சுவாச நோய் தொடர்பான தேசிய வைத்தியசாலை வெலிசறை பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட காசுக் கட்டளையாகவோ அல்லது ரொக்கப் பணமாகவோ செலுத்தி, சுவாச நோய் தொடர்பாக தேசிய வைத்தியசாலை கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பொது 172, பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

04. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக் கோரப்படுவதுடன், அங்கீகரிக்கப்பட்ட ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக் கோருவதற்கு இடமுண்டு, விலைமனுக்கோரும் போது உடன்படும் நிபந்தனைகள் பிரகாரம் பண்டங்கள்/ சேவைகளை வழங்கத்தவறும் வழங்குநர்களின் பதிவு, எவ்வித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும். மேலும், இரண்டு முறைக்கு மேற்படாத தவணைகளில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத நிறுவனங்கள்/ ஆட்கள் மீண்டும் விலைமனுக்கள் கோருவதற்கு பொருத்தமற்றவர்கள் எனக் கருதப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

05. வேண்டப்படும் தகவல்களை வழங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

06. சேவைகளை வழங்குவதற்காக மருத்துவமனைக்கு சமீபமாகவுள்ள பிதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் (கம்பஹா, வத்தளை, ஜாஎல, ராகம, வெலிசறை, நீர்கொழும்பு போன்றன) சேவை வழங்குநர்கள் தொடர்பாக முன்னுரிமை வழங்கப்படும்.

**பணிப்பாளர்,**
**சுவாச நோய் தொடர்பான தேசிய வைத்தியசாலை,**
**வெலிசறை.**
**தொலைபேசி இலக்கம் - 011-2958271 நீடிப்பு - 111/112**

# பலாங்கொடை நகர சபை
## 2021ம் ஆண்டிற்கான வழங்குவோர் மற்றும் கான்டெக்டாளர்கள் என்போரை பதிவு செய்தல்

2021ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்படும் வழங்கல் மற்றும் சேவைகளுக்காக சேவையாளர்கள் மற்றும் கான்டெக்டாளர்களை பதிவு செய்வதற்காக 2020.10.31ஆம் திகதி வரை விண்ணப்பங்கள், பலாங்கொடை நகர சபையின் செயலாளராகிய என்னால் கோரப்படுகிறது. வழங்குபவர் மற்றும் கான்டெக்டாளர்கள் ஆக பதிவு செய்யும் போது கீழ்க் காணும் பதிவுக் கட்டணத்திற்கு புறம்பாக அரசினால் அனுமதிக்கப்பட்ட வரிப்பணங்களும் அறவிடப்படும்.

**வழங்குவோர்**

| தொடர் இல. | உபகரணங்கள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01. | காரியாலய உபகரணங்கள் மற்றும் எழுது கருவிகள் | 1000.00 |
| 02. | வீட்டு உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் | 1000.00 |
| 03. | கணனி, கணனி பாகங்கள் மற்றும் அச்சு மை, சீ.டி, டோனர், காட்ரிச், ரிபன், கணனி மென்பொருள் | 1000.00 |
| 04. | கட்டிட நிர்மாண உபகரணங்கள் | 1000.00 |
| 05. | வீதி மேம்பாட்டு உபகரணங்கள் மற்றும் பொருட்கள் (6"x9", 6"x4", 6"x12", 4"x4", 2"x2", 1"x 1½", 1", ¾" , ½" அளவிலான கருங்கல், கற்தூள், ஏ.பி.சி) | 1000.00 |
| 06. | பெயர் பலகை, அறிவித்தல் பலகை பெனர்கள், கட்டவுட், டிஜிடல் போஸ்டர்கள் | 1000.00 |
| 07. | விளையாட்டு உபகரணங்கள், பாலர் பாடசாலை பொருட்கள் | 1000.00 |
| 08. | நிறப் பூச்சு (எனமல், எமல்ஷன்) | 1000.00 |
| 09. | மின்சார உபகரணங்கள் (மின்குமிழ் மற்றும் மின் உபகரணங்கள்) | 1000.00 |
| 10. | அச்சீட்டு செயற்பாடுகள் மற்றும் றப்பர் சீல் | 1000.00 |
| 11. | காரியாலய உபகரணங்கள் மீள்திருத்தம் (தட்டச்சு இயந்திரம், பிரதியீட்டு உபகரணங்கள், ரோணியோ உபகரணங்கள், பக்ஸ் உபகரணங்கள், கால அட்டவணை உபகரணம், கணனி) | 1000.00 |
| 12. | வாகன சேவைகள், புனரமைத்தல். வாகன பாகங்கள் (டயர், டியுப், பெட்டரி, உட்பட) | 1000.00 |
| 13. | கூலி வாகனங்கள் - கல், மணல் கொண்டு செல்லலுக்காக டிப்பர் வாகனங்களை வழங்கல் | 1000.00 |
| 14. | சுகாதார உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிகள், சவர்க்காரம், அழுக்கு நீக்கும் பொருட்கள் | 1000.00 |
| 15. | பீங்கான் பொருட்கள் | 1000.00 |
| 16. | வாசிகசாலை புத்தகங்கள் | 1000.00 |
| 17. | சீருடைகளுக்கான துணி வகைகள் | 1000.00 |
| 18. | காது உபகரணம், கண்ணாடி, | 1000.00 |
| 19. | உணவு பண்டங்கள் | 1000.00 |
| 20. | மேல் கூறப்பட்டவை அல்லாத வெவ்வேறுபட்ட உபகரணங்கள் | 1000.00 |

**கான்டெக்டாளர்கள்**

| தொடர் இல. | உபகரணங்கள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01. | ரூபா 100,000 வரை | 1000.00 |
| 02. | ரூபா 100,000 தொடக்கம் 250,000 வரை | 1250.00 |
| 03. | ரூபா 250,000 தொடக்கம் 500,000 வரை | 1500.00 |
| 04. | ரூபா 500,000 தொடக்கம் 1,000,000 வரை | 1750.00 |
| 05. | ரூபா 1,000,000 மேல் | 2000.00 |

02. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவை வழங்கலின் கீழ் பதிவு செய்து கொள்ளலுக்கான கட்டணம் மற்றும் உரிய வரிப்பணத்தினை காசோலையாகவோ அல்லது பணமாகவோ 2020.10.31ஆம் திகதிக்கு முன்பாக பலாங்கொடை நகர சபைக்குச் செலுத்துவதன் மூலம் உங்கள் பதிவினை மேற்கொள்ள முடியும்.

03. அதற்காக உங்களால் தயாரிக்கப்பட்ட பெயர், விலாசம், தொலைபேசி எண் மற்றும் வழங்கப்படவுள்ள பொருள் அல்லது சேவை என்பவை அடங்கிய விண்ணப்பப் படிவமொன்றினை முன்வைத்தல் வேண்டும்.

### பலாங்கொடை நகர சபைக்கு 2021ஆம் வருடத்திற்கான வழங்குவோரை பதிவு செய்தல் முன்மாதிரிப் படிவம்

பதிவு செய்ய எண்ணும் அயிதம் ............................................ பற்றிய தகவல்

01. தனி நபர் / வியாபார பெயர்: ..............................
02. தனி நபர் / வியாபார முகவரி: ..............................
03. தனி நபர் / வியாபார பதிவு இல: ..............................
04. தனி நபர் / வியாபார தொலைபேசி எண்: ..............................
05. தனி நபர் / வியாபார தொலைநகல் எண்: ..............................
06. தனி நபர் / வியாபார மின்னஞ்சல் முகவரி: ..............................
07. வியாபார உரிமையாளரின் பெயர்: ..............................
08. வியாபார உரிமையாளரின் அல்லது இலகுவாக தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி எண்: ..............................
09. பொருள் மற்றும் சேவை வழங்கல் தொடர்பான அனுபவம்: ..............................
10. கடன் அடிப்படையில் பொருள் மற்றும் சேவை வழங்கல் முடியுமா என்பதைக் குறிப்பிடுக: ..............................
11. கடன் அடிப்படையில் பொருள் மற்றும் சேவை வழங்க முடியுமாயின் எவ்வளவு காலத்திற்கு? ..............................

**பதிவுக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரம்**

காசோலை பணம் கட்டண இல. ..............................
இலங்கை ரூபா: ..............................
திகதி: ..............................

மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானது மற்றும் சரியானது என உறுதிப்படுத்துகின்றேன். பலாங்கொடை நகர சபையின் 2021 ஆண்டிற்கான பொருள் மற்றும் சேவை வழங்குவோராக / கான்ட்ரெக்டாளராக பதிவு செய்து கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**திகதி:** **கையொப்பம்**
**முத்திரை**

**நிபந்தனைகள்:**

04. நீங்கள் அனுப்பும் விண்ணப்பப் படிவத்தின் உறையின் வலது பக்க மேல் பகுதியில் **"வழங்குவோர் மற்றும் கான்ட்ரெக்டாளர்களைப் பதிவு செய்தல் - 2021"** எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

05. பதிவு செய்யப்பட்ட வழங்குவோரிடம் சபையின் தேவைக்கேற்ப விலைகோரல் பெறப்படும். சபையின் தேவைக்கேற்ப அதற்கு அப்பாலும் பொருள் மற்றும் சேவை பெற்றுக்கொள்வதற்கான உரிமை சபைக்கு உண்டு.

06. மேலதிக தகவல்களுக்கு காரியாலய தொலைபேசி எண் **045-2287275** அழைப்பதன் மூலம் மற்றும் **www.balangoda.uc.gov.lk** காரியாலய இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**சமிக ஜயமினி விமலசேன,**
**தலைவர்,**
**பலாங்கொடை நகர சபை,**

**2020.10.05ஆம் திகதி**
**பலாங்கொடை நகரசபையிலிருந்து**

# இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

**2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 21(2) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

## விலக்களித்தலுக்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 21(2) பிரிவிற்கமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ('ஆணைக்குழு') ஆனது இத்தால் அறியச் செய்வது யாதெனில், சக்தி விநியோக அளவுக்குறைவு மற்றும் அவற்றின் வளாகங்களுள் ஒரு எல்லைக்குட்பட்ட விநியோக வலையமைப்பு காணப்படுதல் ஆகியவற்றால், குறித்துரைக்கப்பட்ட முறையான வளாகங்களில் மட்டும் மின்சாரத்தை விநியோகித்தல் மற்றும் வழங்கல் ஆகிய நோக்கங்களிற்காக ஆணைக்குழு கீழ்வரும் அடையாளங்காணப்பட்ட நிறுவனங்களுக்கு விலக்களிக்க உத்தேசித்துள்ளது என்பதாகும்.

| விண்ணப்ப இலக்கம் | நிறுவனம் | வளாகங்கள் | நுகர்வோரின் இயல்பு |
|---|---|---|---|
| E/AE-D/19/13 | ஹோம் லேண்ட்ஸ் ஸ்கைலைன் (பிரைவேட்) லிமிடட் | இல. 670/77, 3ஆவது ஒழுங்கை, முவன்ஹெலவத்த, மாலபே | குடியிருப்பு இயல்பை கொண்ட வாடகைதாரர்கள் |
| E/AE-D/20/03 | ஹோம் லேண்ட்ஸ் ஸ்கைலைன் (பிரைவேட்) லிமிடட் | இல. 17, அன்னாசி வத்த, வீதி, கொரதொட்ட, அத்துருகிரிய | குடியிருப்பு இயல்பை கொண்ட வாடகைதாரர்கள் |
| E/AE-D/20/04 | பிரைம் லேண்ட் ரெசிடன்சீஸ் (பிரைவேட்) லிமிடட் | இல. 64, வோர்ட் பிளேஸ், கொழும்பு-07 | குடியிருப்பு இயல்பை கொண்ட வாடகைதாரர்கள் |
| E/AE-D/20/06 | வோட்டர் பொரன்ட் ப்ரபர்டீஸ் (பிரைவேட்) லிமிடட் | இல. 05, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை, கொழும்பு-02 | வணிக இயல்பை கொண்ட வாடகைதாரர்கள் |
| E/AE-D/20/07 | வோட்டர் பொரன்ட் ப்ரபர்டீஸ் (பிரைவேட்) லிமிடட் | இல. 03, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை, கொழும்பு-02 | குடியிருப்பு இயல்பை கொண்ட வாடகைதாரர்கள் |
| E/AE-D/20/08 | வோட்டர் பொரன்ட் ப்ரபர்டீஸ் (பிரைவேட்) லிமிடட் | இல. 100, க்ளெனி ஸ்ட்ரீட், கொழும்பு 02 | குடியிருப்பு இயல்பை கொண்ட வாடகைதாரர்கள் |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவு தொடர்பான ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தலைவர்,**
**இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு,**
**6வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம், 28, புனித மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 03.**
**தொலைபேசி: (011) 2392608 மின்நகல்: (011) 2392641**
**மின்னஞ்சல்:** licensing@pucsl.gov.lk **இணையத்தளம்:** www.pucsl.gov.lk
**திகதி: 07.10.2020**

### பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2) (8)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்: **இலுகா லங்கா எக்ஸ்ப்ளொரேஷன் (பிறைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம்: பிவீ 87521
பெயர் மாற்றம் செய்த திகதி: 2020.09.28
பதிவு முகவரி: **இல. 185/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 07.**
கம்பனியின் புதிய பெயர்: **புத்தளம் இல்மனைட் (பிறைவட்) லிமிட்டட்**
**சபை கட்டளைப் பிரகாரம்: கோப்பரேட் சர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட்**
**செயலாளர்கள்: புத்தளம் இல்மனைட் (பிறைவட்) லிமிட்டட்**

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: **ஸ்கைலைன் டெக்னொலொஜீஸ் (பிரைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம்: பிவீ 68118
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2009.06.16
பதிவு முகவரி: **இல. 393/பீ, நீர்கொழும்பு வீதி, கந்தான.**

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**ஏ. விமலவீர**
**தொழில் ஆணையாளர் அதிபதி**

**தொழில் திணைக்களம்**
**கொழும்பு-05.**
2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி

| | |
|---|---|
| **கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழில்** | **வேலையாள் ஒரு நாளுக்கு ரூ. 857.94** |

இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு, செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு, செலவுத் திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில்தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

# உணவகம் தொடர்பாக விலைமனுக் கோரல்

## சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை - வெலிசறை

சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையில் உணவகமொன்றை 2020 - 2021 வருடம் தொடர்பாக நடாத்திச் செல்வதற்கு வெலிசறை, சுவாச நோய் தொடர்பான தேசிய வைத்தியசாலை பெறுகைக்குழுத் தலைவரினால் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

01. இது தொடர்பாக ரூ. 1000.00 மீளளிக்கப்படாத வைப்புத் தொகையொன்றை வெலிசறை சுவாச நோய் தொடர்பான தேசிய வைத்தியசாலை சிறாப்பரிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பதன் பின்னர் 2020.10.09 முதல் 2020.10.23 வரையான வார நாட்களில் அலுவலக நேரங்களில் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.

02. குறித்த விலைமனுக்கள் இரண்டு பிரதிகளைக் கொண்டதாக 2020.10.26 அன்று மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் "பணிப்பாளர், சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை - வெலிசறை" என்ற முகவரிக்கு அனுப்பப்படவோ அல்லது நேரில் வந்து அலுவலக விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படவோ வேண்டும்.

03. விண்ணப்பங்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"உணவகம் தொடர்பாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் 2020/2021"** எனக் குறிப்பிட வேண்டும்.

04. 2020.10.26 அன்று மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், விலைமனுதாரருக்கு அல்லது அவரின் பிரதிநிதியொருவருக்கு அதில் கலந்து கொள்ளலாம்.

05. விலைமனு ஆவணங்களை கட்டணமின்றி பரீட்சித்துப் பார்ப்பதற்கு முடிவதுடன், பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

06. உணவு சட்ட திட்டங்கள் மற்றும் விதிக்கப்படும் சுகாதார தரங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**சுவாச நோய் தொடர்பான தேசிய வைத்தியசாலை,**
**வெலிசறை.**
**011-2958271**

# NSB National Savings Bank

## விலைமனுக்களுக்கான அழைப்பு (NCB)

**விலைமனு எண்: NSB/PT/ITE/2020/15**

### தேசிய சேமிப்பு வங்கிக்கு 79 எண்ணிக்கையான Routes மற்றும் 120 எண்ணிக்கையான ஆளிகள் வழங்கல், நிறுவல், இயங்கச் செய்தல் மற்றும் பராமரிப்பு

79 எண்ணிக்கையான Routes மற்றும் 120 எண்ணிக்கையான ஆளிகளின் வழங்கல், தொடர்பாக பிரசித்தி பெற்ற முதன்மையான உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது இலங்கையிலுள்ள அவர்களின் தர அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து இத்தால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **பெறுகை விபரம்** | 79 எண்ணிக்கையான Routes மற்றும் 120 எண்ணிக்கையான ஆளிகள் |
| **பெறுகை முறை** | தேசிய போட்டி ரீதியான விலைமனுக் கோரல் (NCB) |
| **ஏற்புடையதான மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம்** | ரூ. 9,000/= |
| **சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைமனுப் பிணையின் பெறுமதி** | ரூ. 350,000/= |
| **விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி மற்றும் நேரம்** | 2020.10.27 அன்று பி.ப. 3.30 மணிக்கு |
| **விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம்** | 2020.10.28 அன்று மு.ப. 10.00 மணிக்கு |
| **முன்னோடி விலைமனுக் கூட்டம் நடைபெறும் திகதி மற்றும் நேரம்** | 2020.10.16 அன்று மு.ப. 11.00 மணிக்கு |

1. ஒரு முகவராக அல்லது உப முகவராக, பிரதிநிதியாக அல்லது விலைமனுதாரர் சார்பாக அல்லது அவருக்காக நியமனம் பெற்றவராக செயற்பட விரும்பும் எந்தவொரு நபரும் விலைமனு, ஒப்பந்தத்திற்காக விண்ணப்பிப்பதற்கு முன்னர் மற்றும் விலைமனு கையளிக்கப்பட்டதன் பின்னர் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.
2. விலைமனு ஆவணங்களை கொழும்பு-03, காலி வீதி, இல. 255, தேசிய சேமிப்பு வங்கி, வழங்கல் பிரிவு, வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒரு எழுத்துருவிலான வேண்டுதலைச் சமர்ப்பிப்பதன் மூலம் 2020.10.07 முதல் 2020.10.27 வரையான வேலை நாட்களில் மு.ப. 8.30 மற்றும் பி.ப. 3.30 இடையே விலைமனுப் படிவங்கள் வழங்கப்படும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் விலைமனு திறக்கப்படும் திகதியிலிருந்து ஆகக் குறைந்தது 91 நாட்காட்டி நாட்கள் கொண்ட காலமொன்றற்கு செல்லுபடியாகும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறாக உரித்தான விலைமனு பெறுமதிக்காக தேசிய சேமிப்பு வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு வங்கி உத்தரவாதம்/ வங்கிப் பிணையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் குறித்த தினத்தன்று மு.ப. 10.00 மணிக்கு மூடப்பட்டதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படுவதுடன், மு.ப. 10.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.
5. எக்காரணத்தையும் முன்வைக்காது, எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுவையும் நிராகரிக்கும் மற்றும் விலைமனுவின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமையை தேசிய சேமிப்பு வங்கியானது தன் வசம் வைத்துள்ளது.

மேலதிக விபரங்களை சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து (வழங்கல்கள்) பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், உயர்மட்டத்திலான நிறுவன பெறுகைக்குழு,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி, கொழும்பு-03.**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.
VISIT
apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

# விலைமனுக் கோரல்

## உணவகத்தை நடாத்திச் செல்லல் – 2021

### ஆதார வைத்தியசாலை (போதனா)- கம்பளை

கம்பளை ஆதார வைத்தியசாலையில் (போதனா) 2021 வருடத்தில் உணவகத்தை நடாத்திச் செல்வதற்காக வியாபார பெயர்ப்பதிவின் கீழாக பதிவு செய்து கொண்டுள்ள அரசாங்க நிறுவனங்கள் அல்லது அரசாங்க வைத்தியசாலை யொன்றில் மூன்று வருடங்களுக்கு மேலாக அனுபவத்தைக் கொண்டுள்ள உணவக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிரதேச சபைக் குழுத் தலைவரினால் 2020.10.28 அன்று மு.ப. 10.30 வரை விலைமனுக் கோரப்படுகின்றது.

02. விலைமனு ஆவணங்கள், 2020.10.07 முதல் 2020.10.26 வரையான சாதாரண அலுவலக தினங்களில் மு.ப. 9.00 - பி.ப. 2.00 இடையேயான காலத்திற்குள், கம்பளை, ஆதார வைத்தியாசலை (போதனா) அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்வதறக்காக வியாபாரப் பெயர்ப்பதிவு சான்றிதழின் அத்தாட்சிப்படுத்திய பிரதியொன்றையும் தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றையும் சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத விலைமனுக்கட்டணமாக ரூ. 2,000.00 தொகையொன்றை கம்பளை, ஆதார வைத்தியசாலையின் கணக்காளரிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள், 2020.10.28 அன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படவோ அல்லது கம்பளை, ஆதார வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்திலுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சோக்கப்படவோ வேண்டும். விலைமனுக்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், 'கம்பளை, ஆதார வைத்தியசாலையில் (போதனா) உணவகத்தை நடாத்திச் செல்லல் -2021' எனக் குறிப்பிட வேண்டும்.

04. விலைமனு பொறுப்பேற்கப்படும் காலம் முடிவடைந்தவுடன் உடனடியாக, அதாவது 2020.10.28 அன்று மு.ப. 10.30 மணிக்கு வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனு திறக்கப்படுவதுடன் விலைமனுதாரர்க்கு அல்லது அவரின் அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்கு அச்சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ளலாம்.

05. விலைமனு ஆவணங்களை, அலுவலக நேரங்களில் கட்டணமின்றி பரீட்சித்துப் பார்க்கலாம். விலைமனு கையளிப்பு தொடர்பான இறுதித் தீர்மானம் பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியதாகும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியாசலை (போதனா),**
**கம்பளை.**

# இலங்கை தேசிய வைத்தியசாலை

**கொழும்பு 10**

## பெறுகை அறிவித்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளை மேற்கொள்வதற்காக இக்டாட்டில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இத்தால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. இலங்கை தேசிய வைத்தியசாலை சிறாப்பர் பிரிவிற்கு மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக் கட்டணமான ரூ. 2,500.00 ஐ செலுத்தியதன் பின்னர், 2020.10.07 அன்று மு.ப. 9.00 மணி முதல் 2020.10.20 அன்று பி.ப. 3.00 மணி வரை, பிரதான கணக்காளரின் அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள், தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, முத்திரை பொறிக்கப்பட்டு, அதன் இடது பக்க மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டு, 2020.10.21 அன்று மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கத்தக்கதாக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் பொறுப்பேற்கப்படுவது முடிவடைந்ததன் பின்னர் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் இச் சந்தர்ப்பத்தில் சமுகமளிக்கலாம்.

| இல | வேலை | மதிப்பீடு செய்யப்பட்ட ஆகு செலவு ரூ. சதம் | தரம் | மீளளிக்கப்படும் விலைமனுப் பிணை ரூ. சதம் | மீளளிக்கப்படாத விலைமனு படிவக் கட்டணம் ரூ. சதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 01 | சமையலறை கட்டிடத்தின் கூடாரத்தை மேம்படுத்தல் AC-1/59/2020 | 4,197,843.00 | நிபுணத்துவம்: கட்டிடம் தரம்: C8 அல்லது அதற்கு மேற்பட்டது | 63,000.00 | 2,500.00 | விலைமனு மதிப்பீடு ரூ. 5,000,000/- இற்கு மேற்படும் போது, விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளும் சமயத்தில் பொது ஒப்பந்தப் பதிவாளரிடமிருந்தான ஒரு அத்தாட்சி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் |
| 02 | வோர்ட் 16 இல் வடி கான்களைப் பழுதுபார்த்தல் AC-1/73/2020 | 4,796,180.60 | நிபுணத்துவம்: கட்டிடம் தரம்: C8 அல்லது அதற்கு மேற்பட்டது | 72,000.00 | 2,500.00 | |

**டொக்டர் டப்ளியு.கே. விக்கிரம சிங்க,**
**தலைவர், பெறுகைக்குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை, கொழும்பு 10.**

# இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

**2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 12(1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

## உரிமத்தை நீடிப்பதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 12(1)(அ) பிரிவிற்கமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ('ஆணைக்குழு') ஆனது இத்தால் அறியச் செய்வது யாதெனில், பின்வரும் நபருக்கு மின்சாரத்தைப் பிறப்பிக்கும் நோக்கத்தில் நுகர்வோருக்கு மின்சார வழங்கலின் தயார் நிலை மற்றும் தொடர்ச்சியான தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக மின்பிறப்பாக்க உரிமத்தை நீட்டிக்கத் தீர்மானித்து உள்ளது என்பதாகும்.

| விண்ணப்ப இலக்கம் | விண்ணப்பதாரி | நிலையம்/ வசதிக்கான பெயர் | கொள்வளவு (MW) | தொழில் நுட்பம் |
|---|---|---|---|---|
| E/AL/N/20/11 | சீதா எலிய | சீதா எலிய மைக்ரோ ஹைட்ரோ மின் உற்பத்தி நிலையம் | 0.072 | மைக்ரோ ஹைட்ரோ |
| E/AL/N/19/28 | டப்ளிவ்.கே.வி. ஹைட்ரோ டெக்னிக்ஸ் (பிரைவேட்) லிமிடட் | நிக்கவிட்ட மினி ஹைட்ரோ மின் உற்பத்தி நிலையம் | 1.2 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/20/21 | ஹைட்ரோடெக் லங்கா டிக்ஓய (பிரைவேட்) லிமிடட் | டிக் ஓய மினி ஹைட்ரோ மின் உற்பத்தி நிலையம் | 0.96 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/20/22 | கெளனி வெலி ப்ளான்டேஷன்ஸ் பி.எல்.சி | பதலகல மினி ஹைட்ரோ மின் உற்பத்தி நிலையம் | 0.1 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/20/23 | தலவாக்கலே டீ எஸ்டேட் பி.எல்.சி. | ரதெல்ல மினி ஹைட்ரோ மின் திட்டம் | 0.2 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/19/49 | சிலோன் எம். கே.என். எகோ பவர் (பிரைவேட்) லிமிடட் | கொலொன்னாவ மினி ஹைட்ரோ மின் உற்பத்தி நிலையம் | 0.78 | மினி ஹைட்ரோ |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவு தொடர்பான ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தலைவர்,**
**இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு,**
**6வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,**
**28, புனித மைக்கல்ஸ் வீதி, கொழும்பு - 03.**
**தொலைபேசி: (011) 2392608 தொலைநகல்: (011) 2392641**
**மின்னஞ்சல்:** licensing@pucsl.gov.lk **இணையத்தளம்:** www.pucsl.gov.lk
**திகதி: 07.10.2020**



# முத்தாரம்

ஏ.எம்.சாஜித் அஹமட்

# ஆடித்தான் போனார்கள்

## மஹ்மூத் தர்வீஷ்



கவிதைகள் சக்தி வாய்ந்தவையாக இருந்து கொண்டு சாதாரணமான காரியங்களினை நிகழ்த்துவதில்லை. நேர்மையான கவிதைகளின் மீது இந்த உலகம் பயம் கொண்டிருக்கும். இதில் மிக முக்கியமான இருப்பு யாதெனில் கவிதைகள் கொண்டிருக்கின்ற அரசியல் முறையாகும். காலத்தின் மிக இறுக்கமான சூழலில் இருந்து கொண்டு, அங்கு நிறைந்து கிடக்கின்ற அரசியலின் வெளிப்படையினை கவிதைகளில் பிரசவிப்பது பெரும் சவாலானதாகும். அதிகார அமைப்பியலுக்கு ஏற்றவாறு வளைந்து கொடுக்கின்ற கவிதை முறைகளின் நேர்மை பற்றி வாசக மனம் அறியும். சமூக வெடிப்பிற்கு மத்தியில் விளைவினை சேமிக்கக் கூடிய சீரிய கவிதைகளை உருவாக்குவதென்பது நேர்மையின் அடிப்படையில் கிடைப்பதாகும். பாரதியின் எழுத்துக்கள் வெள்ளையர்களுக்கு வெடி குண்டாக்கப்பட்டது போல மஃமூத் தர்வீஷின் எழுத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு தடையாக்கப்பட்டது. தர்வீஷ் கவிதைகள் ஆக்கிரமிக்கப்பட்டவன்.சியோனிஸ யூதர்களின் போராட்ட காலத்தின், பயங்கரவாத அமைப்பியல் சிந்தனையைத் தாண்டி தர்வீஷின் கவிதைகள் பயணித்தன. யூத அரசியல் நிலைப்பாட்டில் முற்றிலும் மாற்றுப் பார்வையினைக் கொண்டிருந்தார் தர்வீஷ், ஆரம்பகால கட்டத்தில் பலஸ்தீன ஆக்கிரமிப்பு மீது அக்கறை கொண்டிருந்தார். அதன் தொடர்ச்சியான அதிகார வங்குரோத்து முறைகள் தர்வீஷின் எழுத்துக்களை உசுப்பிவிட்டன. ஆயுதங்களுக்கு வளைந்து கொடுக்காத எழுத்து முறையினை தர்வீஷ் தனதாக்கிக் கொண்டிருந்தார். தன்னிறைவான அரசியல் சிந்தனையிலிருந்து மாற்றம் பெறாத கருத்துக்களின் செல்வம் அவரிடமிருந்தது. எழுத்துக்கள் மீதான தாக்கம் யூத ஆக்கிரமிப்பினை ஆட்டிவித்திருக்கிறது எனில், அவ்வெழுத்துக்கள் கொண்டிருந்த அதிகாரம் பற்றி சிந்திப்பது அவசியமாகிறது. அவ்வதிகாரம் நேர்மையான அரசியல் சிந்தனையின் ஓட்டம் பற்றிய செயற்பாடாகும். அவ் நேர்மையான எழுத்திலிருந்து தன்னை விலக்கிக் கொள்ளாமல் தனது இயங்கிய தர்வீஷின் கவிதைகள் நேர்மை எழுத்தின் இருப்பியலாகும்.

தர்வீஷின் கவிதைகளுக்கு விசித்திரமான மொழி இருந்தது. அது மிக அதி அற்புதமான மொழி, அனைவரையும் வசீகரிக்கக் கூடிய பண்புகளையும் திறனையும் கொண்ட மொழி இவ்வகையான மொழியினை எல்லாக் எழுத்துக்களும் உள்வாங்குவதில்லை. ஆனால் தர்வீஷின் மொழியினை தனது படைப்புகளுக்கு கொண்டு வர வேண்டுமென்று பல பிரயத்தனங்களை மேற்கொண்டிருக்கிருந்த பலரும்,பல விடயங்களில் தோல்வியினையே சந்தித்திருக்கிறார்கள். தர்வீஷின் படைப்புகளுக்கு சாத்தியமானவை எல்லாப் படைப்புகளுக்கும் சாத்தியமாகுவதில்லை. கவிதையின் மொழியினை உள்வாங்கி வெளிவந்த படைப்புக்கள் யாவும் மனித யதார்த்தத்தினை பேசுகின்ற படைப்புக்களாக இயங்கியிருக்கின்றன. கமர்சியல் எழுத்தாக இருந்தாலும் சரி, வணிகத் திட்டத்திற்கான எழுத்தாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு படைப்பிற்கும் அதன் தன்மையினைப் பொறுத்து அதற்கான தனித்துவ மொழி அடையாளத்தினை கொண்டியங்குகிறது. இதனை விமர்சனப் பார்வையிலும், நுகர்வோனின் அபிப்பிராயத்திலும் எம்மால் உணர்ந்து கொள்ள முடியும். தர்வீஷின் கவிதைகள் மனிதர்களின் முகங்களில் மட்டும் தங்கியிருக்கவில்லை. சூழலில் உலாவுகின்ற அனைத்து வகை ஜீவராசிகளையும் தன்னுடைய ஒளிப்பதிவிற்குள் உள்வாங்கி விடுகிறது. அப்படியான நிலையியலுக்கு ஏற்ப மொழியினை நகர்த்தியும், எழுத்துக்களின் வேகத்திற்கு ஏற்றவாறு ஜீவராசிகள் இயங்குகின்ற மொழியினை உணரவைத்தும் செதுக்கப்படுகின்ற படைப்புக்கள் தன்னுடைய நிலையாமையை உலகிற்கு சொல்ல முனைகின்றன. இவ்வாறான இயங்குதலைப் பற்றி புதிய அலை இயக்குனரான லூயி மால் இவ்வாறு பார்க்கின்றார்.ஒவ்வொருவருக்கும் தான் செய்ய விரும்பும் ஏதோ ஒன்றைப் பற்றிய ஒரு எண்ணம் இருக்கும். கற்பனையினால் மெருகேற்றப்பட்ட இந்த எண்ணத்திற்கும், இறுதியாக அவர் சாதித்துப் பெற்ற வடிவத்திற்கும் இடையில் ஒரு இடைவெளி இருந்து கொண்டே இருக்கும். இந்த இடைவெளியைக் குறைப்பதற்குத்தான் மீண்டும் மீண்டும் முயல வேண்டியிருக்கிறது என்கிறார். இக்கருத்தின் ஊடாக எழுத்துக்கள் மீதான ஒரு ஆழமான பார்வையினை பதிந்திருக்கிறார் லூயி மால். அதனூடாகவே எப்பொழுதும் பயணித்திருக்கிறார் மஹ்மூத் தர்வீஷ்.



சினிமாவின் சரித்திரத்தில் Kapeela அர்த்தமுள்ள வாழ்வின் கதைகளை கோர்த்து நிலையாமையின் கதைக்களத்தினை நுணுக்கமாக கைப்படுத்தி சினிமாவே Kapeela ஒரு திரைப்படத்தினுடைய அங்கீகாரம் என்பது அத்திரைப்படம் கொண்டிருக்கும் அற்புதங்களைப் புரிந்து கொள்வதுதான். எப்பொழுதும் சினிமாவானது பல் வகையான அற்புதங்களைக் கொண்டிருக்கும். கதை கூறுவது என்றாலும், காட்சியமைப்பு என்றாலும், இவற்றின் தன்மைக்கு ஏற்ப இரசனைப் பெருக்கினை கவனத்தில் கொண்டு உருவாக்கப்படும் திரைப் படங்களே அற்புதம் எனும் கட்டமைப்பினைச் சென்றடையும். இத்திரைப்படம் மலையாள உலகில் மாத்திரமன்றி, உலக சினிமாவின் போக்கின் மீது தாக்கத்தினை ஏற்படுத்திய படைப்பாயிருக்கிறது. சினிமா பற்றிய வரைவிலக்கணங்களைக் கூறும் போது Kapeela

வழமையான போக்கிலிருந்து மாறியிருக்கிறது. இது எல்லா வகையான திரைப்படங்களுக்கும் பொருந்துவதில்லை. திரைப்படங்கள் காட்சிப்படுத்தப் பட்டிருக்கும் விதமும், கதை சொல்லப்பட்டிருக்கும் அழகியலும் வழமையான சினிமா இரசனையிலிருந்து எம்மை மாற்றி புதிய வகை படைப்பாக எம் கண்களுக்கு புலப்படுவதினை Kapeelaவில் அவதானிக்க முடியும். தொலைபேசி உரையாடலை மட்டுமே நம்பி பயணிக்கின்ற ஒரு இளம் பெண்ணின் கதையினை ஓவியமாகச் சொல்லியிருக்கிறார் இயக்குனர். இதுவே ஒரு படைப்பின் பேசு பொருளினை விரிவாக்குகிறது எனலாம். ஒரு சினிமாவில் கதை சொல்லப்பட்டிருக்கும் விதமானது வழமையான கதை சொல்லலாக இருந்தாலும் அதனை புதுமையான முறையில் சொல்கின்ற போது அது மக்களை வெகு விரைவில் சென்றடைந்து பேசு பொருளினை உருவாக்கும்.

விசித்திரமான இசையினாலும், கதையினை நகர்த்திச் செல்கின்ற ஒளியமைப்பினதும் போக்கினை இத்திரைப்படத்தில் காணலாம். பல விருதுகளை வென்ற இத்திரைப்படம் நாடோடி பிரசார சினிமாவுக்கான பங்கினையும் கொண்டிருக்கிறது. ஒரு இயக்குனாரலும் மிக நுட்பமாக நடிக்க முடியும் என நிரூபித்த இத்திரைப்படம் இலக்கற்ற பயணங்களின் பெரிய அபத்தங்களை புதிய வடிவில் கையாண்ட படைப்பாகும்.

ஒரு திரைக்கதையினை எவ்வாறு கருத்தியல் பொருளாக மாற்றுவது என்பதினை Kapeela மிகத் தெளிவாக உணர்த்தும் சினிமா எனலாம். இத்திரைப்படத்திலிருந்து பல்வேறான கருத்து நிலைகள்,அறியாமை பற்றிய வாதங்கள், மனிதனின் இன்னொரு முகம் பற்றியெல்லாம் அதிகம் விவாதிக்கப்பட்டது. இவ்வாறு பல கருத்தியல்களை உருவாக்கிய Kapeela ஒரு நுட்பத்திறன் படைப்பாகும். சினிமாவின் இரசனைப் போக்கினில் மாற்றத்தினைக் கொண்டு வந்து வேறொரு இரசனையின் பக்கம் திசை திருப்பிய வாழ்வின் சீற்றச் சினிமாவாகும்.

மாறிவரும் நவீன யுகத்தில் எல்லா விடயங்களும் தனக்கான புதுமைகளுடன் வெளிப்பட்டு நிற்பதினை நாம் அவதானிக்க முடியும். கலைத்துவ வளர்ச்சியின் முன்னோட்டமாகவும், அதனை வர்த்தகப் படுத்திகின்ற விடயத்தில் மிக உச்சமானதுமான நிலையினை திரைப்படங்கள் கொண்டிருப்பதினை நாம் அவதானிக்கலாம். கதை கூறுதல் எனும் விடயத்தின் துரித கட்ட வளர்ச்சியின் விளைவே சினிமாவாகும். ஒரு வரலாற்றினை வாய்மொழியாகக் கூறி மக்களின் உணர்வுகளைப் பரிசீலிப்பதினை விட காட்சியல் ரீதியாக அவ்வரலாறுகள் கூறப்படும் போது மக்களின் உணர்வு வெளிப்பாட்டினை இலகுவில் புரிந்து கொள்ள முடியும். இத்திரைப்படத்தில் அமைக்கப்பட்டுள்ள காட்சியமைப்புக்களின் வெளிப்பாடு நல்ல சினிமாவிற்கான அடித்தளத்தினை உருவாக்கியிருக்கிறது.

# பொதுப் புத்தியின் சினிமா Kapeela

எப்பொழுதும் சினிமாவானது பல் வகையான அற்புதங்களைக் கொண்டிருக்கும். கதை கூறுவது என்றாலும், காட்சியமைப்பு என்றாலும், இவற்றின் தன்மைக்கு ஏற்ப இரசனைப் பெருக்கினை கவனத்தில் கொண்டு உருவாக்கப்படும் திரைப்படங்களே அற்புதம் எனும் கட்டமைப்பினைச் சென்றடையும்.



# மீள் கதை

உலக வாழ்வின் முனைப்பான தருணங்களில் நாம் சில விடயங்களைப் பற்றி சிந்திப்பதேயில்லை. நானும் அப்படித்தான் என்பதற்கிடையில் அருகில் வந்து ஒட்டிக் கொண்டான் விசித்திரமான அவன். அவன் ஒரு அற்புதமான படைப்பு என அடிக்கடி நினைத்துக் கொள்வேன். அவனுக்கு இரண்டு கண்கள்,ஒரு மூக்கு, இரண்டு காதுகள் என எல்லாமே எம்மைப் போல் இருக்கும். ஆனால் அவனுக்கு இருபத்தி நான்கு வயது.

இப்பொழுதும் விசித்திரமானவனாகவே இருக்கிறான். அவனுடைய பேச்சுகள் நான்கு வயதுக் குழந்தையின் பேச்சாகவே இருக்கும். சில நேரங்களில் தவழ்ந்து வருவான். சில நேரங்களில் என்னை விராண்டுவான்,சில நேரங்களில் முத்தமிடுவான். அவனைப் பற்றி அயலவர்கள் நிறையவே பேசுவார்கள்.

அவனின் நடைபற்றி சிரித்து மகிழ்வார்கள். அவன் குழந்தைகளின் உலகினை விட்டு நீங்காதவனாகவே எனக்குத் தோன்றினான். அவனின் ஆணி ட மி ருந் த து. அ வ னை ப் பற்றி பலர் வரை வி ல க் க ண ங் க ளை க் கூறும் போது அவை வழமையான போக்கினையே கொண்டிருக்கும். இது எல்லா வகையான அவனைப் போன்றவர்களுக்கு பொருந்தினாலும்,எனது செல்ல மகன் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் விதமும்,கதை சொல்லப்பட்டிருக்கும் அழகியலும் வழமையான அவனைப் போன்றவர்கிடமிருந்து புதிய வகை அற்புதமாக என் கண்களுக்கு புலப்படும். இதுவே ஒரு தந்தையின் மகா உன்னதம் எனலாம். அவனது விளையாட்டு ஒரு இளைஞனின் சாயலை ஒத்திராது. ஒன்றுக் கொன்றிலிருந்து மாறுபடும் அவனது செயல்கள் ஒரு போதும் இருபத்தி நான்கு வயதினை நினைவூட்டியதில்லை. அவன் என் மடியிலே மலம் கழிக்கிறான்,செல்லப் பேச்சுகள் பேசுகிறான், ஆடை அணியமறுக்கிறான். அவன் ஒரு செல்லக் குழந்தை...

அற்புத குழந்தை என் செல்ல மகன்.

என்னை விட்டுவெகு சீக்கிரத்தில் மாயமானது மனதின் மறக்க முடியா தருணங்களில் ஒன்றாகி விட்டது. அவனது மொழியின் குறும்புத்தனம் மீண்டும் மீண்டும் எனது காதுகளுக்குள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவனை தொலைத்து விட்டு பரிதவிக்கும் மனைவியினதும்,எனதும் கண்களில் கசிந்து வரும் கண்ணீர்த் துளிகளும் காலத்தை கலங்கடிக்கின்றன.

பேச்சுக்கள் எல்லோருக்கும் புரியாது,பழக்கப்பட்ட எனது மனைவிக்கும், எனக்குமே புரிந்திருந்தது. அவன் பிறந்தபோது வாயில் சக்கரை வைத்து சிலாகித்துக் கொண்டேன். அவனது எதிர்காலம் பற்றி நிறையவே கனவு கண்டேன். அவனது கம்பீரமான தோற்றம்,அவனுக்கென்றொரு பெரியகார், அவனைச் சூழ ஏராளமான நண்பர்கள்,ஒரு காதலி இன்னும் என்னவெல்லாம். அவன் குழந்தையாகவே இருக்கிறான். அவன் மீதானஅங்கீகாரம் என்பது அவன் கொண்டிருக்கும் அற்புதங்களைப் புரிந்து கொள்வது தான். எப்பொழுதும் அவனது செயலிலிருந்து பல் வகையான அற்புதங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். கதை கூறுவது என்றாலும்,காட்சியமைப்பு என்றாலும்,அவற்றின் தன்மைக்கு ஏற்ப இரசனைப் பெருக்கினைகவனத்தில் கொண்டு உருவாக்கப்படும் மழலைமொழி

என்றும் மறக்க முடியாத நினைவுகளை இங்கு விதைத்து விட்டு மண்ணோடுமாயமான எனது செல்லமகன்,வாழும் போதே மரணத்தை நினைவூட்டிய அற்புதமான படைப்பாலன்.

எப்பொழுதுமே அவன் எனது செல்லமகனாகவே இருந்தான்.

# படைப்புலகம் - பாரம்பரிய கலைகளும் தொழில் முறைகளும்

புத்தகங்களின் வாழ்வென்பது விசித்திரமானது. படைப்பாக்கங்களின் வழியே உலகத்தின் அனைத்து கதவுகளையும் திறந்து விட முடியும் என்பதே நம்பிக்கை. காலத்தின் எல்லாப் பாடங்களையும் புத்தகங்களே எமக்கு கற்றுத் தருகின்றன. ஒரு படைப்பாளனின் மிக நேர்த்தியான எழுத்துக்கள் மனதின் உணர்வுகளில் இருந்து எழக்கூடிய மிகப் பெரும் அடையாளத்தினை உணர்த்தி நிற்கிறது.படைப்புக்கள் என்பது எவ்வகையான நிலைப்பாட்டில் இயங்க வேண்டும் என்பதினை எவராலும் வரையறுக்க முடியாது. உலக வடிவமைப்பின் கூறுகள் பற்றிய அனைத்து விடயங்களினையும் படைப்புக்கள் பேச முற்படுகின்றன,காலத்தின் போக்குகள் மீது காத்திரமான முன்வைப்புக்களை செய்கின்றன.

விசித்திரமான மனிதர்கள், விந்தைகள் கலந்த பூமி பற்றியெல்லாம் பேசுகின்ற படைப்புக்கள் மிக அரிதாயினும் அவை பற்றிய தேடல்கள் எழுத்தின் வடிவமாக அல்லாமல் காட்சியியல் ரீதியாக எம்மிடம் வந்து சேர்ந்திருக்கிறது. இதுவே ஒரு படைப்பின் பேசு பொருளினை விரிவாக்குகிறது.

ஒரு படைப்பில் சொல்லப்பட்டிருக்கும் விதமானது வழமையான கதை சொல்லலாக இருந்தாலும் அதனை புதுமையான முறையில் சொல்கின்ற போது அது வாசகனை வெகு விரைவில் சென்றடைந்து பேசு பொருளினை உருவாக்குகிறது. எம். எல். சரிப்டீன் எழுதிய பாரம்பரிய கலைகளும் தொழில் முறைகளும் தொகுப்பானது வரலாற்றினைப் பேசும் எழுத்துக்களின் தொடக்கமாகும். இப்படைப்பின் காட்சியமைப்பானது வழமையான போக்காக அல்லாமல் வாசகனிடம் புதிய பரிணாமத்துடன் சென்றடைகின்ற பயணமாக இருப்பதால் அதன் காத்திரமான பேசு பொருளினை உருவாக்கும் தொடர்பினை நாம் புரிந்து கொள்ளலாம்.

இவ்வாறாக ஒன்றுக்கொன்றிலிருந்து தொடர்ந்து செல்லும் படைப்புக்களே வெற்றியின் பக்கம் தன்னை நகர்த்திக் கொள்கிறது. வழமையான போக்கிலிருந்து மாறுபடாமல் உருவாக்கப்படும் படைப்புகள் காத்திரமான பாதையிலிருந்து விலகி விடுகின்றன.

பாரம்பரிய கோலாட்டம், சிலம்பக்கலை, பக்கீர் பைத், தையற் கலை, அச்சுக் கலை, பாரம்பரிய நாட்டார் பாடல்கள், நெசவுக் கைத் தொழில், செங்கல் உற்பத்தி, நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில், பனைசார் கைத்தொழில், வாழைச் செய்கை, சோளப் பயிர்ச் செய்கை, நெற்செய்கை, நிலக்கடலை உற்பத்தி, மாம்பழச் செய்கை, காளான் உற்பத்தி, ஆடு வளர்ப்பு, தோடை, எலுமிச்சை உற்பத்தி, சேனைப் பயிர்ச் செய்கை, மர வேலைப்பாடுகள், தும்புக் கைத்தொழில், பப்பாளிச் செய்கை, தர்ப்பூசணி, வெள்ளரிச் செய்கை,மாடு வளர்ப்பு, கடற்றொழில், தேனீ வளர்ப்பு, பலாச் செய்கை, வர்ண மீன் வளர்ப்பு, விறகுத் தொழில், கோழி வளர்ப்பு போன்ற தலைப்புக்களில் விரிவாகப் பேசும் ஆவணங்களின் தொகுப்பாகவே சரிப்டீனின் எழுத்துக்கள் ஆக்கிரமித்துள்ளன.

எப்பொழுதும் எழுத்துக்கள் புதுமைகளைப் பற்றி பேசுகின்ற போது பழமைகளை எங்கள் ஞாபகத்திற்கு தூவிவிட்டுச் செல்கின்றன. பழமையான நினைவுகள் மனதின் ஆழ்ந்த நிலைக்கு மனித மனங்களை நகர்த்திச் செல்லும் என்பதை நாம் அறிவோம். சுரிப்டீனின் தொகுதிக்குள் ஊசலாடுகின்ற பண்பும் அதுதான். மனித வாழ்வின் போக்காகப் போன எச்சங்களை எழுத்துக்களின் ஊடாக ஒன்றுபடுத்தி ஞாபகங்களை மீட்டிக் கொள்வதற்கான காரணிகளைச் செய்கின்றன. எம்மைக் கடந்து சென்ற நினைவுகளை மீட்டுதல் என்பது சுகமான ஒன்று, அந்நினைவுகளை எழுத்தில் கொண்டுவருதல் என்பது நினைவுகளின் அழியாத பொக்கிஷங்கள். இன்றைய இலக்கிய சூழலில் இம்மாதிரியான தொகுதிகளின் வருகை என்பது அரிதாகவே இருப்பினும் வெளிவருகின்ற சொற்பமான படைப்புக்களில் காத்திரமான கதையாடல்களையும்,விசித்திரமானவிடயங்களினையும் கொண்டிருக்கின்றன. மனிதனின் யதார்த்த பூர்வமான வாழ்வினைப் பேசக் கூடிய படைப்புக்களாக இவை இருக்கின்றன என்பது மன நிறைவினைத் தருகிறது எனலாம்.



# கிழக்கின் குரல்



## அரசாங்க அதிபர் பண்டாரநாயக்கா தலைமையில்

# அம்பாறையில் கொவிட் –19 தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு கூட்டம்

**(ஒலுவில் விசேட நிருபர்)**

வெளி மாவட்டங்களில் இருந்து அம்பாறை மாவட்டத்திற்கு வருபவர்கள் தொடர்பாக பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்குமாறு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீஸன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் கொவிட் 19 பரவாமல் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம். எல். பண்டாரநாயக்கா தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் (05) நடைபெற்றது. இதில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.



நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் அம்பாறை மாவட்டத்தில் இத் தொற்று பரவாமல் இருப்பதற்குரிய விழிப்புணர்வு செயற்பாடுகளை பொது மக்களுக்கு சுகாதார பகுதியினரும் பொலிஸாரும் முன்னெடுக்க வேண்டும்.

பஸ் வண்டிகளில் பயணிக்கும் பிரயாணிகள் சமூக இடைவெளியைப் பேணி முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும். பொது மக்கள் கூடும் இடங்களில் சமூக இடைவெளி மற்றும் முகக்கவசம் என்பன அணிந்து செல்ல வேண்டுமெனவும் இதனை மீறுபவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

அரச தனியார் நிறுவனங்களில் கை கழுவுவதற்குரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமெனவும் குறித்த நிறுவனங்களுக்கு வரும் பொது மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டுமென அறிவித்தல்கள் விடுக்கப்பட வேண்டும்.

வணக்கஸ்தலங்களில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதோடு, அனாவசியமாக பொது மக்கள் ஒன்று கூட வேண்டாமெனவும் கூறினார்.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. முஹம்மட் றியாஸ், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், பிரதேச செயலாளர்கள், பாதுகாப்பு படையினர், மதத் தலைவர்கள், வைத்திய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுகாதார நடைமுறைகளை அமுல்படுத்தி கொரோனா உள்ளிட்ட தொற்று நோய்களை கட்டுப்படுத்தி மக்களை பாதுகாப்பது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.



# முகக்கவசம் அணிந்து பஸ்களில் பயணிக்குமாறு அறிவுறுத்தல்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

கிழக்கில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக பிராந்திய சுகாதாரப் பரிசோதகர்களினால் பொது மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் (05) மண்முனை தென் எருவில்பற்று பிராந்திய சுகாதரப் பணிமனையினால் சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் எஸ். கிருஸ்ணகுமாரின் வழிகாட்டலில் பிரதம மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் ஒழுங்கமைப்பில் பிரதேசத்தில் பஸ்கள் மற்றும் பொது இடங்களில் முகக்கவசம் அணியாது சென்ற பொது மக்களிடம் முகக்கவசம் அணிந்து சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நடக்குமாறு ஆலோசனைகள் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் வழங்கப்பட்டது.

இதில் மண்முனை தென் எருவில் பற்று பிராந்திய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான கே.இளங்கோவன், வி.கணேசன், எஸ்.சிவசுதன், எஸ். விக்னேஸ்வரராஜா, எஸ்.ஜீவிதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

களுவாஞ்சிகுடி பிரதான பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ்கள் நிறுத்தப்பட்டு முகக்கவசம் அணியாது சென்ற பயணிகளை முகக்கவசம் அணியுமாறு வலியுறுத்தப்பட்டது.

# முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூருக்கு ஞாபகார்த்த முத்திரை வெளியிடுமாறு பரிந்துரை

**(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)**



கல்முனையின் மூத்த அரசியல்வாதியும் முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் ஏ.ஆர். மன்சூரின் சேவையினை கௌரவிக்கும் முகமாக ஞாபகார்த்த முத்திரை வெளியிடக் கோரி ஏ.ஆர். மன்சூர் பௌண்டேசனினால் வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் 1977 தொடக்கம் 1994ம் ஆண்டு வரை பாராளுமன்ற உறுப்பினராகவும், யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சராகவும், வர்த்தக, வாணிபம் மற்றும் கப்பல்துறை அமைச்சராகவும் பதவிகளை அலங்கரித்து சிறுபான்மை அரசியல் தலைவர்களில் முதன்மையானவருமாகத் திகழ்ந்தவர்.

அன்னாருக்கு அஞ்சல் திணைக்களத்தின் 2021ம் ஆண்டுக்கான ஞாபகார்த்த முத்திரையை வெளியிடுமாறு கோரியே ஏ.ஆர். பௌண்டேசனின் செயலாளர் மிப்றாஸ் மன்சூரினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மிகவும் நேர்மையான அரசியல்வாதியாக இறுதிவரையில் செயற்பட்டுவந்தவர். சமூக பொறுப்புகள் நிறைந்த, சமூக நெருக்கடிகளுக்கு மத்தியில் உயர்ந்த சமூக குறிக்கோள்களைக் கொண்டு செயற்படுத்திக் காட்டியவர்.

உலக நாடுகளில் நடைபெற்ற மகாநாடுகளிலும் சர்வதேச பாராளுமன்ற சம்மேளனக் கூட்டங்களிலும் இலங்கையின் பிரதிநிதியாக கலந்துகொண்டு எமது நாட்டிற்கும் மக்களுக்கும் மதிப்பையும் மரியாதையையும் பெற்றுத்தந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




கல்முனை 'ஹெலோ இங்கிலிஷ்' ஆங்கில மொழி மூல முன்பள்ளியினது வருடாந்த சிறுவர் தின விழா பாடசாலை வளாகத்தில் அதிபர் திருமதி என்.எம்.எம். நூர்ஜஹான் சலீம் தலைமையில் ஒக்டோபர் முதலாம் திகதி கோலாகலமாக நடைபெற்றது. குதூகலமாக வருகை தந்த மாணவர்கள் bracelet அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதும் "எமது நாடு எமது கைகளில்" எனும் தொனிப்பொருளிலான சுலோகங்களை ஏந்தி வலம் வந்தனர். இந்நிகழ்வில் பாதணி அணிதல், ஆங்கில பேச்சுப்போட்டி உட்பட பல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று அனைத்து மாணவருக்கும் பல பரிசில்களும் வழங்கப்பட்டன.

# காத்தான்குடியில் மூவர் கைது

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

ஒரு தொகை ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப் பொருட்களுடன் மூவர் காத்தான்குடி பொலிஸ் பரிவில் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நுவன் மெண்டிசின் பணிப்புரையின் கீழ் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.பாறூக்கின் வழிகாட்டலில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தலைமையலான பொலிஸ் குழுவினர் நேற்றிரவு இவர்களைக் கைது செய்தனர்.

காத்தான்குடி மற்றும் புதியகாத்தன்குடி பிரதேங்களில் வைத்து கைதான இவர்கள், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# மருதமுனையில் சுகாதார பராமரிப்பு மத்திய நிலையம் திறந்து வைப்பு

**(பெரியநீலாவணை விசேட நிருபர்)**

மருதமுனை ஹியுமன்லின்க் நிறுவனத்தின் வளாகத்தில் 20 இலட்சம் ரூபா செலவில் விசேட தேவையுடையவர்களுக்கான சுகாதார பராமரிப்பு நிலையம் திறந்து வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் உரையாற்றும் போது,

எமது சமூகத்தின் ஒரு அடித்தளமாக விசேட தேவையுடையோர் காணப்படுகின்றார்கள். அவர்களை வளப்படுத்துவது நமது இன்றியமையாத கடமையாகும். இரண்டு விடயங்கள் நான் குறிப்பிட வேண்டும். ஒன்று இந்த வாரம் என்பது சிறுவர்கள் மற்றும் முதியவர்களை சிறப்பிக்கின்ற வாரமாக இருக்கின்றது.



அடுத்து மருதமுனையில் விசேட தேவையுடையவர்களுக்கான நிலையம் ஒன்று இயங்கி மாணவர்களுக்கான வளப்படுத்தல் செயற்பாட்டினை ஆற்றுதல் என்பது ஒரு முக்கிய செயற்பாடாக பார்க்கப்பட வேண்டி உள்ளது.

# மூதூரில் சிரமதான பணி

**(மூதூர் தினகரன் நிருபர்)**

'மூதூர் பிரதேசத்தை பசுமை பேணுவோம்' எனும் கருப்பொருளில் பிரதேச அரச அலுவலகங்களின் பங்குபற்றுதலுடன் உக்காத கழிவுகளை முழுமையாக அகற்றும் முகமாக மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணி ஞாயிற்றுக்கிழமை (04) மூதூரில் இடம்பெற்றது.

மூதூர் பிரதேச செயலகம், பிரதேச சபை, இராணுவ பிரிவு, பொலிஸார், சுகாதார வைத்திய அதிகார அலுவலகம், கல்வி அலுவலகம் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், பட்டதாரிகள், விளையாட்டுக் கழக அங்கத்தவர்கள் மற்றும் பொது மக்கள் எனவும் இதில் பெருந்தொகையானோர் பங்குகொண்டனர். மட்டக்களப்பு நெடுஞ்சாலை ஏ15 திருமலை கங்கை பால வீதி, பிரதான வீதி, மூதூர் துறைமுக வீதி, பொது விளையாட்டு மைதான வீதி, 3சீடி சந்திகள் உள்ளிட்ட இடங்களில் காணப்பட்ட பொலித்தீன்கள், உக்காத கழிவுப்பொருட்கள் அகற்றப்பட்டு உடனுக்குடன் கழிவு முகாமைத்துவம் செய்யப்பட்டது.

# கார்–மோட்டார் சைக்கிள் விபத்து; இளைஞன் பலி

**மணல்சேனை நிருபர்**

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் மயிலாம்பாவெளி தன்னாமுனையைச் சேர்ந்த ஞானசிங்கம் ஜீவானந்தன் (32) என்பவர் நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டிலிருந்து அதிஷ்டலாப சீட்டு எடுப்பதற்காக சென்ற போது வீதியில் பயணித்த கார் மோட்டார் சைக்கிளில் மோதியதால் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதித்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி பிரேதத்தை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனைக்குட்படுத்தும் படி உத்தரவிட்டுள்ளார்.

# காட்டு யானையால் குடியிருப்பு சேதம்

**ஒலுவில் நிருபர்**

ஒலுவில் முதலாம் பிரிவு அஷ்ரப் நகரில் காட்டு யானைகள் நேற்று முன்தினம் அதிகாலை வேளையில் குடியிருப்புக்குள் புகுந்து நாசம் செய்ததுடன், அங்குள்ள மக்களையும் தாக்கி காயப்படுத்தியுள்ளது. இதில் ஒலுவில் அஷ்ரப் நகரைச் சேர்ந்த அகமது லெவ்வை சுபைதா உம்மா (50) என்பவர் தனது வீட்டிற்குள் உறங்கிக் கொண்டிருந்த போது திடீர் என புகுந்த காட்டு யானை குடியிருப்பை தாக்கியதுடன், வீட்டில் உள்ள பொருட்கள் அனைத்தையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளது.

இந்நேரம் தன் உயிரைக் காக்க தப்பியோடிய போது அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.




தம்பலகாமம் வைத்திய சாலைக்கு இலங்கை குளோபல் இஹ்சான் ரிலீப் நிறுவனத்தினால் சக்கர நாற்கலி மற்றும் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் என்பன நேற்றுமுன்தினம் (05) வழங்கப்பட்டன. இந்நிகழ்விற்கு இலங்கை குளோபல் இஹ்சான் ரிலீப் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மற்றும் ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படம்: திருமலை மாவட்ட விசேட நிருபர்)




# மட்டக்களப்பில் வறிய குடும்பங்களுக்கு வீடுகள்

## இராஜாங்க அமைச்சரினால் கையளிப்பு

*(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)*

'உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்' என்ற விசேட திட்டத்தின் கீழ் கிராமியப் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிட பொருட்கள் தொழில் மேம்பாட்டு துறை இராஜாங்க அமைச்சின் மூலம், மட்டக்களப்பில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடுகளை நேற்றுமுன்தினம் தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடகத்துறை தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் வைபவரீதியாக கையளித்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட இப் புதிய வீடுகளை தேசிய வீடமைப்பு அதிகாரசபை வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் வறிய குடும்பங்களுக்கு கையளித்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்தவின் மேற்பார்வையில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் இந்த புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. வவுணதீவு பிரதேச செயலகப்பிரிவின் புது மண்டபத்தடி, செங்கலடி பிரதேச செயலர் பிரிவின் சித்தாண்டி, கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவின் சுங்கான்கேணி பகுதியிலுமாக நான்கு கிராமங்களில் இந்தப் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.



சுமார் ஆறு இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த புதிய வீடுகளை இலவசமாக வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் வறிய மக்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த விஷேட நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன், வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் கே. ஜெகநாதன், பிரதேச செயலாளர்கள் கே வில்வரத்தினம், எஸ். தனபாலசிங்கம், கே.ராஜ் பாபு தபால் சேவைகள் வெகுசன ஊடகத்துறை தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் மக்கள் தொடர்பு அதிகாரி பிலிப் மேனன் உள்ளிட்ட வீடமைப்பு அதிகார சபை உத்தியோகத்தர்களும் பிரதேச பொது மக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.



கல்முனை நீதிமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலையை நேற்று (06) மாநகர மேயர் ஏ.எம்.றகீப் திறந்து வைப்பதையும், அருகில் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஷாரிக் காரியப்பர், மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சார், கணக்காளர் ஏ.எச்.தஸ்தீக் உள்ளிட்டோரையும் காணலாம்.

(படம்: கல்முனை விசேட நிருபர்)

# பள்ளிவாசலை பொதுமக்கள் பார்வையிட தற்காலிக தடை

*(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

புதிய காத்தான்குடி அல் அக்ஷா பள்ளிவாசலை பொது மக்கள் பார்வையிடுவது தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதாக பள்ளிவாசல் நிர்வாகம் நேற்று (06)அறிவித்துள்ளது.

கொரோனா பரவல் அச்சம் காரணமாக புதிய காத்தான்குடி அல் அக்ஷா பள்ளிவாசலை பொது மக்கள் பார்வையிடுவது தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதாக பள்ளிவாசல் நிர்வாகம் அறிவித்துள்ளது.

புதிய காத்தான்குடியில் மஸ்ஜிதுல் அல் அக்ஷா பள்ளிவாசல் தோற்றத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய காத்தான்குடி பெரிய ஜும்ஆப்பள்ளிவாசலை பார்வையிட தினமும் பெருமளவிலான பொது மக்கள் வருகை தருகின்றனர்.

இது தொடர்பான அறிவிப்பை பள்ளிவாசலின் முன்பகுதியில் விளம்பரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாடக பயிற்சி வேலைத்திட்டம்



*( மாளிகைக்காடு குறூப் நிருபர்)*

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நாடகப் பயிற்சி வேலைத்திட்டம் மட்டக்களப்பு சத்துருக் கொண்டான் சர்வோதய பயிற்சி நிலையத்தில் கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமாகி திங்கட் கிழமையுடன் (5) நிறைவடைந்தது.

நாடகத்துறையில் ஆர்வம் உள்ள இளைஞர், யுவதிகளை இனம் கண்டு அவர்களுக்கு தேவையான கோட்பாட்டு செயல்முறைப் பயிற்சியை வழங்கி தேசிய மட்டத்தில் தொழில் வழங்குனர்களாக மாற்றுவதே இவ் வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பயிற்சி செயல்திட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த மூவின இளைஞர், யுவதிகள் பங்கேற்றனர்.


## காலி மாநகர சபை

## பெறுகை அறிவித்தல்

காலி மாநகர சபையின் அனைத்து பதவி நிலையினருக்காகவும் 2021 ஜனவரி முதலாம் திகதி, அன்பளிப்பாக வழங்குவதற்கு 2 லீற்றர் அல்லது 2 லீற்றரிற்கும் குறைவான 1000 மின்சார கேத்தல்களை (Electric Kettle) கொள்வனவு செய்வதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.

பெறுகையாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் பெறுகைப் பத்திரங்கள் 2020 நவம்பர் 05ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை பொறுப்பேற்கப்படும்.

அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், குறித்த தினத்தில் சாம்பள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சாம்பள்கள் சமர்ப்பிக்கப்படாத மற்றும் உத்தரவாத காலம் குறிப்பிடப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்கள் தொடர்பாக கீழேயுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலம் மாநகர கணக்காளரை (செலவுகள்) தொடர்பு கொள்ளலாம்.

**தொலைபேசி இலக்கம்: 091-2223146**
**091-5703507**

**ரனில் விக்கிரமசேக்கர**
**மாநகர ஆணையாளர் (ப.க.)**
**காலி மாநகர சபை,**
**காலி.**

2020.10.05
**காலி மாநகர சபை**



## இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

**௨009ம் ஆண்டு ௨0ம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 12(1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

### அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 12(1)(அ) பிரிவிற்கமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (‘ஆணைக்குழு’) நுகர்வோருக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு பின்வரும் தரப்பிர்கு **மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்காக** அனுமதிப்பத்திரத்தினை வழங்க உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத் தருகின்றது.

| விண்ணப்பக் குறிப்பு இலக்கம் | விண்ணப்பதாரர் | மின்நிலையம்/ வசதியின் பெயர் | திறன் (மெகா வாட்) | தொழில் நுட்பம் |
|---|---|---|---|---|
| E/AL/N/19/50 | கிறீன் சோலார் எனர்ஜி சொலியூஷன் (பிரைவேட் லிமிடட்) | மாஹோ 4 எல்.பீ.எஸ்.பி. II (90) 1 மெ.வொ. சோலார் பி.வி திட்டம் | 1.00 | சோலார் பி.வி |
| E/AL/N/20/15 | கிராண்ட் ஹோம் டெவலபர்ஸ் (பிரைவேட் லிமிடட்) | பல்லேகலே 3 எல்.பீ.எஸ்.பி. II (90) 1 மெ.வொ. சோலார் பி.வி திட்டம் | 1.00 | சோலார் பி.வி |
| E/AL/N/20/16 | இமாஷி எனர்ஜி சிஸ்டம் (பிரைவேட் லிமிடட்) | பல்லேகலே 2 எல்.பீ.எஸ்.பி. II (90) 1 மெ.வொ. சோலார் பி.வி திட்டம் | 1.00 | சோலார் பி.வி |
| E/AL/N/20/19 | சோலார் என்ர்ஜி இன்வெஸ்ட்மென்ஸ் பல்லேகலே (பிரைவேட் லிமிடட்) | பல்லேகலே 4 எல்.பீ.எஸ்.பி. II (90) 1 மெ.வொ. சோலார் பி.வி திட்டம் | 1.00 | சோலார் பி.வி |
| E/AL/N/20/20 | சோலார் என்ர்ஜி இன்வெஸ்ட்மென்ஸ் பல்லேகலே (பிரைவேட் லிமிடட்) | பல்லேகலே 5 எல்.பீ.எஸ்.பி. II (90) 1 மெ.வொ. சோலார் பி.வி திட்டம் | 1.00 | சோலார் பி.வி |
| E/AL/N/20/24 | பந்த்ரி சோலார் எனர்ஜி (பிரைவேட் லிமிடட்) | பன்னல 1 எல்.பீ.எஸ்.பி. II (90) 1 மெ.வொ. சோலார் பி.வி திட்டம் | 1.00 | சோலார் பி.வி |
| E/AL/N/20/25 | பந்த்ரி சோலார் எனர்ஜி (பிரைவேட் லிமிடட்) | மாஹோ 1 எல்.பீ.எஸ்.பி. II (90) 1 மெ.வொ. சோலார் பி.வி திட்டம் | 1.00 | சோலார் பி.வி |
| E/AL/N/20/26 | கெபிடல் சிட்டி ஹோல்டர்ஸ் (பிரைவேட் லிமிடட்) | வவுனியா 5 எல்.பீ.எஸ்.பி. II (90) 1 மெ.வொ. சோலார் பி.வி திட்டம் | 1.00 | சோலார் பி.வி |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவு தொடர்பான ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தலைவர்,**
**இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு,**
**6வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,**
**28, புனித மைக்கல்ஸ் வீதி, கொழும்பு - 03.**
**தொலைபேசி: (011) 2392608 தொலைநகல்: (011) 2392641**
**மின்னஞ்சல்: licensing@pucsl.gov.lk இணையத்தளம்: www.pucsl.gov.lk**
**திகதி: 07.10.2020**



## பலங்கொட நகர சபை

## விலைமனுக் கோரல்

2020 நவம்பர் 01 முதல் 2021 ஒக்டோபர் 31 வரையான ஒரு வருட காலத்தில் பலங்கொட நகரத்தைச் சுத்திகரிப்புச் செய்வதற்காக இந் நகர சபையின் தலைவர் சமிக ஜயமினி விமலசேன ஆகிய என்னால், 2020 ஒக்டோபர் 27 அன்று மு.ப. 10.00 வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களை, வார நாட்களில் அலுவலக வேலை நேரங்களில் தொலைபேசி இல. 045-4930830ஐ அழைத்து அல்லது info@balangoda.uc.gov.lk என்ற இணையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

02. 2020 ஒக்டோபர் 26 அன்று பி.ப. 3.00 வரை விலைமனுப்படிவங்கள் பலங்கொடை நகர சபையின் அலுவலகத்தில் வழங்கப்பட்டு, 2020 ஒக்டோபர் 27 அன்று மு.ப. 10.30 இற்கு அவை திறக்கப்படும் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

| விலைமனுக் கோரப்படும் சேவைகளின் தன்மை | மீளளிக்கப்படும் விலைமனுப் பிணைத் தொகை | விலைமனுப் படிவக் கட்டணம் |
|---|---|---|
| 2020ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின் பிரகாரம், நகரின் வீதிகளை கூட்டுதல் மற்றும் சேகரிக்கப்படும் குப்பைகள். வீட்டுக் குப்பைகள் போன்றவற்றை பங்கியவத்த திண்மக்கழிவு நிலையத்திற்குக் கொண்டு செல்லல் சந்தையைச் சுத்திகரிப்புச் செய்தல் மற்றும் குப்பைகளைப் பிரித்துச் சேகரித்தல், பஸ் நிலையத்தை தினமொன்றில் இரண்டு முறை சுத்தி செய்தல், மற்றும் குப்பைகளை அகற்றுதல், மாதமொரு முறை காபட் வீதிகளில் மணல் அகற்றல், புல் வெட்டுதல் இரண்டு மாதங்களிற்கொரு முறை பஸ் நிலையத்தைக் கழுவுதல் (நகர சபை வழங்கும் வாகனங்கள் மற்றும் சாரதிகளின் உதவியுடன்) | ரூபா 5,000.00 | ரூபா 1000.00 |

**சம்பிக ஜயமினி விமலசேன,**
**தலைவர்,**
**பலங்கொட நகர சபை**

**2020 ஒக்டோபர் 05ஆம் திகதி**
**பலங்கொட நகர சபையில்**





நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

**நகர அபிவிருத்தி அதிகாரசபை**

## கேள்விமனு

### கொழும்பு 02, பாலதக்ச மாவத்தை, "பாதசாரி வசதி மையத்தில்" குத்தகை அடிப்படையில் கழிப்பறைத் தொகுதி மற்றும் கொள்கலன் உணவுக் கூடத்தின் இட ஒதுக்கீடு





கொழும்பு 02, பாலதக்ச மாவத்தை, "பாதசாரி வசதி மையத்தில" (6°55'25.89"N 79°50'48.07"E) முன்மொழியப்பட்டுள்ள உணவுக் கூடம் ஒன்றை மேம்படுத்தும் செயற்பாடு நகர அபிவிருத்தி அதிகாரசபையால் முன்னெடுக்கப்படுவதோடு நிர்மாணப் பணிகள் 2020 ஒக்டோபர் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டு பொதுமக்களுக்காக திறக்கப்படவுள்ளது. இதன் கழிப்பறை தொகுதி ஒன்று மற்றும் 08 கடைகளை ஒதுக்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை, வருவாய் கேள்விமனு குழு (கனிஷ்ட), தலைவர் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வரிகள் உட்பட மீளளிக்கப்படாத கட்டணம் 2,500 ரூபாவை செலுத்தி 2020.10.07 தொடக்கம் 2020.10.16 அன்று வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை ஆதன முகாமைத்துவம் மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, நகர அபிவிருத்தி அதிகாரசபை, 8ஆவது மாடி, செத்சிறிபாய - கட்டம் I, பத்தரமுல்லை என்ற முகவரியில் இருந்து கேள்விமனு ஆவணங்களை ஆர்வமுடைய தரப்பினரால் கொள்வனவு செய்யலாம். கேள்விமனுக்கள் 2020 ஒக்டோபர் 19 அன்று பி.ப. 2.00 க்கு மூடப்படுவதோடு, மூடப்படும் நேரம் முடிவுற்ற உடன் நிதிப் பிரிவு, நகர அபிவிருத்தி அதிகாரசபை, 6ஆவது மாடி, "செத்சிறிபாய - கட்டம் I", பத்தரமுல்லை என்ற முகவரியில் உடன் திறக்கப்படும்.

மேல் குறிப்பிடப்பட்ட அலுவலகத்தில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை 011-3611950 மற்றும் 2875916-20 நீடிப்பு 5603-5605 என்ற தொலைபேசி இலக்கங்களில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.

**தலைவர், வருவாய் கேள்விமனுக்குழு (கனிஷ்ட)**
**நகர அபிவிருத்தி அதிகாரசபை**
**6ஆவது மாடி, "செத்சிறிபாய" - கட்டம் I,**
**பத்தரமுல்லை**

**"பாதசாரி வசதி மையத்தில்" கொள்கலன் உணவுக் கூடம்**

உணவுக் கூடப் பகுதி 160 சதுர அடி கொண்டதாக 08 கடைகளுடன் ஒவ்வொன்றும் 05 ஆண்டு குத்தகை அடிப்படையில் ஒதுக்கப்பட்டதாக அமையும். கடைகளின் விபரம் மற்றும் ஒவ்வொரு கடைகளின் முன்மொழியப்படும் வர்த்தக செயற்பாடுகள் பின்வருமாறு அமையும்.

| கடை எண் | பயன்பாட்டுக்கான முன்மொழிவு | தேர்வு அளவுகோல் | விலைமனு பிணை (ரூபா) |
|---|---|---|---|
| 1 | இலைக் கஞ்சி மற்றும் பாரம்பரிய இலங்கை இனிப்புப் பண்டங்கள் | அதிக ஆரம்பக் கட்டணம் மற்றும் 05 ஆண்டு காலத்திற்காக வழங்கும் மாதாந்த வாடகையின் தற்போதைய மதிப்பு மற்றும் மதிப்பீட்டு அளவுகோல்கள் அடிப்படையிலேயே வெற்றிகரமான கேள்விமனுதாரர் தேர்வுசெய்யப்படுவார். | 25,000/- |
| 2 | ஜூஸ் பார்/ ஐஸ்கிறீம் | | 25,000/- |
| 3 | துரித உணவுகள் (Short eats/Buns /Hotdogs முதலியன) | | 25,000/- |
| 4 | கோப்பி/ தேநீர்க் கடை மற்றும் Salad Corner | | 25,000/- |
| 5 | இலங்கை உணவுகள் | | 25,000/- |
| 6 | கிழக்கத்திய உணவுகள் | | 25,000/- |
| 7 | ஐரோப்பிய உணவுகள் | | 25,000/- |
| 8 | மதுபானக் கடை (வைன் மற்றும் பியர்) | | 90,000/- |

**"பாதசாரி வசதி மையத்தில்" கழிப்பறைத் தொகுதி**

5 ஆண்டுகளுக்காக ஒதுக்கப்படுவதோடு கீழ் தரப்பட்டவாறு அதிக மாதாந்த வாடகை வழங்கல் அடிப்படையில் வெற்றிகரமான விலைமனுதாரர்கள் தேர்வுசெய்யப்படுவர்

| மீளளிக்கப்படாத குத்தகைப் பணம் (ரூபா) | அடிப்படை மாத வாடகை (ரூபா) | விலைமனுப் பிணை (ரூபா) |
|---|---|---|
| 134,000/- | 5,000/- | 10,000/- |

# ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வீரர் நஜீப் கார் விபத்தில் மரணம்



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் நஜீப் டரகாய் கார் விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று உயிரிழந்துள்ளார் என ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் அணியின் 29 வயதான அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான நஜீபுல்லாஹ் டரகாய், வீதியை கடக்கும் போது, கார் ஒன்று மோதியதில் கடுமையான காயங்களுக்கு உள்ளானார். உடனடியாக கிழக்கு நன்கஹார் பகுதியில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட இவர், சிகிச்சை வழங்கப்பட்டும், கோமா நிலையை அடைந்ததாக வைத்தியர்கள் அறிவித்தனர்.

தொடர்ந்தும் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப்பெற்றுவந்த இவர், நேற்று உயிரிழந்துள்ளதாக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

தங்களுடைய உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் கருத்து பகிர்ந்திருந்த ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை, "ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை மற்றும் கிரிக்கெட்டை விரும்பும் ஆப்கானிஸ்தான் மக்கள் அனைவருக்கும் மிக துக்கமான செய்தியாக, அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும், சிறந்த மனிதருமான நஜீப் டரகாய், மோசமான விபத்து காரணமாக எம்மை விட்டு பிரிந்தமை அதிர்ச்சியளிக்கிறது" என பதிவிடப்பட்டிருந்தது.

நஜீப் டரகாய் 2014ம் ஆண்டு நடைபெற்ற ஜிம்பாப்வே ஏ அணிக்கு எதிரான தொடரில், முதற்தர போட்டிகளில் அறிமுகமானார். நஜீப் டரகாய் இறுதியாகவும் கடந்த வருடம் நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கு எதிரான ரி20 தொடரில் விளையாடியிருந்ததுடன், இவர் அயர்லாந்து அணிக்கு எதிராக கடந்த 2017ம் ஆண்டு ஒரே ஒரு ஒருநாள் போட்டியில் விளையாடியுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர், குண்டுவெடிப்பு சம்பவத்தில் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் நடுவர் பிஸிமில்லாஹ் ஜன் ஷின்வாரி உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய மகளிர் கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம்

ஐ.பி.எல் தொடரின் ஓர் அங்கமாக நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பெண்களுக்கான செலெஞ்ச் கிண்ண டி20 கிரிக்கெட் போட்டித் தொடர் நிறைவடைந்தவுடன் இந்திய மகளிர் கிரிக்கெட் அணி, இலங்கை வரவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் 13ஆவது ஐ.பி.எல் தொடரின் லீக் சுற்றுப் போட்டிகள் நவம்பர் 3ஆம் திகதி நிறைவுக்கு வரவுள்ளதுடன், நவம்பர் 4ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை 3 அணிகள் கலந்து கொள்ளும் பெண்களுக்கான ஐ.பி.எல் தொடர் நடைபெறவுள்ளது.

இந்தியா, இங்கிலாந்து, நியூஸிலாந்து, மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா, இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ள இப்போட்டித் தொடரானது கொவிட்-19 பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி நடைபெறவுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

குறித்த தொடர் நிறைவடைந்தவுடன் ஹர்மன் பிரீத், ஸ்மிருதி மந்தனா உள்ளிட்ட இந்திய மகளிர் கிரிக்கெட் அணி இலங்கைக்கான சுற்றுப்பயணத்துக்காக நேரடியாக கொழும்பை வந்தடையவுள்ளனர். இதன்படி, இலங்கை அரசாங்கத்தின் கொவிட்19 பாதுகாப்பு வழிமுறைகளுக்கு ஏற்ப இந்திய மகளிர் அணி வீராங்கனைகள் மற்றும் அதிகாரிகள் 14 நாட்களுக்கு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

அதன்பிறகு, ஐ.சி.சி இன் மகளிருக்கான ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் கீழ் 3 ஒருநாள் மற்றும் 3 ரி 20 போட்டிகளைக் கொண்ட தொடர்களில் இந்திய மகளிர் அணி விளையாடவுள்ளதாக அந்நாட்டு கிரிக்கெட் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



இலங்கைக்கான சுற்றுப்பயணம் தொடர்பில் இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் ஒருநாள் அணித் தலைவி மிதாலி ராஜ் கருத்து வெளியிடுகையில்,

"பெண்களுக்கான ஐ.பி.எல் தொடர் நிறைவடைந்த பிறகு இந்திய மகளிர் அணி, இலங்கை செல்ல அதிக வாய்ப்புள்ளது. சமீபத்தில் தனிமைப்படுத்தல் நாட்கள் தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையில் பங்களாதேஷ் அணியின் இலங்கை சுற்றுப்பயணம் இரத்து செய்யப்பட்டது. ஆனால், இந்திய மகளிர் அணியின் சுற்றுப்பயணம் திட்டமிட்டபடி நடக்கும் என நம்புகிறேன்" என அவர் தெரிவித்தார்.

முன்னதாக, இந்திய ஆண்கள் கிரிக்கெட் அணி, கடந்த ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடவிருந்தது. எனினும் கொவிட் – 19 வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக குறித்த தொடரானது காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

SINCE 1978
42nd
OBSERVER MOBITEL
SCHOOL CRICKETER
OF THE YEAR 2020
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்-மொபிடெல்

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..............................

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ..............................

**(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)**

பாடசாலை : ..............................

வாக்களித்தவர் பெயர் : ..............................

முகவரி : ..............................

மொபைல் இல. : ..............................

SUNDAY OBSERVER

**Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்**

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router — 2வது பரிசு: ரூ. 2,500

3வது பரிசு: ரூ.1,500 — 4வது பரிசு: ரூ. 1,000

42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 2020-10-10 இல. 31




# பெங்களூரை வீழ்த்தி பட்டியலில் முதலிடத்தில் டெல்லி அணி

ஐ.பி.எல். ரி20 தொடரின் 19ஆவது லீக் போட்டியில், டெல்லி கெபிடல்ஸ் அணி 59 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

டுபாயில் (திங்கட்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், டெல்லி கெபிடல்ஸ் அணியும் பெங்களூர் றோயல் செலஞ்சர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய டெல்லி கெபிடல்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 196 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மார்கஸ் ஸ்டொயினிஸ் ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களையும், பிரித்வீ ஷா 42 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பெங்களூர் அணியின் பந்துவீச்சில், மொஹமட் சிராஜ் 2 விக்கெட்டுகளையும், இசுரு உதான மற்றும் மொயின் அலி ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 197 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பெங்களூர் றோயல் செலஞ்சர்ஸ் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 137 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் டெல்லி அணி 59 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.



இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அணித்தலைவர் விராட் கோஹ்லி 43 ஓட்டங்களையும் வொஷிங்டன் சுந்தர் 17 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

டெல்லி அணியின் பந்துவீச்சில், கார்கிஸோ ரபாடா 4 விக்கெட்டுகளையும் என்ரிச் நோட்ஜே மற்றும் அக்ஸர் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் அஸ்வின் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 4 ஓவர்கள் வீசி 18 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகளை சாய்த்த டெல்லி சுழற்பந்து வீச்சாளர் அக்ஸர் பட்டேல் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளில் விளையாடி நான்கில் வெற்றி, ஒன்றில் தோல்வியை பதிவு செய்த டெல்லி அணி 8 புள்ளிகளுடன் புள்ளிபட்டியலில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

தோல்வியை தழுவிய பெங்களூர் அணி, ஐந்து போட்டிகளில் விளையாடி மூன்றில் வெற்றி இரண்டில் தோல்விகளுடன் 6 புள்ளிகளுடன் புள்ளிபட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

### ஸ்ரீலங்கா புட்போல் அகடமிக் அசோசியேசன்

# 19 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டி

**ஏ.எஸ்.எம். ஜாவித்**

ஸ்ரீ லங்கா புட்போல் அகடமிக் அசோசியேசன் 19 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டி ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளது. சுமார் 32 அகடமிகள் பங்குபற்றும் போட்டியை நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் கொழும்பு றோஸ்கோஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளதுடன் எதிர்வரும் டிசம்பர் மாதம் 05ஆம் திகதி இறுதிப்போட்டியை நடாத்த திட்டமிட்டுள்ளது. இப்போட்டிகள் வார இறுதி நாட்களிலேயே இடம் பெறும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படிப் போட்டிகளை நடத்துவது தொடர்பான விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு ஒன்று அண்மையில் மாளிகாகந்தையில் உள்ள அக்ரம் பௌண்டேசனில் அசோசியேசனின் தலைவர் மொஹமட் அக்ரம் தலைமையில் இடம் பெற்றபோது போட்டிகள் தொடர்பான விளக்கங்களையும், எதிர்காலத்தில் உதைபந்தாட்ட துறைகளை முன்னேற்றுவது தொடர்பாகவும் அசோசியேசனின் செயலாளர் ஆர்.ஏ.டானிஸ் அலி விளக்கமளித்தார். அவர் தொடரந்து கருத்து தெரிவிக்கையில் மாவட்ட ரீதியில் இதுவரை 10 அகடமிகள் இருப்பதாகவும் இத்துறையை வளர்க்க தமது அமைப்பு பூரண ஒத்துழைப்புக்களை வழங்கும் என்றும் எதிர் வரும் ஐந்து வருடங்களில் இந்த நாட்டில் உதைபந்தாட்ட துறையில் திறமையான வீரர்களை உருவாக்க முடியும் என்றும் அவர்கள் எதிர்காலத்தில் வருமானம் பெறும் வகையில் தொழில்களைப் பெற்றுக் கொள்ளவும் முடியும் எனவும் தெரிவித்தார்.



இறுதிப் போட்டியின்போது நற்பு ரீதியிலான நற்சத்திர வீரர்களின் மின்னொளிப் போட்டியும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் அமைப்பின் பொருளாளர் எம்.எச்.எம் ஹஸன் உள்ளிட்ட பல அகடமியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனடிருந்தனர்.

# அப்துல் மனாபுக்கு கல்முனையில் பாராட்டு

இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தின் உப தலைவர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்ட அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் பொதுச் செயலாளரும், கல்முனை மாநகர சபையின் உறுப்பினருமான எம்.ஐ.எம். அப்துல் மனாபை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த (04) கல்முனை அல் பஹ்ரியா மாகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவர் வை.கே. ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் அனுர டீ சில்வா பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு, இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஜஸ்வர் உமர் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர். மேலும் அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் சிரேஷ்ட உப தலைவரும் ஆசிரியருமான அலியார் பைஸர், பிரதித் தலைவர் எம்.எல்.றபீக், சங்கத்தின் உப பொதுச் செயலாளரும் கல்முனை பிர்லியன்ட் விளையாட்டுக்கழகத்தின் பொதுச் செயலாளருமான எஸ்.ரீ.எம்.பஸ்வாக், சங்க பொருளாளர் எஸ்.முஹம்மட் கான் மற்றும் அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் உயர் பீட உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களின் அங்கத்தவர்கள், நடுவர் சங்க உறுப்பினர்கள் ஆகியோரினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி வாழ்த்துப் பா வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அம்பாறை மாவட்டத்தில் இலங்கை உதைபத்தாட்ட சங்கத்தின் உப தலைவா்களில் ஒருவராக முதன் முறையாக ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதற் தடவையாகும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஒக்டோபர் மாதம் 7ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை

# வழங்குநர்களை பதிவு செய்தல் - 2021
# பண்டங்கள் மற்றும் சேவைகள்

2021 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடன் தம்மை பதிவு செய்ய விரும்பும் புகழ்வாய்ந்த உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள் மற்றும் அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள்/ வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| விளக்கம் | தொகுதி |
|---|---|
| **குழாய்கள் மற்றும் ஸ்பெஷல்கள்** | |
| செம்பு - ஸ்டொப் கொக்ஸ், ferrules, வாயில் வால்வுகள் இன்னும் பலவும் மற்றும் Gunmetal – Ferrules etc | 11 |
| சி-1 (வார்ப்பிரும்பு குழாய்கள் மற்றும் இணைப்புக்கள், வால்வுகள் கப்ளிங்ஸ், அடொப்டர்ஸ்) | 12 |
| ஜி1 (எ∴கு இரும்பு குழாய்கள் மற்றும் இணைப்புக்கள், விளிம்புகள் (Flanges) | 13 |
| அல்கைத்தின் குழாய் | 14 |
| மானிகள் (நீர் மானிகள், Flow மானிகள்) | 15 |
| துருப்பிடிக்காத உருக்கு குழாய்கள் மற்றும் இணைப்புக்கள் | 16 |
| **காகிதாதி** | |
| கணனி பாவனைப் பொருட்கள் (இறுவட்டுக்கள், பட்டிகள், கார்ட்ரிட்ஜெஸ்கள், டோனர்கள்) | 17 |
| அலுவலக மற்றும் பொதுவான காகிதாதி/ தாள்கள்(கணனிகள், நிழற்படப்பிரதியாக்கல் இயந்திரங்கள்) பேனாக்கள், கிளிப்புக்கள், துளையிடும் கருவிகள், ஸ்டேப்பிலர்கள், டோனர்கள், Master roles இன்னும் பலவும் | 18 |
| திட்டமிடல் மற்றும் வடிவமைப்பிற்கான காகிதாதி/ திட்டப்படம் அச்சடித்தல் தாள், அச்சடித்தல் தாள் டோனர், தடமறிதல் தாள் (Tracing paper) | 19 |
| **உபகரணங்கள்** | |
| சமையலறை பாத்திரங்கள் (மட்பாண்டங்கள், வெட்டும் கருவிகள், நீர் வடிகலன்கள், கோப்பைகள் மற்றும் சோசர்கள், கண்ணாடி குடுவைகள், தராசுகள் இன்னும் பலவும்) | 20 |
| அலுவலக உபகரணங்கள் (தபால் முத்திரை பதிக்கும் இயந்திரங்கள், தட்டெழுத்து இயந்திரங்கள், ஸ்பைரல் பைண்டேர்ஸ், றோணியோ/ டுப்ளிக்கேட்டிங் இயந்திரங்கள், நிழற்படப்பிரதியாக்கல் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், Overhead Projectors) | 21 |
| நிலஅளவை உபகரணங்கள், ஜிபிஎஸ் | 22 |
| **கட்டிட நிர்மாணம் மற்றும் ஹாட்வெயார்** | |
| கட்டிடப் பொருட்கள் (பிளாஸ்டிக் நீர் தாங்கி, செங்கற்கள், சீமெந்து, மணல், கற்கள், அஸ்பெஸ்டொஸ் தகடுகள் /எ∴கு தாள்கள், பெயிண்ட் மற்றும் பெயிண்ட் பிரஸ்கள் இன்னும் பலவும்) | 23 |
| சுகாதாரப் பொருட்கள் (கழுவும் பேசின்கள், நீர் குழாய்கள், கொமோட்டுக்கள் மற்றும் சிஸ்ட்ரன்ஸ்கள், ஓடுகள் இன்னும் பலவும் | 24 |
| பலகை பொருட்கள் (Rafters, Planks, Joists, Reefers) | 25 |
| நிர்மாண உபகரணங்கள் (வீல் பரோ, கைவண்டிகள், சாரம் கட்டல்கள் மற்றும் ஏணிகள் இன்னும் பலவும்) | 26 |
| போல்ட்டுகள் மற்றும் நட்டுக்கள், எம்.எஸ். சீட்டுக்கள், முறுக்கு இரும்பு, தார்பொலின் இன்னும் பலவும் | 27 |
| பத்திரத்தன்மை உபகரணங்கள், தீயணைப்பு இயந்திரங்கள், உறைகள், தலைக்கவசங்கள், Gum Boots, Masks, Road Marker Tapes, Traffic cones etc.; | 28 |
| **மின்னியல், இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள்** | |
| வளிச்சீராக்கல்கள் | 29 |
| மின்னியல் (குளிரூட்டிகள், மின்பிறப்பாக்கிகள், கேத்தல்கள், சூடாக்கிகள், நீர் கொதிகலன்கள், தரைக்கம்பள தூசி உறிஞ்சிகள், மின்னியல் கம்பிகள், Electrical panel board instruments and other accessories | 30 |
| இலத்திரனியல் (Calculators, Adding Machines, Cash Registers, Finger Print machines etc., ) | 31 |
| தொலைதொடர்பு உபகரணங்கள் (தொலைபேசி முறைமைகள், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் Key telephones etc) | 32 |
| கணனிகள், Computer Peripherals ( Printers, UPS), Servers, Software, Networking , Audio Visual , CCTV Camera system etc., | 33 |
| **கருவிகள்** | |
| Mechanical – Welding Equipment & Accessories Grinders, Diamond Cutting Tool, Brush Cutters, Adjustable spanners Transmission Jacks, Pipe wrenches, Bench wise etc.,) | 34 |
| Electrical – (Hammer, Drill & Accessories, Cutting Pilers, Electronic – (Pneumatic, Screwdrivers Soldering irons, disordering Tools etc., | 35 |
| **ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயனங்கள் மற்றும் வசதிகள்** | |
| Filter media – தரமாக்கப்பட்ட மணல் மற்றும் கூழாங்கற்கள் இன்னும் பலவும் | 36 |
| ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் உபகரணங்கள் | 37 |
| நீர் சுத்திகரிப்பு இரசாயனங்கள் (Aluminium Sulphate, Bleaching Powder, Hydrated Lime, Bentonite Clay, Poly Aluminium Chloride, Activated Carbon, Polymer and Potassium Permangate) | 38 |
| **வாகனங்கள் மற்றும் இயந்திராதி, தானியங்கி மோட்டார் வாகனம்** | |
| மோட்டார் வாகனங்களுக்கான பட்டரிகள் | 39 |
| இயந்திராதி உபகரணங்கள் மற்றும் பொருட்களை கையாளும் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 40 |
| மோட்டார் உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள் | 41 |
| வாகனங்களுக்கான டயர்கள் மற்றும் டியுப்புக்கள் | 42 |
| இயந்திர எண்ணெய், உராய்வுப் பொருட்கள் - கிறீஸ் இன்னும் பலவும் | 43 |
| **பம்பிகள், மோட்டார்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்** | |
| பம்பிகள் மற்றும் நீர் சுத்திகரிப்பு உபகரணங்கள், நீர் பம்பிகளுக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் பெயாரிங்ஸ், Pressure Gauge | 44 |
| கை பம்பிகள் மற்றும் கை பம்பிகளுக்கான உதிரிப்பாகங்கள் | 45 |
| **பொதுப் பாவனைகளுக்கானவைகள்** | |
| இறப்பர் - உற்பத்திகள் - பொதி செய்தல், வளையங்கள், இறப்பர் குழாய்கள் இன்னும் பலவும் | 46 |
| துணி – தூசிதுடைப்பான்கள் மற்றும் துவாய்கள்/ கொடிகள் இன்னும் பலவும் | 47 |
| கழிவறைக்கானவைகள் (சவர்க்காரம், கிருமிநாசினிகள் இன்னும் பலவும்) | 48 |
| **தளபாடம் மற்றும் இணைப்புக்கள்** | |
| தளபாடம் (மரம்) – மேசைகள்/ கதிரைகள்/ கப்போட்டுக்கள்/ கபினெட்டுக்கள் இன்னும் பலவும் | 49 |
| தளபாடம் (உருக்கு, பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி நார்) – மேசைகள்/ கதிரைகள், கப்போட்டுக்கள்/ கபினெட்டுக்கள் இன்னும் பலவும் | 50 |

| சேவைகள் | |
|---|---|
| கட்டிட நிர்மாணம்/ பழுதுபார்த்தல்கள்/ பராமரிப்பு வேலை | 51 |
| பெயர் பலகை அச்சடித்தல் | 52 |
| காய்ச்சி ஒட்டும் வேலை (welding work) | 53 |
| பெயிண்ட் பூசுதல் மற்றும் உள்ளக அலங்காரம் (ஒளித்தடுப்புக்கள் மற்றும் திரைச்சீலைகள் இன்னும் பலவும்) | 54 |
| இலகுரக அலுமீனிய வேலை (பிரித்தடுப்புக்கள் வேலை, வெளியக உறைப்பூச்சுக்கள் (cladding) வேலை, அடைப்புக்கள், கதவுகள், யன்னல்கள் இன்னும் பலவும் | 55 |
| பயணிகளுக்கான வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் | 56 |
| கனரக இயந்திராதிகளை வாடகைக்கு அமர்த்துதல் (Back-hoes, Bull-dozers. தண்ணீர் பவுசர்கள்), | 57 |
| நீர் விலைப்பட்டியல்களை அச்சிடல், கணனி அச்சிடல் காகிதாதி இன்னும் பலவும் | 58 |
| அச்சிடல் மற்றும் இணைந்த சேவைகள் | 59 |
| தொழிலாளர்களை வழங்கல்/ சுகாதார சுத்திகரிப்பு சேவை | 60 |
| நிலஅளவைகள் (சேவை) | 61 |
| சிவில் பொறியியல் வேலை (நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வேலைக்காக குழாய்களை பதித்தல், வீதிகளை நிர்மாணித்தல்) | 62 |
| வாகனங்கள் - பழுதுபார்த்தல்கள்/ சர்வீசுகள்/ வளிச்சீராக்கல் இயந்திர பழுதுபார்த்தல்கள்/ மேலணை வேலை | 63 |

**நிபந்தனைகள்:**

1. சபையுடன் ஏற்கனவே பதிவு செய்துள்ள வழங்குநர்கள்/ அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் பதிவு செய்தலுக்காக மீளவும் விண்ணப்பித்தல் வேண்டும்.
2. ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்காகிலும் அவர்களின் உரித்தான துறையில் செயற்படும் அதிகாரம் வழங்கப்பட்ட விநியோகஸ்தர்கள்/ வழங்குநர்கள் மாத்திரமே பதிவு செய்தலுக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.
3. முதலாம் தொகுதிக்கு 2000 ரூபாவை பதிவு செய்தல் கட்டணமாகவும் ஒவ்வொரு மேலதிக தொகுதிக்கு 1000 ரூபா மற்றும் மொத்த தொகைக்கான பெசேவ ஆகியவை செலுத்தப்படல் வேண்டும்.
4. விண்ணப்ப படிவங்கள் மேலே குறிப்பிட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணமொன்றை ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவொன்றுடன் (90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளது) ''தலைவர், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை'', என்ற பெயரில் வழங்கப்பட்ட ரொக்கப் பணத்துடன் அல்லது வங்கி வரைவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். காசோலைகள் அல்லது காசுக் கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது (அலுவலக நேரங்கள்: மு.ப. 9 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் பி.ப. 1 மணியிலிருந்து 3 மணி வரையுமாகும்)
5. பதிவு பெற்ற வழங்குநர்களிடமிருந்து வழங்கல்களுக்கான விலைமனுக்கோரல் தேவைப்படும் வேளையில் கோரப்படும். பதிவு பெற்றுள்ள வழங்குநர்களிடமிருந்து மாத்திரம் விலைமனுக்களை கோருவதற்கு இப்பதிவு கட்டுப்படுத்தப்பட மாட்டாது. பதிவு பெற்றுள்ள சேவை நோக்கமுடைய வழங்குநர்கள் அதன் பின்னர் தரமாக்கப்படுவார்கள். இந்த தரமாக்கலானது வழங்குநர்களின் உரித்தான துறைக்கான நற்சான்றிதழ்களை உறுதிப்படுத்திய பின்னரே மேற்கொள்ளப்படும்.
6. எமது தேவைப்படுத்தல்களுக்கு ஒத்திசையாமல் வழங்கல்களை மேற்கொள்வதற்கு தவறும் வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் வழங்குநர்களின் பதிவேட்டிலிருந்து அறிவித்தலின்றி நீக்கப்படும். 1 இலிருந்து 3 வரையிலும் கோரப்பட்டுள்ள மேலதிக தகவலுடன் வியாபார பதிவுச் சான்றிதழ்/ புரிந்துணர்வு ஒப்பந்தம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. கீழேயுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்தை பாவித்து சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பமொன்றில் விண்ணப்பிக்குமாறு விண்ணப்பதாரிகள் அறிவுரை வழங்கப்படுகின்றனர்.
8. மூடும் திகதிக்கு முன்னராக பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்த பின்னர், எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையை NWS&DB ஆனது கொண்டுள்ளது. விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் மற்றும் மேலதிக தகவலின் அடிப்படையிலேயே மதிப்பீடானது மேற்கொள்ளப்படும்.

**தேவைப்படுத்தப்படும் மேலதிக தகவல்:**

1. கடந்த மூன்று வருடங்களில் உங்களின் தற்போதய வழங்கல்கள் மற்றும் சேவைகள் தொடர்பான ஒப்பந்தக் கடிதம்/ கொள்வனவுக் கட்டளை விபரங்கள்.
2. பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள வேறேதாவது துணையளிக்கும் விபரங்கள்.
3. வெளிநாட்டு முதன்மையாளரொருவரின்/ உற்பத்தியாளரொருவரின் ஏகமுகவர் நீங்களெனின், முதன்மையாளரிடமிருந்து பெற்றுள்ள அதிகாரம் வழங்கும் கடிதத்தின் பிரதியொன்றை தயவு செய்து இணைக்கவும்.

### 2021 ஆம் ஆண்டின் வழங்குநர்களை பதிவு செய்யும் விண்ணப்பம்

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

| விளக்கம் | தொகுதி | பதிவு செய்தலுக்கான கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| ........................................ | ............... | ........................................................ |

1) நிறுவனத்தின் பெயர்:........................................................................................
2) வியாபார முகவரி:............................................................................................
3) பிரதான வியாபாரம்: .......................................................................................
4) இந்த வியாபாரத்தில் வருடங்களின் எண்ணிக்கை:...............................................
5) 2019/ 2020 ஆம் ஆண்டுகளில் NWS&DB இற்கு வழங்கப்பட்ட வழங்கல்களின் விபரங்கள்: ...........................................................................................
6) 2019/2020 ஆம் ஆண்டுகளில் உங்கள் வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட அரச நிறுவனங்களின் பெயர்கள்:................................................................................
7) உங்களின் ஏனைய சேவை நாடுபவர்களின் பெயர்களை குறிப்பிடவும்:..............
8) கணக்காய்வாளர்களின் பெயர்கள்: .......................................................................
9) வழங்கப்படும் கடன் காலம்: ...............................................................................
10) விபாயார பதிவு இலக்கம்:...................................................................................
11) தொலைபேசி மற்றும் தொலைநகல்:...................................................................
12) மின்னஞ்சல் முகவரி: ..........................................................................................
13) தொடர்பு கொள்ளக்கூடிய நபர்:..........................................................................
14) கையொப்பம் மற்றும் பெயர் இலச்சினை:............................................................

2020.11.13 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் பிரதி பொது முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் எம்எம்), தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, காலி வீதி, இரத்மலானை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "REGISTRATION OF SUPPLIERS – YEAR 2021" என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும். 0112-635886 என்ற தொலைபேசி எண்ணினூடாக இவ்விளம்பரம் தொடர்பான எவ்வித தெளிவுறுத்தல்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை,**
**காலி வீதி,**
**இரத்மலானை.**


## For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

Please Contact | MANAGER FRONT OFFICE | Hotline 1949

LAKE HOUSE


## வ/ப தம்பதெனிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தம்பதெனிய

## மீட்கப்படாத அடகுப் பொருட்களை பகிரங்க ஏலத்தில் விற்றல்

வ/ப தம்பதெனிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தம்பதெனிய, பித்தலபொல. நாரம்மல, மெட்டியகணே, கடஹபொல, குடகம்மண, ரங்கல் லேபொல. தம்பெலெனிஸ, புஸ்கொலதெணிய, பெம்முல்லேகெதர, முத்துகல, பொல்கஹயாய, மரந்தகொல்ல ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2019.08.31 வரை அடகு வைக்கப்பட்டதும் 2020.10.30ஆம் திகதி வரை மீட்கப்படாததுமான அடகுப் பொருட்கள், 2020.10.31 மற்றும் 2020.11.01 ஆகிய தினங்களில் மு.ப. 09.00 முதல் வ/ப தம்பதெனிய கூட்டுறவுச் சங்க பிரதான அலுவலகத்தில் பகிரங்க எலத்தில் விற்கப்படும்.

**பொது முகாமையாளர்,**
**வ/ப தம்பதெனிய ப.நோ.கூ. சங்கம்,**
**தம்பதெனிய,**
**தொலைபெசி இலக்கம் - 037-2266031/ 037-2266103**
**பெக்ஸ் இலக்கம் - 037-2266103**

## 111 ஷானன் இன ஆடுகள் உடனடி விற்பனைக்குண்டு



49 பெட்டைகள், 3 கடாக்கள், 38 சிறிய பெட்டைகள், 10 பெட்டைக்குட்டிகள், 11 கடாக்குட்டிகள், அனைத்தும் நன்கு வடிவமைக்கப்பட்ட ஒரு பண்ணையில் முறையாக வளர்க்கப்பட்டனவாகும். மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்படவுள்ளன.

**தொடர்புகளுக்கு**
**0112327292**

## மீட்கப்படாத அடகு தங்க ஆபரணங்களை ஏலத்தில் விற்பனை செய்தல்

வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி பொதுச் சபையின் ஈட்டு முகவர்களான வரையறுக்கப்பட்ட கினிகத்தனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கினிகத்தனை, லக்ஷபான, விதுலிபுர, பொல்பிட்டிய, வட்டவளை, மொரஹேனகம, அம்பகமுவ, ஹெப்பேகந்த போன்ற கிராமிய வங்கிகளில் 2018.10.01ஆம் திகதி முதல் 2019.03.31ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க ஆபரணங்களை 2020.11.01ஆந் திகதி மு.ப. 10.30 மணி முதல் சங்கத்தின் கூட்ட மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர்**
**வ/ப கினிகத்தனை ப.நோ.கூ. சங்கம்,**
**தலைமை அலுவலகம்,**
**கினிகத்தனை.**
**2020.10.05**

**051-2242710**
**051-2242119, 051-2242233**

## பெறுகை அறிவித்தல்

### மாணவர் விடுதிக்காக வீடுகளை குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல்

### இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் மிஹிந்தலை, சாலியபுர ஆகிய பிரதேசங்களுக்கு சமீமமாக (உரித்தான பீடத்திற்கு அருகாமையில்) மற்றும் அனுராதபுர இடப்பரப்பில் (பொது வைத்தியசாலைக்கு அருகாமையில்) மாணவர் விடுதிகளுக்காக பொருத்தமான வீடுகளை பெற்றுக் கொள்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் பெற்றுக் கொள்வார்.

பின்வரும் விபரங்களுடனான சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பமானது 2020 ஒக்ரோபர் 21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் ''பதிவாளர்'', இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை என்ற பெயருக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

1. உரித்துடமை விபரங்கள் (உறுதியின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
2. உரிமையாளரின் விபரங்கள் (பெயர், முகவரி மற்றும் தொடர்பு எண் மற்றும் (அலைபேசி மற்றும் தரைவழி)
3. மாதாந்தம் எதிர்பார்க்கப்படும் வாடகை (ரூபா)
4. தற்போதுள்ள மின்சாரம் மற்றும் நீர் (இறுதியாக பெற்றுக் கொண்ட விலைப்பட்டியல்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
5. வீட்டின் விபரங்கள் (பிரதேச அளவைப்படத்தின் கோட்டுப்படம் - Sketch - இணைக்கப்படல் வேண்டும்.
   அ. வெளியக கழிவறைகளின் எண்ணிக்கை
   ஆ. இணைக்கப்பட்ட குளியலறைகளின் எண்ணிக்கை
   இ. அறைகளின் எண்ணிக்கை.
   ஈ. இடப்பரப்பு (ச.அடி)
6. உங்கள் வீட்டிலிருந்து (குத்தகைக்கு வழங்கப்படுவது) இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கு மிகவும் அண்மையிலுள்ள பீடத்திற்கான வீதி வரைபடம்.

ஆகக் குறைந்தது 25 எண்ணிக்கையான மாணவர்களை அல்லது மேற்பட்ட தொகையை அடக்கக்கூடியதும் இணைக்கப்பட்ட குளியலறைகளின் எண்ணிக்கைகளினதும் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும். விலைமனுக்கோரல்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தயவு செய்து "**Quotation for Students Hostel**" என குறிப்பிடவும்.

2020 ஒக்ரோபர் 21 திகதியன்று பி.ப. 2.15 மணிக்கு மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் கூட்டத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலதிக விபரங்களுக்கு அல்லது தெளிவுறுத்தல்களுக்கு விலைமனுதாரர் 025-2266577 என்ற தொலைபேசி எண்ணினூடாக மாணவர் சேவைகளுக்கான உதவி பதிவாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**பதிவாளர்.**
**07.10.2020.**

சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

# ஆதார வைத்தியசாலை (போதனா) கம்பளை

## 2021ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2021ஆம் ஆண்டிற்காக இந்த வைத்தியசாலைக்கு கீழ்க்காணும் வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதன் பொருட்டு பதிவு செய்து கொள்ள விரும்பும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்தும், உற்பத்தியாளர்களிடமிருந்தும் விநியோகத்தர்களிடமிருந்தும் வழங்குநர்களிடமிருந்தும் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும் பதிவு செய்யப்பட்ட வியாபார நிறுவனங்களிலிருந்தும் மற்றும் பிரதிநிதிகளிடமிருந்தும் 2020.10.22ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**1. வழங்கல்கள்**

- i. சகல வகையான எழுது பொருட்கள், ஆவணங்கள் மற்றும் சகல அலுவலக உபகரணங்கள்.
- ii. கணனிகள் உட்பட கணனி துணைப்பாகங்கள் மற்றும் அலுவலக மின் உபகரணங்கள், துணைப்பாகங்கள்
- iii. இறப்பர் முத்திரை, திகதி முத்திரை, பெயர்ப்பலகை அறிவித்தல் பலகை
- iv. சகல அலுவலக மற்றும் வீட்டுத் தளபாடங்கள்
- v. சகல கனரகப் பொருட்கள், கட்டிட உபகரணங்கள் மற்றும் இறப்பர் கலந்த உற்பத்திப் பொருட்கள்
- vi. சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, கால்வாய் தூரிகை, மலசலகூட தூரிகை, மோப்ஸ் மற்றும் தும்பு கால் துடைப்பங்கள் போன்றவை)
- vii. சகல வகையான மின்சார உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
- viii. வாகனங்களின் டயர்கள், ரியூப்கள் மற்றும் பெட்டறிகள்
- ix. சகல வகையான காலணிகள்
- x. துப்புரவேற்பாட்டு பாவனைப் பொருட்கள் (சவர்க்காரம், சலவைத் தூள் மற்றும் திரவம், கிருமி நாசினிப் பொருட்கள், வாகனங்கள் சுத்திகரிக்கும் பொருட்கள் போன்றவை)
- xi. இழையான், நுளம்பு மற்றும் ஏனைய கிருமி நாசினிப் பொருட்கள்
- xii. நோயாளர் காவி, டிரோலி, டிரோலி சில்லுகள், சக்கர நாட்காலி, ஸ்ட்ரெசர், சேலைன் ஸ்டான்ற்கள் ஆகிய சகல வார்டுகளுக்கான உபகரணங்கள், ட்ரொலி சக்கரங்கள் போன்றனவும் அதற்கான உதிரிப்பாகங்களும்
- xiii. மருத்துவ, சத்திர சிகிச்சை மற்றும் இரசாயன கூட உபகரணங்கள், அந்த உபகரணங்களுக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்
- xiv. இரசாயனகூட உபகரணங்கள் மற்றும் அவ்வுபகரணங்களுக்கான பாவனைப் பொருட்கள்
- xv. இரசாயனகூடம், கதிர் வீச்சு, பிரிவு மற்றும் வார்டுகளில் நடவடிக்கைகளுக்குத் தேவையான இரசாயனப்பொருட்கள் (உதா: மெதிலேட்டட் ஸ்பிரிட் இரசாயன பொருட்கள்)
- xvi. சகல வகையான வைத்தியசாலை துணிகள், மெகின்டோஸ் மற்றும் ரெக்சின்
- xvii. பெரிய அளவிலான எரிவாயு அடுப்பு, பிடிச் சட்டிகள் உட்பட சமையலறை உபகரணங்கள்
- xviii. சமையல் எரிவாயு மற்றும் எரிவாயு சிலின்டர்கள்
- xix. குப்பை பைகள், பொலித்தீன் பொருட்கள்
- xx. மருந்துகள் இடும் அச்சடிக்கப்பட்ட உறைகள்
- xxi. சகல வகையான அலுமினியப் பொருட்கள்
- xxii. சகல வகையான பிளாஸ்திக் பொருட்கள்
- xxiii. சகல வகையான மட்பாண்டப் பொருட்கள்
- xxiv. சகல வகையான கண்ணாடிப் பொருட்கள்
- xxv. சகல வகையான நீர் வடிகட்டிகள்
- xxvi. மருந்துகள், கட்டுத் துணிகள், சத்திர சிகிச்சைப் பாவனைப் பொருட்கள் மற்றும் பற்சிகிச்சை பாவனைப் பொருட்களை வழங்குதல்

**2 சேவைகள்**

- i. கணனி மற்றும் இலத்திரனியல் அலுவலக உபரகண திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
- ii. அலுவலக ஆவணங்களை அச்சிடல்
- iii. சகல விதமான மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள்
- iv. வளிச் சீராக்கி, குளிரூட்டி இயந்திர திருத்தவேலை மற்றும் சேவை செய்தல்
- v. சலவை இயந்திரங்கள், உலர்த்தும் இயந்திரங்களின் திருத்தவேலை மற்றும் சேவை செய்தல்
- vi. தையல் இயந்திர திருத்தவேலை மற்றும் சேவை செய்தல்
- vii. சகல விதமான வாகனங்களுக்கான திருத்தவேலைகள், தரகவேலை மற்றும் வர்ணம் தீட்டுதல், மின் முறைமை திருத்தவேலைகள்
- viii. சகல விதமான வாகனங்களை சேவை செய்தல்
- ix. திணைக்கள (அலுவலக) அடையாள அட்டை தயாரித்தல்
- x. எரிவாயு அடுப்புகளின் திருத்தவேலைகள்
- xi. வீட்டுத் தளபாட திருத்தவேலைகள்
- xii. உரிமை கோரப்படாத சடலங்களை புதைத்தல்

**3. கொள்வனவு செய்தல்**

- i) வைத்தியசாலையிலிருந்து அகற்றப்படும் பொருட்களைக் கொள்வனவு செய்தல்

**(உதா:** கண்ணாடிப் குவளை, பிளாஸ்டிக் போத்தல், சேலைன் போத்தல், சிரட்டை, எக்ஸ்ரே படம், எக்ஸ்ரே படம் கழுவி அகற்றப்படும் திரவம், வைத்தியசாலையிலிருந்து அகற்றப்படும் பிளாஸ்டிக்/உடைந்த மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்

**அறிவுரைகளும் நிபந்தனைகளும்**

- i) ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களுக்கு வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளலாம்.
- ii) பின்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு/ ரசீதுடன் 2020-10-22ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, ஆதார வைத்தியசாலை. கம்பளை' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் கையில் கொண்டு வந்து இந்த நிறுவனத்தின் கணக்காளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் இடவும் இயலும்.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**2021ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்**
**ஆதார வைத்தியசாலை, (போதனா) - கம்பளை**

1. உற்பத்தி நிறுவனத்தின்/ வியாபாரத்தின்/ வழங்குநரின் பெயர்:
2. முகவரி:-
3. வியாபாரத்தின் தன்மை:- (தனி உரிமையாளர்/வரையறுக்கப்பட்ட நிறுவனமா என்பது)
4. தொலைபேசி இலக்கம்:- தொலைநகல் இலக்கம்:-
5. பதிவு செய்யும் இலக்கம்:-
   (எந்த வழங்கல்/ உற்பத்திக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனைக் குறிப்பிடவும்)
6. வழங்கக் கூடிய கடன் வசதிகள்:-
7. பதிவு செய்ய விரும்பும் வழங்கல்/ சேவை மற்றும் அதன் இலக்கம்:-
8. பதிவு செய்வதற்கான கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் இலக்கம்:-

வழங்கல் இலக்கம் .................. சேவை இல: .................... கொள்வனவு இலக்கம் ........................க்கு பதிவு செய்யுமாறு வேண்டிக் கொள்கிறேன். ரூபா ................ பெறுமதியான பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகின்றேன். ஏதேனும் பிழையான தகவல்கள் வழங்கப்பட்டிருப்பின் பதிவு இரத்துச் செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்படும் என்பதையும் நான் அறிவேன். இத்துடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் இணைத்துள்ளேன்.

.................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்
உத்தியோக முத்திரை.

திகதி:....................

- iii) விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்கள் பதிவு செய்தல் - 2021' என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
- iv) பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகக் குறைந்தது 06 வார கால கடன் வசதி அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
- v) வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்ட போதிலும் பதிவு செய்யப்படாத வெளி வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்கள் கோரும் உரிமை இந்த வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு உண்டென்பதுடன் காரணம் காட்டாமல் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை நிராகரிக்கும் உரிமையையும் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
- vi) தருவித்தற் கட்டளையிடப்பட்ட சகல பொருட்களும் உரிய முறையில் களஞ்சியத்துக்கு வழங்கப்பட்டதன் பின்னர் மற்றும் சேவைகள் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மட்டுமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.
- vii) கட்டணம் அறவிடப்படாமல் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படல் வேண்டும்.
- viii) விலைமனுக்கள் கோரப்பட்ட போது விலைமனுக்கள் சமர்ப்பிக்காத மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களுக்கு பொருட்களை வழங்காத நிறுவனங்கள் அபகீர்த்தியாளர் பட்டியலிலிடப்படுவர். (Black List)
- ix) ஒவ்வொரு விடயத்துக்கும் 1000.00 ரூபா மீளச்செலுத்தப்படாத பதிவுக் கட்டணமொன்றை இவ்வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் பணம் செலுத்திய பற்றுச் சீட்டு/ ரசீதுப் பத்திரத்தை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் அல்லது காசுக்கட்டளை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது
- x) பல விடயங்களுக்கு பதிவு செய்யப்படுவதாயின் ஒவ்வொரு விடயத்துக்கும் வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் வியாபரம் பதிவு செய்யப்பட்ட சான்றிதழின் பிரதியொன்றும் பதிவுக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதியொன்றும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் அனைத்தையும் ஒரே கடித உறையில் இட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
- xi) மேற்கூறப்பட்ட வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளப்படும் போது அண்மையில் வெளியிடப்பட்ட தேசிய பெறுகை முகவரகத்தின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் மீது கவனம் செலுத்தப்படும் என்பதையும் மேலும் அறிவித்துக் கொள்கிறேன்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**ஆதார வைத்தியசாலை,**
**கம்பளை.**

NSB
National Savings Bank

# விலைமனுக்களுக்கான அழைப்பு (NCB)

**விலைமனு எண்: NSB/PT/ITE/2020/14**

## தேசிய சேமிப்பு வங்கிக்கு IBM POWER 9 SERVERS WITH REPLICATION & HIGH AVAILABILITY CLUSTERS இன் வழங்கல், நிறுவல், இயங்கச் செய்தல் மற்றும் பராமரிப்பு

IBM POWER 9 SERVERS WITH REPLICATION & HIGH AVAILABILITY OCLUSTERS இன் வழங்கல், தொடர்பாக பிரசித்தி பெற்ற முதன்மையாளரான உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது இலங்கையிலுள்ள அவர்களின் தர அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து இத்தால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **பெறுகை விபரம்** | IBM Power 9 Servers with Replication & High Availability Clusters |
| **பெறுகை முறை** | தேசிய போட்டி ரீதியான விலைமனுக் கோரல் (NCB) |
| **ஏற்புடையதான மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம்** | ரூ. 14,000/= |
| **சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைமனுப் பிணையின் பெறுமதி** | ரூ. 600,000/= |
| **விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி மற்றும் நேரம்** | 2020.10.27 அன்று பி.ப. 3.30 மணிக்கு |
| **விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம்** | 2020.10.28 அன்று மு.ப. 10.00 மணிக்கு |
| **முன்னோடி விலைமனுக் கூட்டம் நடைபெறும் திகதி மற்றும் நேரம்** | 2020.10.16 அன்று பி.ப. 2.00 மணிக்கு |

1. ஒரு முகவராக அல்லது உப முகவராக, பிரதிநிதியாக அல்லது விலைமனுதாரர்கள் சார்பாக அல்லது அவருக்காக நியமனம் பெற்றவராக செயற்பட விரும்பும் எந்தவொரு நபரும் விலைமனு, ஒப்பந்தத்திற்காக விண்ணப்பிப்பதற்கு முன்னர் மற்றும் விலைமனு கையளிக்கப்பட்டதன் பின்னர் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.
2. விலைமனு ஆவணங்களை கொழும்பு-03, காலி வீதி, இல. 255, தேசிய சேமிப்பு வங்கி, வழங்கல் பிரிவு, வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒரு எழுத்துருவிலான வேண்டுதலைச் சமர்ப்பிப்பதன் மூலம் 2020.10.07 முதல் 2020.10.27 வரையான வேலை நாட்களில் மு.ப. 8.30 மற்றும் பி.ப. 3.30 இடையே விலைமனுப் படிவங்கள் வழங்கப்படும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் விலைமனு திறக்கப்படும் திகதியிலிருந்து ஆகக் குறைந்தது 91 நாட்காட்டி நாட்கள் கொண்ட காலமொன்றில் செல்லுபடியாகும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறாக உரித்தான விலைமனு பெறுமதிக்காக தேசிய சேமிப்பு வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு வங்கி உத்தரவாதம்/ வங்கிப் பிணையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் குறித்த தினத்தன்று மு.ப. 10.00 மணிக்கு மூடப்பட்டதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படுவதுடன், மு.ப. 10.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.
5. எக்காரணத்தையும் முன்வைக்காது, எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுவையும் நிராகரிக்கும் மற்றும் விலைமனுவின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமையை தேசிய சேமிப்பு வங்கியானது தன் வசம் வைத்துள்ளது.

மேலதிக விபரங்களை சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து (வழங்கல்கள்) பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், உயர்மட்டத்திலான நிறுவன பெறுகைக்குழு,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி, கொழும்பு-03.**

# இலங்கை புகையிரத சேவைகள்

## பெறுகை அறிவித்தல்

### இரு வருடங்களுக்கு மருதானை/ இறாகம/ இரத்மலான/ தெமட்டகொட ஆகிய புகையிரத களஞ்சியசாலைகளுக்கு கொழும்பு துறைமுகத்திலிருந்து/ கட்டுநாயக்க கொழும்பு சர்வதேச விமான நிலையத்திலிருந்து புகையிரத பண்டங்களை தடையகற்றப்பட்டு ஒப்படைப்பதற்காக சுங்க உட்செல்லல்கள், சுங்கம் மற்றும் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை ஆவணமாக்கல் ஆகியவற்றை தயாரித்தல் மற்றும் கட்டமைத்தலுக்கான பெறுகை

01. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் உட்செல்லல்கள், சுங்க மற்றும் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை ஆவணமாக்கல்கள், புகையிரத பண்டங்களின் தடை அகற்றப்பட்டு அவற்றை ஒப்படைப்பதற்கான தயாரித்தலுக்காக பண்டங்களின் ஒப்படைத்தல் அடங்கலாக ஆகக் குறைந்தது 10 வருடங்களுக்கு சரக்குமேடை தடை அகற்றலை கையாள்வதில் அனுபவமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுத் (உயர்மட்ட) தலைவர் பெற்றுக் கொள்வார்.

02. 2020.10.29ஆம் திகதியன்று இலங்கை நேரம் பி.ப. 2 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

03. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக இலங்கை **ரூபாவில் 3,000 ஐ (மூவாயிரம் ரூபா மாத்திரம்)** செலுத்திய பின்னர், **2020.10.28**ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு **75,000 ரூபா (எழுபத்தையாயிரம் ரூபா)** பெறுமதியான விலைமனுப்பிணையொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே புகையிரத களஞ்சியசாலைகளின் அத்தியட்சகரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,**
**ஒல்கட் மாவத்தை,**
**கொழும்பு-10.**

07. விலைமனுக்கோரல் ஆவணங்கள் புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

**தொலைபேசி இலக்கங்கள்: 2438078/2436818**
**தொலைநகல் இல.: 2432044**
**மின்னஞ்சல்: srs.slr@gmail.com**
**இணையதளம்: www.railway.gov.lk**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்**

**குறிப்பீட்டு இல.: SRS/F.7743**

LOOKING FOR TALENT?

OBSERVER JOBS
"We change your world"
SRI LANKA'S LARGEST ONLINE DATABASE
www.observerjobs.lk
To connect with us
0777 270012 / 0112 429314
email - careers@observerjobs.lk
LAKE HOUSE
Sunday Observer
OBSERVER JOBS
"We change your world"

www.adz.lk
it's what you want


BE BETTER INFORMED!

Dinamina Daily News Thinakaran

News you can trust now free on your mobile phone.

Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!




AVAILABLE AT

LAKE HOUSE

# பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2020 அக்டோபர் 27ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விட்கப்படும்.

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது

முகாமையாளர் - தங்க கடன் பிரிவு வெலிபல் பினான்ஸ்
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

**வெலிபல் பினான்ஸ்**

# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்

## அறிவித்தல்

### இரண்டாம் வருட முதலாம் பரவ கலைமாணி (வெளிவாரிப் பட்டப்படிப்பு - புதிய பாடத்திட்டம்) பரீட்சைகள் ஆரம்பம் - 2014/ 2015

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற கலைமாணி இரண்டாம் வருட முதலாம் பருவ பரீட்சைகள் எதிர்வரும் 10.10.2020ஆம் திகதி முதல் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கின்றன. இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுககு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் 067-2052801 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

**பதிவாளர்**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**
**07.10.2020**

# கேள்விக்கான அழைப்பு

## இம்புல்பே பிரதேச சபை - மொரஹெல, பலாங்கொடை

01. உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடன் திட்டத்தின் கீழ் இம்புல்பே பிரதேச சபையின் கலகம பலநோக்குக் கட்டிடத்தில் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் வேலை விடயங்களுக்கு பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2020.10.21 பி.ப. 1.30 வரை ஏற்கப்படும். கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் 2020.10.07 முதல் 2020.10.20 பி.ப. 3.00 வரை இடம் பெறுவதுடன் 2020.10.21 பி.ப. 2.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

**அட்டவணை**

| தொடர் இல. | வேலை விடயம் | மதிப்பிடப்பட்ட வேலைப் பெறுமதி ரூ. | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை ரூ. | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | இம்புல்பே பிரதேச சபைக்குச் சொந்தமான கலகம பல்நோக்குக் கட்டிடத்தின் 20 கி. வோ சோலா அமைப்பை நிறுவுதல் | 3075000.00 | 30000.00 | 4000.00 | 90 நாட்கள் |

02. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் வேலை விடயங்கள் சம்பந்தமாக நிபுணத்துவம் உடைய நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்கு தமது ஆளடையாளத்தை உறுதி செய்து மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் கட்டணங்களை செலுத்தி கேள்வி விண்ணப்பங்களை இம்புல்பே பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

03. 2020.10.21 பி.ப. 1.30 இற்கு முன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வேறு வேறு உறைகளில் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு தலைவர், இம்புல்பே பிரதேச சபை, மொரஹெல, பலாங்கொடை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலி அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலை விடயத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

04. கேள்வி மூலம் ஏற்கப்படும் விடயம் சம்பந்தமாக ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பம் இட்டு வேலையுடன் சம்பந்தப்பட்ட காலத்தை வேலையை முடித்து ஒப்படைத்தல் வேண்டும்.

05. கேள்விப் பத்திரத்துடன் கேள்விப் பிணையை சமர்ப்பிப்பதுடன் அக் கேள்விப் பிணை இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள வர்த்தக வங்கி மூலம் தலைவர், இம்புல்பே பிரதேச சபை, என்ற பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கிப் பிணையாக சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் மேற்படி கேள்விப் பிணைக் கட்டணத்தை தலைவர், இம்புல்பே பிரதேச சபையின் பெயரில் வைப்புச் செய்தல் வேண்டும். செல்லுபடியாகும் கேள்விப் பிணையுடன் தலைவர், இம்புல்பே பிரதேச சபை பெயரில் காசு வைப்புச் செய்த பற்றுச்சீட்டுடன் சமர்ப்பிக்காத எந்தக் கேள்விப் பத்திரமும் நிராகரிக்கப்படும். வேலை விடயத்துடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பிணையின் பெறுமதி மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

06. தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படமாட்டாது அத்துடன் அவை திறக்கப்படாமலேயே குறித்த கேள்விதாரருக்கு மீண்டும் ஒப்படைக்கப்படும்.

07. கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்துமூல அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

08. கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளல் பற்றிய மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் இவ் அலுவலகத்தில் தொ.பே. இல. 045-2287361ஐ அழைத்து அறியலாம்.

09. கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் இம்புல்பே பிரதேச சபைக்கு உரியது.

**எஸ்.ஜீ.வி.ஏ. ஶ்ரீலால் செனரத்**
**தலைவர்**
**இம்புல்பே பிரதேச சபை**
**மொரஹெல, பலாங்கொடை**

Repeat Your ad For Better Offers

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை – சிலாபம்

01. கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணிப்புகள் தொடர்பாக நியமனம் பெற்ற விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுப் பத்திரங்கள், மாவட்ட பொது வைத்தியசாலை பிரதேச பெறுகைக்குழுத் தலைவரினால் பொறுப்பேற்கப்படும். நிர்மாணிப்பு வேலைகள் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் நிர்மாணிப்புக் காலம் என்பன அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை பின்பற்றப்படும்.

03. ஒப்பந்தம் கையளிக்கப்படுவதற்காக தெரிவு செய்யப்படும் விலைமனுதாரர், நிர்மாணிப்புப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரமொன்றிற்காக பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. இது தொடர்பான மேலதிக விபரங்களை மாவட்ட பொது வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ள முடிவதுடன், விலைமனு ஆவணங்களை சாதாரண வேலை நேரங்களில் மாவட்ட பொது வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. 2020.10.07 முதல் 2020.10.28 வரையான எந்தவொரு அலுவலக தினங்களிலும் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்ததன் பின்னர் விலைமனு சமர்ப்பிக்கப்படும் ஆவணத்தை மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

06. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை, சிலாபம் என்ற முகவரிக்கு 2020.10.29 அன்று மு.ப. 10.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் பொறுப்பேற்கப்படுவது முடிவடைந்தவுடன் உடனடியாக அவ்விடத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமுள்ள பிரதிநிதிகள் முன்னிலையில் அவை திறக்கப்படும். பெறுகைச் சபையின் தீர்மானமே இறுதித் தீமானமாக அமையும்.

| உருப்படி | நிர்மாணிப்பு தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில்லியன்) | விலைமனுப் பிணை ரூ. | ஒப்பந்தக் காலம் | ஆகக் குறைந்த பதிவு | மீளளிக்கப்படாத தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| வோர்ட் இலக்கம் 15 சமீபமாக கழிவறைக் கழிவை எடுத்துச் செல்லும் களி பம்பியொன்றை நிறுவுதல் | 1.9 | 28,000.00 | 35 நாட்கள் | C9 | 2,000.00 |
| குளிரூட்டியொன்றை ஸ்தாபிப்பதற்காக கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 2.96 | 45,000.00 | 63 நாட்கள் | C8 | 3,000.00 |
| இருதய நோய் சிகிச்சைப் பிரிவை விரிவுபடுத்தி அமைத்தல் | 2.2 | 25,000.00 | 35 நாட்கள் | C7 | 2,000.00 |
| இரத்த ஊடுபகுப்பு பிரிவை விரிவுபடுத்தி அமைத்தல் | 3.1 | 31,000.00 | 63 நாட்கள் | C7 | 2,000.00 |
| மருத்துவ வளங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்தி அமைத்தல் | 5.1 | 51,000.00 | 70 நாட்கள் | C6 | 2,500.00 |

**தலைவர், பிரதேச பெறுகைக்குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, சிலாபம்**

# இலங்கை அரசாங்கம்

## நீர் வழங்கல் அமைச்சு

## நீர் வழங்கல் மற்றும் சுகாதார துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்

**Credit No.: Cr.5685-lk**

## விலைமனு அறிவித்தல்

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையிலிருந்து நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழே வழங்கியுள்ள ஒப்பந்தங்களின் பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. கீழே விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகுதியும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது கோருகின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரு) | தேவைப்படுத்தப்படும் விலைமனுப் பிணை (ரு) | தகுதித் தேவைப்படுத்தல்கள் | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| **செயற்றிட்ட பெறுகைக்குழு (உயர் மட்டம்)** | | | | | |
| **வேலைகளுக்கான கேள்விகள்** | | | | | |
| கேகாலை மாவட்டத்தில் தெரணியகல DSD இல் RWSS இன் புதுப்பித்தல். 1 ஆம் கட்டம். **ஒப்பந்த இல.: MWS/WaSSIP/Kegalle/ Deraniyagala/RE/Stage-01/2019/12** | 12,500 ரூபா | 948,000 ரூபா | CIDA (ICTAD) உடன் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையில் சி-4 அல்லது மேற்பட்ட தர பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் இலங்கை அரசாங்கத்தின் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் மற்றும் பின்னரான வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018.10.16ஆம் திகதியிடப்பட்ட சிலோன் டெயிலி நியுஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம். | செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு, நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம் இல. 230, ஈ.டபிள்யு. பெரேரா மாவத்தை, ஜுபிலி தூண், நுகேகொட. தொலைபேசி/தொலைநகல்: 011-2890943/ 011-2890941 | **2020 நவம்பர் 04ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு** |
| கேகாலை மாவட்டத்தில் கடிகமுவ கிராமிய நீர் வழங்கல் திட்ட நிர்மாணம். **ஒப்பந்த இல.: MWS/WaSSIP/Kegalle/ Galigamuwa/NEW/Kadigamuwa/2018/81.** | 20,000 ரூபா | 1,632,000 ரூபா | CIDA (ICTAD) உடன் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையில் சி-4 அல்லது மேற்பட்ட தர பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் இலங்கை அரசாங்கத்தின் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் மற்றும் பின்னரான வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018.10.16ஆம் திகதியிடப்பட்ட சிலோன் டெயிலி நியுஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம். | செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு, நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம் இல. 230, ஈ.டபிள்யு. பெரேரா மாவத்தை, ஜுபிலி தூண், நுகேகொட. தொலைபேசி/தொலைநகல்: 011-2890943/ 011-2890941 | **2020 நவம்பர் 04ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு** |
| பதுளை மாவட்டத்தில் வெலிமட DSD இல் கந்தேபுஹுல்பொல கிராமிய நீர் வழங்கல் திட்ட புதுப்பித்தல். **ஒப்பந்த இல.: MWS/WaSSIP/Badulla/ Welimada/RE/Kandepuhulpola/2019/04** | 12,500 ரூபா | 623,500 ரூபா | CIDA (ICTAD) உடன் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையில் சி-4 அல்லது மேற்பட்ட தர பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் இலங்கை அரசாங்கத்தின் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் மற்றும் பின்னரான வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018.10.16ஆம் திகதியிடப்பட்ட சிலோன் டெயிலி நியுஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம். | செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு, நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம் இல. 230, ஈ.டபிள்யு. பெரேரா மாவத்தை, ஜுபிலி தூண், நுகேகொட. தொலைபேசி/தொலைநகல்: 011-2890943/ 011-2890941 | **2020 நவம்பர் 05ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு** |
| பதுளை மாவட்டத்தில் தம்பண பிரதேசத்தில் கழிவறையின் நிர்மாணம் - V ஆம் கட்டம். **ஒப்பந்த இல.: MCPWS/WaSSIP//Badulla/ SA/Dambana-Stage V/2018/95R** | 3,500 ரூபா | 219,000 ரூபா | CIDA (ICTAD) உடன் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையில் சி-4 அல்லது மேற்பட்ட தர பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் இலங்கை அரசாங்கத்தின் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் மற்றும் பின்னரான வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018.10.16ஆம் திகதியிடப்பட்ட சிலோன் டெயிலி நியுஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம். | செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு, நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம் இல. 230, ஈ.டபிள்யு. பெரேரா மாவத்தை, ஜுபிலி தூண், நுகேகொட. தொலைபேசி/தொலைநகல்: 011-2890943/ 011-2890941 | **2020 நவம்பர் 05ஆம் திகதியன்று மதியம் 12 மணிக்கு** |

3. விண்ணப்பதாரின் தலைப்புக் கடிதத்தில் ஆவணங்களுக்கான எழுத்து மூலமான விண்ணப்பக் கடிதமொன்றை செயற்றிட்ட பணிப்பாளருக்கு சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.
4. மூடும் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டத்திடமிருந்து பெற்று சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்களை வழங்குமிடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
6. விலைமனுக்கள் மேலேயுள்ள முகவரியில் ஒன்றில் நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம் அல்லது அதே முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது தூதஞ்சல் சேவையில் அனுப்பப்படலாம்.
7. அனைத்து விலைமனுக்களும் அதே முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடியதும் விரைவாகவே திறக்கப்படும். **தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.**

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்.**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்.**
**சமூக நீர் திட்டத்தில் சிக்கல் இருப்பின், 1914 என்ற இலக்கத்தை அழைக்கவும்.**

நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

# விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள்/ வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக்குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவை யான விலைமனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பிடப் படும் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01) நாயபெத்த நீர் வழங்கல் திட்டத்தின் விநியோக முறைமையில் HDPE/DI குழாய்களைப் பதித்தல்<br>**ஒப்பந்த இல. RSC(U)/DGM(U)/CB-ACP/NAYABEDDA/2020/174** | 12,500/-+VAT ** | ரூபா 607,500/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 மற்றும் C4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 40.5 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தப் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை. Tele: 011-2605328 Fax: 011-2635885 | 28/10/2020 மு.ப. 10.00 மணி |
| 02) பொலன்னறுவை பிராந்தியத்திற்கு uPVC/DI குழாய்கள், பொருத்திகள் மற்றும் விசேடங்களைப் பதித்தல்<br>**ஒப்பந்த இல CKD/NC/DGM/POL/LAYING/2020/280** | 6,000/-+VAT ** | ரூபா 98,990/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7 மற்றும் C6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 6.60 மில்லியன் | பி.ஓ.நி. (வடமத்தி), கொடகே மாவத்தை, அனுராதபுரம். Tele : 025-2235993 Fax: 025-2225609 | 21/10/2020 பி.ப. 2.00 மணி |
| 03) கேகாலை பிராந்தியத்திலுள்ள கலிகமுவ நீர் வழங்கல் திட்டத்தின் துரிதப்படுத்தப்பட்ட இணைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு புதிய இணைப்புகளை வழங்குதல்<br>**ஒப்பந்த இல. RSC(SAB)/AGM(KEG)/A.C.P./ GALIGAMUWA/SER/2020/18** | 6,000/-+VAT ** | ரூபா 100,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7 மற்றும் C6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 8.75 மில்லியன் | பி.ஓ.நி. (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி. Tele: 045-2228274-6 Fax : 045-2228273 | 21/10/2020 பி.ப. 2.00 மணி |
| 04) பிஓறி மத்திய கட்டிடத்திலுள்ள மின்னுயர்த்தியை உயர்த்துவதற்கு RSC ஆதார கட்டமைப்பை நிர்மாணித்தல்.<br>**ஒப்பந்த இல. RSC-C/P&D/CIVIL/REH/RSC/2020/188R** | 4,000/-+VAT | ரூபா . 50,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C7 மற்றும் C8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு | 4.1 மில்லியன் | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 உதவிப் பொது முகாமையாளர் (RSC-C) அலுவலகத்தில் 2020-10-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும். | 21/10/2020 பி.ப. 2.00 மணி |
| 05) ஓமந்தை நீர் வழங்கல் திட்டத்தின் பிரதான விநியோகத்திற்கு uPVC, DI குழாய்கள், பொருத்திகள், வால்வுகள் மற்றும் விசேடங்களைப் பதித்தல் - கட்டம் 1<br>**ஒப்பந்த இல. RSC/N/DGM/RH/LAY/ OMAN-PH 1/2020/059** | 6,000/-+VAT ** | ரூபா 100,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7 மற்றும் C6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 9.9 மில்லியன் | பி.ஓ.நி. (வடக்கு), தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2225719 Fax:024-2225088 | 28/10/2020 பி.ப. 2.00 மணி |
| **M&E கேள்விகள்** | | | | | | |
| 06) கம்பஹா பிராந்தியத்திலுள்ள ரத்தொழுகம நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் (பழைய மற்றும் புதிய) குளோரினேட்டர் முறைமையின் திருத்தவேலைக்குத் தேவையான துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>**ஒப்பந்த இல. RSC(W/N)/M&E/GAM(RH)/2020/45** | 2,000/-+VAT | ரூபா 28,380/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலைய (மே/வ) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை, Tele: 0112922129 Fax: 0112922146 | 21/10/2020 மு.ப. 10.00 மணி |
| 07) பொலன்னறுவை நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் தற்போதுள்ள குளோரினேட்டர் முறைமைக்கு குளோரினேட்டர் உதிரிப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்<br>**ஒப்பந்த இல. O&M/NC/DGM/SUP/POL/2020/233** | 2,000/-+VAT | ரூபா 26,510/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பி.ஓ.நி. (வடமத்தி), கொடகே மாவத்தை, அனுராதபுரம். Tele : 025-2235993 Fax: 025-2225609 | 21/10/2020 பி.ப. 2.00 மணி |
| 08) கலேவெல நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் தற்போதுள்ள குளோரினேட்டர் முறைமைக்கு குளோரினேட்டர் உதிரிப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்<br>**ஒப்பந்த இல. O&M/NC/DGM/SUP/2020/232** | 4,000/-+VAT | ரூபா 37,750/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பி.ஓ.நி. (வடமத்தி), கொடகே மாவத்தை, அனுராதபுரம். Tele : 025-2235993 Fax: 025-2225609 | 21/10/2020 பி.ப. 2.00 மணி |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 09) 1,600 தொன் பொலி அலுமினியம் குளோரைட்டை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல. SUP&MM/CHEM/PAC-02/2020/16** | 35,000/-+VAT ** | ரூபா 1,900,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தப் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை. Tele: 011-2605328 Fax: 011-2635885 | 28/10/2020 மு.ப. 10.00 மணி |
| 10) 50,000 எண்ணிக்கையான 15mm (1/2") Gunmetal Ferruleகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல. SUP&MM/GF-03/2019/09R** | 20,000/-+VAT ** | ரூபா 1,170,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தப் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை. Tele: 011-2605328 Fax: 011-2635885 | 28/10/2020 மு.ப. 10.00 மணி |
| 11) அம்பாறை - கொண்டுவட்டுவான நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கு வண்டல்களை கையாளும் பொலிமரை (Sludge Handling Polymer ) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல. RSC(E)/AGM(ES)/S&D/POLYMER/ KWTP/O&M/ AMP/2020/53** | 4,000/-+VAT | ரூபா 72,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | உதவிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், தேநீவவச, ஸ்ரீ தர்மரத்ன மாவத்தை, அம்பாறை. Tele 063-2223926 Fax :063-2224975 | 21/10/2020 மு.ப. 10.00 மணி |
| 12) பொலன்னறுவை பிராந்திய ஆய்வுகூடத்திற்கு கண்ணடிப் பொருட்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல்<br>**ஒப்பந்த இல. O&M/NC/DGM//SUP/LAB-POL/2020/267** | 2,000/-+VAT | ரூபா 14,200/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பி.ஓ.நி. (வடமத்தி), கொடகே மாவத்தை, அனுராதபுரம். Tele : 025-2235993 Fax: 025-2225609 | 21/10/2020 பி.ப. 2.00 மணி |
| 13) அனுராதபுரம் - பிராந்திய ஆய்வுகூடத்திற்கு ஆய்வுகூட இரசாயனங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல.. O&M/NC/DGM/ANU/R-LAB/ CHEM/2020/272** | 2,000/-+VAT | ரூபா 18,640/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பி.ஓ.நி. (வடமத்தி), கொடகே மாவத்தை, அனுராதபுரம். Tele : 025-2235993 Fax: 025-2225609 | 21/10/2020 பி.ப. 2.00 மணி |
| 14) வவுனியா நீர் வழங்கல் திட்டத்திற்கு Borehole type Submersible பம்பித் தொகுதி மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல. RSC/N/DGM/RH/PUMP/VAV/2020/058** | 2,000/-+VAT | ரூபா 25,200/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பி.ஓ.நி. (வடக்கு), தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2225719 Fax:024-2225088 | 28/10/2020 பி.ப. 2.00 மணி |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 15) அம்பத்தலை நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் இலத்திரனியல் பிரிவுக்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>**ஒப்பந்த இல. RPC/WP/S/AMB/M&E/O&M/2020/26** | 2,000/-+VAT | ரூபா 17,800/- | வாகன உரிமையாளர்கள் / வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | | பி.ஓ.நி. (மேற்கு – உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம். Tele:0112418532 Fax:0112549199 | 28/10/2020 பி.ப. 2.00 மணி |
| 16) (NW) பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திற்கு 03 எண்ணிக்கையான வேன்களை வாடகைக்கமர்த்துதல்<br>**ஒப்பந்த இல. RSC(NW)/E&M/O&M/AGM'S OFF/2020/51** | 4,000/-+VAT | ரூபா 10,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஓ.நி. (வடக்கு - மேற்கு) அலுவலகம், தேநீவவச, தம்புல்ல வீதி, குருநாகல். Tele: 037-2221161 Fax : 037-2230086 | 28/10/2020 பி.ப. 2.00 மணி |
| 17) நீர் வழங்கல் திட்டங்களுக்கு இலகுரக லொறி மற்றும் குருநாகல் முகாமையாளர் அலுவலகத்திற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>**ஒப்பந்த இல. RSC(NW)/O&M/HV/O&M/KURU.MANA-OFF/2020/50** | 4,000/-+VAT | ஒரு லொறிக்கு ரூபா 7,000/- ஒரு வேனுக்கு ரூபா 8,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஓ.நி. (வடக்கு - மேற்கு) அலுவலகம், தேநீவவச, தம்புல்ல வீதி, குருநாகல். Tele: 037-2221161 Fax : 037-2230086 | 28/10/2020 பி.ப. 2.00 மணி |
| 18) அனுராதபுரம் RSC (NC) அலுவலகத்திற்கு வாகனம் (வேன்) ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>**ஒப்பந்த இல. RSC/NC/DGM/HV/VAN/2020/230** | 2,000/-+VAT | ரூபா 25,000/- | போக்குவரத்து சேவை வழங்குநர்கள்/ வாகன உரிமையாளர்கள் | | பி.ஓ.நி. (வடமத்தி), கொடகே மாவத்தை, அனுராதபுரம். Tele : 025-2235993 Fax: 025-2225609 | 21/10/2020 பி.ப. 2.00 மணி |
| **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 19) கெதன நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி மற்றும் உள்ளீர்ப்பு வளவுக்கான சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குதல்<br>**ஒப்பந்த இல. RPC/WP/S/KET/CIVIL/O&M/2020/27** | 4,000/-+VAT | ரூபா 33,000/- | இதனையொத்த சேவைகள் வழங்குவதில் அனுபவமுள்ள நிறுவனங்கள் | | பி.ஓ.நி. (மேற்கு – உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம். Tele:0112418532 Fax:0112549199 கெதன WTP அலுவலகத்தில் 2020-10-21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும். | 28/10/2020 பி.ப. 2.00 மணி |
| 20) சப்ரகமுவ பிராந்தியத்தின் தேர்ச்சியுள்ள/ தேர்ச்சியற்ற தொழிலாளர்களுக்கான Rate Quotation வழங்குதல்<br>**ஒப்பந்த இல. RSC(SAB)/O&M/RA & KEG/SER/2020/24** | 6,000/-+VAT ** | ரூபா 15,000/- | இதனையொத்த சேவைகள் வழங்குவதில் 3 வருட கால அனுபவம் அத்துடன் EPF/ETF பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | | பி.ஓ.நி. (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி. Tele: 045-2228274-6 Fax : 045-2228273 | 21/10/2020 பி.ப. 2.00 மணி |
| **இணையத்தள அபிவிருத்தி மற்றும் மொபைல் பிரயோகங்கள் (WEBSITE DEVELOPING & MOBILE APPS)** | | | | | | |
| 21) நீர் தொழில்நுட்பத்திற்கான சீன இலங்கை இணைந்த ஆராய்ச்சி மற்றும் செயல்விளக்க நிலையத்திற்கு (JRDC) தொழில்சார் இணையதளம் மற்றும் Mobile Apps என்பவற்றை அபிவிருத்தி செய்தல்.<br>**ஒப்பந்த இல. RSC-C/CIVIL/CSLRGP/2020/212R** | 4,000/-+VAT | ரூபா 45,000/- | தொழில்சார் இணையதள அபிவிருத்தி மற்றும் மொபைல் பிரயோகங்கள் (Developing a Professional Website and the Mobile apps) | | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 | 21/10/2020 பி.ப. 2.00 மணி |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள www.drc.gov.lk இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

Sunday Observer adZ it's what you want
தினகரன் வாரமஞ்சரி
ලුහුඬු දැන්වීමක් සඳහා නවතම ගාස්තු... (වචන 15ක් සඳහා)
රු. 300/- රු. 500/- රු. 650/-
ඔබගේ ලුහුඬු දැන්වීම් ලඟම ඇති අපගේ ශාඛා කාර්යාලය වෙත භාරදෙන්න
අනුරාධපුර - TEL : 025 2222370 FAX : 025 2235411 / මහනුවර - TEL : 081 2234200 FAX : 081 2238910
කතරගම - TEL : 047 2235291 FAX : 047 2235291 / මරදාන - TEL : 011 2429336 FAX : 011 2429335
මාතර - TEL : 041 2235412 FAX : 041 2229728 / නුගේගොඩ - TEL : 011 2828114 FAX : 011 4300860 / යාපනය - TEL : 021 2225361 FAX : 021 2225361

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஒக்டோபர் மாதம் 7ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.